
ராணி
முத்து
உமா பாலகுமார்
ரூ.6
உயிர்க்காற்றே
உருகாதே

# 35 வயதில் "புக்கர்" பரிசு!

உலக அளவில் மிக உயரிய விருதுகளில் ஒன்றான 'புக்கர்' பரிசு இந்திய எழுத்தாளர்களுக்கு அபூர்வமாய் கிடைக்கும். இந்த ஆண்டு கிரண் தேசாய் என்ற பெண்மணிக்கு இந்தப் பரிசு கிடைத்துள்ளது. 35 வயதே ஆன கிரண் தேசாய், டெல்லியில் பிறந்தவர், அமெரிக்காவில் வசிக்கிறார்.




கிரண் தேசாய்

இவர் எழுதிய இரண்டாவது நாவலுக்கே இந்தப் பெருமைமிகு விருது கிடைத்துவிட்டது. பரிசு பெற்ற புத்தகத்தின் பெயர் "தி இன்கெரிட்டன்ஸ் ஆப் லாஸ்" இந்தப் புத்தகத்துக்குக் கிடைத்த பரிசுத் தொகை இந்திய மதிப்பில் ரூ. 43 லட்சம் ஆகும்.

கிரண் தேசாயின் தாயார் அனிதா தேசாய். இவரும் எழுத்தாளரே! புக்கர் பரிசுக்காக இவர் 3 முறை விண்ணப்பித்து, தோல்வியை தழுவியவர். "தன் மகள் மூலம் இப்போது தன் ஆசை நிறைவேறியுள்ளது" என்று பெருமைப்படுகிறார்.

இந்தியாவைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் அருந்ததி ராய் 1997-ம் ஆண்டு "புக்கர் பரிசு" பெற்றார். புக்கர் பரிசு பெற்ற இரண்டாவது இந்தியர், மிக இளவயதில் இப்பரிசை வென்ற எழுத்தாளர் என்ற பெருமைகள் கிரண் தேசாய்க்கு கிடைத்து உள்ளன.



# உயிர்க்காற்றே உருகாதே

## உமா பாலகுமார்



## 1

வானில் நட்சத்திரங்கள், இரவுக்குக் கட்டியம் கூறிக் கொண்டிருந்தன. தோட்டத்தில் உதிர்ந்து கிடந்த பவளமல்லி மலர்களின்மேல், நிலா வெளிச்சம் தங்கநிறச் சாயம் பூசி இருந்தது. அது, பூமியில் பவளமும், முத்துகளும், சிதறிக் கிடப்பது போன்ற மாயையைத் தோற்றுவித்தது.

ஆகாய தடாகத்தில் பூத்த மஞ்சள் மலராய் நிலவு! காற்றுக்கு யாரோ சாணை பிடித்தது போல், மின்மினிகள்! ஜன்னலின் வழியே, வருடலாய் உள்ளே நுழைந்த சில்லென்ற பனிக்காற்று, மதுமிதாவின் கூந்தலை வருடியது.

ஏனோ, மதுமிதாவுக்கு, இன்று இயற்கையின் இனிமை இதம் தர மறுத்தது. அவள் மனம் மலரும் நினைவு

களுடன் பின்னோக்கி சென்றது. துணையாய், தூரத்து ஞாபகங்கள்!

அவளுடைய பாட்டி இருந்தவரை, மதுவுக்கு எந்தவிதக் கவலையும் இருந்ததில்லை. சிறுவயதிலே பெற்றோரை இழந்த மதுவுக்கு, பாட்டிதான் எல்லாமுமாக இருந்தார். அவளை வளர்த்து, படிக்க வைத்ததெல்லாம், மதுவின் தாய்வழிப் பாட்டி மரகதம்தான்.

மதுமிதா கல்லூரிப் படிப்பையும், துணைப் படிப்பையும் முடித்துவிட்டு, தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தாள். மது, அவளுடைய அம்மா மாதிரியே அழகு! ஐந்தரை அடி உயரத்தில், ரோஜா நிறத்தில், பேசும் விழிகளுடன், இடைவரை அலைபாயும் கூந்தலுடன், பிரமிக்க வைக்கும் அழகுடன் இருந்தாள்.

அவளுடைய தாய் இறந்தவுடன், தந்தையும் இறந்துவிடவே, பாட்டியால் வளர்க்கப்பட்டவள், அவள். அவளது தாயின் புகைப்படம் மட்டுமே, உறவுக்கு சாட்சியாகப் பாட்டியிடம் இருந்தது. தந்தையின் புகைப்படத்தைக்கூட அவள் பார்த்ததில்லை.

பாட்டி இறப்பதற்கு முன்புதான், அந்த அதிர்ச்சியூட்டும் செய்தியே அவளுக்குத் தெரியவந்தது. அதுவும், தன் தந்தை உயிரோடுதான் இருக்கிறார் என்று அறிந்தபோது, மனம் ரணப்பட்டுப்போனது.

அன்று, பாட்டிக்கு உதவி செய்ய அமர்த்தப்பட்டு இருந்த காஞ்சனாதான் அலுவலகத்துக்குத் தொலைபேசியில் அழைத்தாள். மதுவிடம், "பாட்டிக்கு ரொம்ப முடியலை, மதும்மா! நீங்க உடனே கிளம்பி வர்றீங்களா?" என்றாள், பதற்றத்துடன்.

"நான் உடனே வர்றேன்" என்று கூறிவிட்டு, மருத்துவருக்குத் தொலைபேசியில் விபரம் தெரிவித்தாள், மது. அலுவலகத்திற்கு, அவசரமாக விடுப்பு சொல்லிவிட்டு வீட்டுக்குச் சென்றாள். வழிநெடுக 'எனக்கு இருக்கும் ஒரே துணையையும் பறித்து விடாதே இறைவா' என்று மனம் கெஞ்சியது. வீட்டுக்குச் சென்றபோது, பாட்டி படுக்கையில் அமர்ந்து கஞ்சி சாப்பிட்டுக் கொண்டிருந்தார். மருத்துவர் வந்து பரிசோதித்துவிட்டுச் சென்றிருந்தார்.



பாட்டி சாப்பிட்டு முடிக்கும்வரை அமைதியாக இருந்த மது, "ஏன் பாட்டி? பொய் சொல்லி என்னை வரச்சொல்கிற அளவுக்கு இப்ப என்ன அவசரம்?" என்று கேட்டாள். வேலையைப் பாதியில் விட்டுவிட்டு வந்த எரிச்சல் தெரிந்தது, அவள் கேள்வியில்!

"பொய் சொல்லலைடா மது! படபடன்னு, ஒரு மாதிரி மயக்கம் வர்ற மாதிரி தெரிந்தது. லேசா நெஞ்சு வலிக்கிற மாதிரி வேறு இருந்தது. அதான்! இப்ப உன்கிட்ட நான் ஒரு முக்கிய மான விசயம் பேசணும்" என்றார், பாட்டி சோர்வுடன்.

"என்ன பாட்டி... அப்படிப்பட்ட முக்கியமான விசயம்? இப்பவே உடனே சொல்ற அளவுக்கு?" கேட்டுக்கொண்டே, பாட்டியின் அருகில் சென்று வாஞ்சையுடன் அமர்ந்தாள், மது.

சிறிது நேரம் அமைதியாக இருந்த பாட்டியம்மா நிமிர்ந்து, "மது! நான் சொல்லப்போகிற விசயத்தைக் கேட்டுட்டு, நீ என்னைத் தப்பா நினைக்கக்கூடாது. வெறுத்துடவும் கூடாது. சரியாடா?" என்று பலத்த பீடிகையுடன் ஆரம்பித்தார்.

இவள் தலையாட்டினாள்.

"மதுக்குட்டி! உன் அம்மா, உங்க அப்பாவைக் காதலிச்சிக் கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போனாள்ன்னு சொல்லி இருக்கேன், இல்லையா? அதுக்கப்புறம் நான், அவளை என் வீட்டுக்குள் வரவே விடலை. அப்பப் போனவளை, உன்னை உண்டாகி இருக்காள்ன்னு தெரிஞ்சதுக்கப்புறம்தான், வீட்டுக்கு அழைச்சுட்டு வந்தேன். எனக்கு உன் அப்பாவைக் கண்டா சுத்தமா பிடிக்கலை.

என் பொண்ணை என்கிட்டே இருந்து பிரிச்ச ஒரு வில்லனாத்தான் அவரை நான் பார்த்தேன். வீட்டோட மாப்பிள்ளையாகப் பார்த்து, உன் அம்மாவை என் கூடவே வச்சிக்கணும்னு நான் நினைச்சிட்டு இருந்ததெல்லாம் கனவாகிப்போச்சு. எனக்கிருந்த ஒரே துணையையும் பிரிச்சிட்டுப்போன உங்க அப்பா மேலே, எனக்கு அப்போ தாங்கமுடியாத வெறுப்பு!" என்று கூறியவர், மூச்சுவாங்கவும் நிறுத்தினார்.

"பாட்டி! பேசாம ஓய்வெடுத்துக்கங்க... அப்புறமா எல்லாம் பேசலாம்" என்றாள், மது... கவலையாக.

பாட்டி குறுக்கிட்டார்– "இல்லடா... இன்னிக்கு நான்

பேசியாகணும். இல்லைன்னா, அப்புறம் எப்பவுமே பேசமுடியாமப் போயிடுமோன்னு எனக்கு பயமா இருக்கு. தலைப் பிரசவத்துக்காக இங்கே வந்த உன் அம்மா, நீ பிறந்த உடனே இறந்துட்டா! அந்தச் செய்தி கேட்டு உன் அப்பா பெங்களூரில் இருந்து வர்றதுக்குள் இங்கே நான் என் பொண்ணோட ஈமச்சடங்குகளை முடிச்சிட்டேன். அவர் வந்து அழுதப்பகூட, என் பொண்ணை படாபழியா என்கிட்டே இருந்து பிரிச்சிட்டதா சத்தம் போட்டேன்."

பழைய நினைவுகளில் அவர் கண்கள் கலங்கின.

தன்னை சமாதானப்படுத்திக்கொண்டு நிமிர்ந்தவர், "உன்னைப் பத்தி உங்கப்பா கேட்டப்போ, நீயும் பிரசவத்துல இறந்துட்டதா நான் பொய் சொன்னேன். உன் அப்பா, அப்படியே ஆடிப் போயிட்டார். அன்னிக்குப் போன மனுசன்தான்! அதுக்கப்புறம், அவரைப் பத்தி எனக்கு ஒண்ணுமே தெரியாது. அன்னிக்கு உங்கப்பா போனதும், என் தம்பி வீட்டில் இருந்த உன்னை அழைச்சிட்டு, எங்க சொந்த வீட்டையும் வித்துட்டு நான் இங்கே வந்துட்டேன். அவங்க ரெண்டு பேரும் வாழ்ந்ததே, ஒரு ஆறேழு மாசம்தான் இருக்கும். உங்கம்மா விரும்பின மாதிரி, உனக்கு மதுமிதான்னு பேர் வச்சேன்" என்று நிறுத்தினார்.

மூதாட்டியின் கண்கள், இளையவளையே கலக்கத்துடன் நோக்கின.

மதுவின் மனம், இனம்புரியாத வேதனையில் படபடத்தது. ஒரு பெருமூச்சுடன் பாட்டியம்மா தொடர்ந்தார்.

"உங்க அப்பா உயிரோடுதான் இருக்கார், மது! 'ராஜ்' ஓட்டல்கள் பத்தி நீ கேள்விப்பட்டிருப்பியே? பெரிய நட்சத்திர ஓட்டல் ஒண்ணு, இங்கே சென்னையில் இருக்கு. அந்தக் குடும்பத்து வாரிசுதான் உன் அப்பா!" என்று நிறுத்திவிட்டு தண்ணீரை எடுத்துப் பருகிவிட்டு, தொடர்ந்தார்.

"உன் அப்பா, வீட்டில் ஒரே பையன்னு உங்க அம்மா சொல்லிக் கேட்டிருக்கேன். பெங்களூரிலே பெரிய பணக்காரக் குடும்பம் அவங்களோடது. இங்கே அவரோட தொழில் நிறுவனம்கூட ஒண்ணு இருக்குன்னு நான் கேள்விப் பட்டிருக்கேன். அதனால்தான், நான் செங்கல்பட்டுல இருந்து சென்னைக்கு வந்தேன். இத்தனை நாள், உன் அப்பாகிட்டே



இருந்து உன்னைப் பிரிச்சிட்டேன்னு என்மேல வருத்தமாடா மது! என்னை வெறுத்துடாதேடா!" என்று அவள் கையைப் பிடித்தபடி, பாட்டி கெஞ்சலாகக் கேட்டபோது, ஏனோ கண்ணோரம் நீர் கசிந்து, அழுகையாக வந்தது, மதுவுக்கு!

அப்படியே பாட்டியை அணைத்துக்கொண்டவள், "உங்களை எப்படி என்னாலே வெறுக்க முடியும் பாட்டியம்மா? ஆனா, நீங்க அப்பாவைப் பத்தி முன்னாடியே என்கிட்டே சொல்லி இருக்கலாமே! அவரோட ஒரு படத்தைக்கூட நீங்க என்கிட்ட காண்பிச்சதில்லையே?" என்று ஆதங்கத்துடன் கேட்டாள்.

முகம் தெரியாத அந்தத் தந்தையின்மேல் மனதினுள் ஒரு பாச விதை ஆழமாய் விழுந்து துளிர்க்க ஆரம்பித்தது. பாட்டி தர்மசங்கடத்துடன் தொடர்ந்தார்.

"உன் அப்பாவைப் பத்தி உன்கிட்ட சொன்னா, என்னைத் தனியா விட்டுட்டு, அவரோடு நீ போயிடுவியோங்கிற பயம் தான்டா என்னைத் தடுத்தது. உங்க அப்பாவுக்காவது அவங்க குடும்பம் இருந்திருக்கும். எனக்கு? உங்க அம்மாவும் போன பிறகு, உன்னைவிட்டா யார் இருக்கா? ஆனா, இப்ப ஏன் சொல்றேன்னு கேக்கிறியா? எனக்குப் பிறகு, நீ அநாதையா நிக்கிறதை நான் விரும்பலைடா. நான் ரொம்ப நாள் இருக்க மாட்டேன்னு தோணுது. எனக்கு அப்புறம், நீ உன் அப்பாகிட்ட போயிடுடா, மது!" என்றார், கண்கள் கலங்க.

மதுவின் தலையைப் பாசமாக வருடிய மரகதம்மாள், "உன் அறையில் உள்ள பீரோவில் ஒரு தந்தப் பெட்டி இருக்கும் பாரு. அதை எடுத்துட்டு வா" என்றார்.

வேகமாகச் சென்று, அந்தப் பெட்டியை எடுத்து வந்து பாட்டியிடம் கொடுத்தாள், மது.

"அதைத் திறந்து பாரு மது!" என்று பாட்டி கூறவும், திறந்து பார்த்தாள்.

உள்ளே அம்மாவின் திருமண பதிவு சான்றிதழ், புகைப் படங்கள், மதுவின் பிறப்புச் சான்றிதழ் எல்லாமே இருந்தன.

இதுவரை, தான் ஒருமுறைகூடப் பார்த்திராத தன் தந்தையை, முதன்முதலாகப் பார்த்ததும், மதுவின் உள்ளம் பரவசப்பட்டது. பாசத்தில் கசிந்துருகியது. 'என் அப்பா' என்ற பாச உணர்வு, மனதை விதிர்க்கச் செய்தது. மெதுவாக அந்தப் புகைப்படத்தைத்

தடவிப் பார்த்தாள். எப்படிப்பட்ட இளமைப் பருவத்தை, தந்தையுடன் மகிழ்வுடன் கழித்திருக்க வேண்டிய நாட்களை இழந்திருக்கிறோம் என்ற ஏக்கம், உள்ளத்தில் நிறைந்து, கண்ணீராய் சுரந்தது.

அந்தப் புகைப்படத்தின் பின்புறம், பெங்களூர் முகவரி இருந்தது. இப்போது, தன் அப்பா எப்படி இருப்பாரோ என்ற ஆர்வம் வர, உடனே அவரைப் பார்க்க வேண்டும் போல் மனம் பரபரத்தது.

பாட்டியும் அவளைப் புரிந்துகொண்டவர் போல், "உன் அப்பாவைப் பார்க்கும்போது, என்னை மன்னிச்சிடும்படி நான் கேட்டதா சொல்லுடா, மது!" என்று கூறிவிட்டுப் படுத்தவர்தான்.

சிறிது நேரத்தில் மூச்சுத் திணறல் அதிகமாகி, அவர் தன் இறுதி மூச்சை நிறுத்திவிட்டார்.

மதுவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

பாட்டியின் உறவு முறையில், அனைவருக்கும் தந்தி அனுப்பி விட்டு, தன் தந்தைக்கும் பெங்களூர் முகவரிக்கு ஒரு தந்தி அனுப்பினாள்.

உறவினர்கள் மட்டும் வந்துவிட, அவளுடைய தந்தை வரவில்லை.

அவளும், உறவினர்களும் முன் நின்று எல்லாவற்றையும் செய்தனர். மறுநாள், பெங்களூரிலிருந்து ஒரு கடிதம் வருத்தம் தெரிவித்து வந்தது. ராஜசேகர் தற்போது லண்டனில் இருப்ப தால் வரமுடியவில்லை என்றும் விளக்கம் அளித்திருந்தது.

பாட்டியின் பதினாறாம் நாள் காரியமெல்லாம் முடிந்தது. வந்திருந்த உறவினர்கள் எல்லோரும் சென்றுவிட்டிருந்தனர். தங்களுடன் வருமாறு சிலர் அழைத்தும் மது முடிவாகக் கூறிவிட்டாள். தந்தையிடம் போகப்போவதாகவும், அவருடன் கடைசிவரை இருக்கப்போவதாகவும் கூறி, அவர்களுக்கு விடைகொடுத்து அனுப்பினாள்.

வாசலில், கார் ஒன்று வந்து நிற்கும் ஓசை கேட்டு, மதுவின் எண்ண ஓட்டம் தடைபட்டது. எங்கோ பறந்துசென்ற நினைவுப் பறவை, சிறகை விரித்துத் தரையிறங்கியது.

காஞ்சனா, முன் அறையில் யாருடனோ பேசிக்கொண்டு இருப்பது கேட்டது. இந்த நேரத்தில் யாராக இருக்கும் என்று



யோசித்தபடியே மது வெளியே வந்தபோது, அமர்ந்திருந்த அந்த மனிதர் எழுந்து நின்று அவளையே ஆச்சரியத்துடன் பார்த்தார்.

அவர் முகம் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தது.

## 2

மதுவுக்கு அவரைப் பார்த்த உடனே தெரிந்துவிட்டது. அவர்தான் தன் தந்தையென்று! அவரை நேரில் கண்ட மகிழ்ச்சியில், தாங்கமுடியாத பரவசத்தில், உதடுகள் "அப்பா..." என்று பிரமிப்புடன் முணுமுணுத்தன.

அவளையே கூர்ந்து பார்த்த ராஜசேகருக்கோ, அறிமுகமே தேவை இருக்கவில்லை. அவளைக் கண்டதுமே ஆச்சரியமும், மகிழ்ச்சியும் பளிச்சிட்டன. வேகமாக அவளருகே வந்த அவர், கலங்க ஆரம்பித்திருந்தார். பாசம் கலந்த வேகத்துடன் அவளைப் பிடித்து நெஞ்சோடு அணைத்துக்கொண்டார், ராஜசேகர்.

அவளுக்கும், அவரை முதன்முதலில் பார்த்ததால், இதயம் ஆனந்தத்தில் பனித்தது. ஆனாலும், அவள் உடனே சமாளித்துக் கொண்டாள். ராஜசேகர் மலைப்புடனும், நம்பமுடியாத மகிழ்ச்சியுடனும் நின்றார். தன்னிடமிருந்து அவளை விலக்கி எதிரே நிறுத்தி, தன் மகளை ஆசைதீரப் பார்த்தார்.

அவர் கண்கள், ஆனந்த அருவியைப் பொழிந்தது. அவளைப் பார்த்து, "அப்படியே, உன் அம்மாவைப் போலவே இருக்கேம்மா! சத்தியாவை நான் முதல்முதலில் பார்த்தப்போ இருந்த மாதிரியே, அச்சு அசலா இருக்கே! ஏம்மா... இத்தனை நாளா என்னை மறந்துட்டே? உன் பாட்டிக்குத்தான் என்மேல கோபம். நீயும் ஏன்ம்மா என்னை ஒதுக்கி வைச்சுட்டே?" ஆதங்கத்துடன் கேட்டார்.

"நான் சொல்றேன்ப்பா... முதல்ல நீங்க உக்காருங்க" என்று கூறி, அவர் கையைப் பிடித்து சோபாவில் உக்கார வைத்து விட்டுத் திரும்பி உள்நோக்கிக் குரல் கொடுத்தாள்.

"காஞ்சனாம்மா! ஒரு தம்ளர் பால் சூடா உடனே எடுத்துட்டு வாங்களேன்" என்று கூறிவிட்டு, அவர் அருகில் அமர்ந்து, அவருடைய தோள் மீது ஆதரவாகச் சாய்ந்துகொண்டாள், மது. ராஜசேகருக்குப் பிறவி எடுத்ததன் பலனை இன்றுதான்

அனுபவிப்பது போலிருந்தது. மகிழ்ச்சிக் கடலில் தத்தளித்தார்.

மகள் தலையை அன்பாக வருடிக்கொடுத்தவரின் கைகளில், லேசான நடுக்கம் தென்பட்டது.

மது மெதுவாக நிமிர்ந்தாள். "நீங்க இருக்கிறதே, எனக்கு இப்பதான், பதினாறு நாளுக்கு முன்னாடிதான் தெரியும்ப்பா. பாட்டி சாகிறதுக்கு முன்னால சொன்னாங்க. உங்ககிட்டே அவங்க மன்னிப்புக் கேட்டதா, சொல்லச் சொன்னாங்க. நான் தான் உங்களுக்கு தந்தி அனுப்பினேன். உங்க அலுவலகத்தில் இருந்து கடிதம் வந்தது. நேத்துதான் பாட்டியோட காரியம் முடிஞ்சு, எல்லாரும் புறப்பட்டுப் போனாங்க" என்று கண்ணீர் மல்க அவள் கூறியபோது, உருகிப்போய்விட்டார், ராஜசேகர்!

காஞ்சனா, அதற்குள் பால் எடுத்து வந்து கொடுத்தாள். ராஜசேகர் அவளிடம் சொன்னார். "ரொம்ப நன்றிம்மா. நான் வர்றவரைக்கும் என் பொண்ணைப் பத்திரமா பார்த்துக்கிட்டதுக்கு!" என்றார், நெகிழ்வுடன். மதுவிடம் திரும்பி, "நாம வேணா, இவங்களையும் பெங்களூருக்கு அழைச்சிட்டுப் போயிடுவோமா?" என்று கூறவும், காஞ்சனாவின் முகம் மலர்ந்தது.

சரியென தலையசைத்தவள், "என் பெயர் என்னன்னு உங்களுக்குத் தெரியுமாப்பா?" என்றாள், புதிர் போல்!

அவரும், "மதுன்னு தந்தியிலே போட்டிருந்தது. யாரோ, பாட்டிக்குத் தெரிஞ்சவங்களா இருப்பாங்கன்னு நினைச்சேன். இங்கே வந்தப்புறம்தானே தெரியுது" என்று கூறிக்கொண்டே வந்தவரின் முகத்தில், ஆயிரம் கோடிப் பிரகாசம் நொடியில் வந்து போனது.

வாய் மெதுவாக, வீணை மீட்டுவது போல் அவளுடைய பெயரை "மதுமிதா" என்று ஆச்சரியத்துடன் உச்சரித்தது. மெல்ல அவளிடம் திரும்பி, "எப்படிம்மா பாட்டி இந்தப் பேரை வைச்சாங்க?" என்றார், பிரமிப்புடன்.

"அம்மாவோட கடைசி ஆசையைப் பாட்டியால் எப்படி நிறைவேத்தாம இருக்கமுடியும்? அதனால, எனக்காக நீங்க தேர்வு செய்திருந்த பேரையே எனக்கு வைச்சிட்டாங்க" என்று ஆவலுடன் கூறினாள், மது.

பெருமூச்சுடன் நிமிர்ந்த ராஜசேகர், "ஏம்மா... உன் பாட்டி



இப்படி செஞ்சாங்க? என் குழந்தையை என்கிட்டே இருந்து பிரிச்சி, உன் இளமைக் காலத்தை மறைச்சி, இப்படி ஒரு கொடுமை செய்ய எப்படி மனசு வந்தது, அவங்களுக்கு?" என்றார், ஆதங்கத்துடன்.

அவரை சமாதானப்படுத்தும் விதமாக அவருடைய கைகளைப் பிடித்து அழுத்திய மது, "பாட்டியும் பாவம்ப்பா! ஆசையா, அருமையா என்னை வளர்த்தாங்க. அவங்களுக்கு எங்கே நான் உங்களைப் பார்த்துட்டா, அப்புறம் அவங்களை விட்டுட்டுப் போயிடுவேனோன்னு பயம்! பாவம்... அவங்களுக்கும் என்னைத் தவிர யாருமே இல்லையே! அதனால்தான் அப்படி செஞ்சிட்டதா சொல்லி, மன்னிப்புக் கேக்கணும்னு சொன்னாங்க... தயவுசெய்து அவங்களை தப்பா நினைக்காதீங்கப்பா" என்றாள், மது.

மனதினுள் ஊன்றி இருந்த பாச வேரை அடியோடு பிடுங்கி எறிய தெரியவில்லை, அவளால்! தன் பாட்டி தவறே செய்திருந்தாலும் விட்டுக்கொடுக்காமல், தாங்கிப் பேசும் தன் மகளின் மேல் இன்னும் அதிகப் பாசம் வந்தது, ராஜசேகருக்கு.

அவருடைய கண்கள் பனிக்கக் கண்டதும், அதை மெதுவாகத் துடைத்த மகளின் கையை, அன்புடன் பிடித்துக்கொண்டார்.

அந்த நேரத்தில் அவருடைய 'செல்' ஒலிக்க ஆரம்பித்தது.

எடுத்துப் பார்த்த ராஜசேகர், குரலில் உற்சாகத்துடன், "வருண்... அலுவலகத்தில வேலையெல்லாம் எப்படிப் போய்கிட்டு இருக்கு? நானும் வந்தவுடனே, இங்கே கிளம்பி வந்துட்டேன். ஒண்ணும் பிரச்சினை இல்லையே? நாளைக்குப் பார்க்கலாம்" என்று கூறிவிட்டு, அவன் பேசுவதற்கு தொடர்ந்து பதில் சொல்லிக்கொண்டு இருந்தார்.

பிறகு, "வீட்டில்தான் இருக்கியா? அம்மா, பக்கத்துல இருந்தா பேசச்சொல்லு" என்றவர் மதுவிடம் திரும்பினார். "உன் அத்தை" என்று கூறிச் சிரித்தார். வருண் யாராக இருக்கும் என்ற யோசனையில் இருந்த மதுவுக்கு, அத்தை என்றதும் ஒன்றும் புரியவில்லை. அப்பாவுக்கு இன்னொரு குடும்பம் இருந்தால், அவர்களுடன் எப்படிப் பொருந்த முடியும் என்ற பயம் முதன்முதலாக மனதில் கிளர்ந்தது.

அவர் பேச்சைக் கவனிக்க ஆரம்பித்தபோது, அவர் அந்த

வருணிடம் உரிமையுடன் பேசுவதைக் கேட்டால், இந்த இயல்பான உரிமையை இத்தனை ஆண்டாக தான் இழந்தது, மனதை வெகுவாய் பாதித்தது.

அவர் "சரி வருண்! அம்மாகிட்ட ஒரு விருந்தினர் அறை தயார்பண்ணச் சொல்லி இருக்கேன். என்னோட முக்கியமான விருந்தாளி வர்றாங்க" என்று கூறிவிட்டு, "ஊகூம்... சொல்ல மாட்டேன்... நேரில் பார்த்துத் தெரிஞ்சுக்க" என்று 'செல்'லை நிறுத்தினார், ராஜசேகர்.

தன் விழிகளில், அவன் யாரென்ற கேளவியுடன் நிமிர்ந்து பார்த்த மதுவை நோக்கி அன்பாகச் சிரித்தார். "வருண், உன் அத்தை பையன்ம்மா! ரொம்ப புத்திசாலி... என் வலக் கைன்னு வைச்சுக்கயேன். எம்.பி.ஏ. முடிச்சிட்டு எனக்கு தொழிலில் எல்லாமுமாக இருக்கிறவன்!" என்றவர், "அங்கே எல்லாரும் அதிரிச்சியாயிடப் போறாங்க, இந்த தேவதையைப் பார்த்துட்டு!" என்றார், பெருமையுடன்.

அவர் மனம் உடனே வருணிடம் சென்றது.

"என்னப்பா யோசனை? இவ்வளவு பெரிய பெண்ணை எப்படி உங்க குடும்பத்துல அறிமுகப்படுத்துறதுன்னு யோசிக்கிறீங்களா? சித்திக்கு எத்தனை பசங்க" என்று கேட்டாள், மது.

ஒரு திடுக்கிடலோடு, "என்னம்மா இப்படிக் கேட்டுட்டே? உனக்கு சித்தின்னு யாருமே கிடையாது. என் வாழ்க்கையில் அப்படியொரு உறவே கிடையாது, மது. உங்கம்மா இறந்ததுமே, இனி இன்னொரு பெண்ணுக்கு தாம்பத்தியத்தில் இடம் இல்லைன்னு நான் முடிவுபண்ணிட்டேன். அப்புறம், தொழில்தான் எனக்குத் துணையா இருந்தது. வருண், என் கூடவே இருக்கிறான். உன் அத்தையும், மாமாவும் நம்ம வீட்டுக்கே வந்துட்டாங்க. அப்போ, அவனுக்கு அஞ்சு வயசு. வருண் வந்ததாலே தனிமை எனக்கு பெரிய சுமையாகத் தெரியலை" என்றார்.

அதைக் கேட்டபோது, மதுவின் மனம் உருகியது.

"பாவம்ப்பா நீங்க!" என்றாள். செல்லமாக அவள் தலையைக் கலைத்துவிட்ட ராஜசேகர், "இதுவரைக்கும், வருண் எனக்கு எல்லாம். ஆனா, இன்னிலேருந்து, நீங்க ரெண்டு பேருமே எனக்கு ரெண்டு கண்கள் மாதிரி! எது பெருசு, எது சின்னதுன்னு சொல்லமுடியாதபடி எனக்கு ரெண்டுமே முக்கியம். இனி, நான்



வாழப்போற நாட்கள் எல்லாம், உங்க ரெண்டு பேருக்காக மட்டும்தான்!" என்றார், கலங்கிய கண்களுடன்.

மதுவுக்கு, அந்த அந்த முகம் தெரியாத வருண் மேல், மனதில் மெலிதான பொறாமை வந்தது.

யாரிவன்? என் தந்தையின் அன்பைத் தனதாக்கிக் கொண்டவன் என்று உள்ளம் தவிக்க தந்தையை அழைத்துக் கொண்டு, தன் அறைக்குள் சென்றாள். "இன்னிக்கு இங்கேயே தங்குங்கப்பா" என்றாள், ஆவலுடன்.

ஒரு கணம் யோசித்தவர், "சரிம்மா! நான் போய் என்னோட பொருட்களையெல்லாம் ஓட்டலிலேருந்து எடுத்திட்டு வந்திடுறேன். நீ சாப்பிட்டியாடா, மது?" என்றார்.

அப்போதுதான், அதுபற்றி தான் கேட்கவில்லை என்பது மதுவுக்கு உரைத்தது.

"உங்களைப் பார்த்த சந்தோசத்துல, சாப்பிடக்கூடச் சொல்லலைப்பா... என்னை மன்னிச்சிடுங்கப்பா! பாட்டி இருந்தா இந்நேரம் திட்டி இருப்பாங்க. வாங்கப்பா, சாப்பிட லாம்" என்று அழைத்தாள்.

"நீ உடைய மாத்திட்டுக் கிளம்பு. நாம ஓட்டலுக்குப் போய் சாப்பிட்டப்புறம் எல்லாத்தையும் எடுத்துட்டு, அறையைக் காலிபண்ணிட்டு வந்திடலாம்" என்றார்.

ஓட்டலுக்குச் சென்று, பொருட்களை எல்லாம் எடுத்துக் கொண்டு, சாப்பிட்டுவிட்டு வீட்டுக்கு வந்தனர்.

பிறகு பேசி முடித்து இருவரும் படுக்கும்போது மணி இரண்டாகிவிட்டது.

அவர்களுடைய ஓட்டலைப் பார்த்து, மது பிரமித்ததும், ரசித்து சாப்பிட்டதும், துணிகளை அடுக்குவதற்கு உதவியதும், மனதுக்கு இதமாய் இருந்தன. சத்தியாவின் நினைவுகளை அவருக்குள் அதிகப்படுத்தின.

காலையில் எழுந்து குளித்து, சாப்பிட்ட பிறகு, இருவருமாகச் சேர்ந்து மதுவின் பொருட்களையும் அடுக்கி வைத்தனர். பேசிக்கொண்டே செய்ததில், வேலை சுலபமாக முடிந்தது. நேரம் போனதே தெரியவில்லை!

இரவே முடிவு செய்திருந்தபடி, இந்த வீட்டைக் காஞ்சனாவையே பார்த்துக்கொள்ளும்படி விட்டுச்செல்லலாம்

என்றார், அவர்.

அவள் கணவரையும் ஊரிலிருந்து வரவழைத்து, அவர்களுடைய நிறுவனத்தின் விருந்தினர் இல்லமாக வீட்டை மாற்றிவிடலாம் என்றும் முடிவு செய்திருந்தனர்.

அப்பா கூறியதை காஞ்சனாவிடம் கூறியபோது, அவளுக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சி.

வீட்டைப் பழுது பார்த்து, வண்ணம் பூசி சீரமைக்கும் பொறுப்பை அவர்களுடைய நிர்வாகமே ஏற்றுக்கொண்டது.

தான் வேலை செய்த நிறுவனத்திற்குத் தந்தையுடன் சென்று, வேலையை ராஜினாமா செய்துவிட்டுக் கிளம்பினாள், மது.

## 3

மறுநாள் மதியம் மூன்று மணிக்குமேல் இருவரும் காரில் புறப்பட்டுச் சென்றனர்.

பாட்டியின் புகைப்படத்தை மட்டும் எடுத்துக்கொண்ட மது, நண்பர்களிடம் சொல்லிவிட்டு, பக்கத்து வீடுகளில் விடைபெற்றாள். மகிழ்ச்சியுடன் புதிய உலகத்திற்குக் கிளம்பினாள். காஞ்சனா அவளைக் கண்ணீருடன் வழியனுப்பினாள்.

வெளியூருக்கென்று, மது எங்குமே சென்றதில்லை.

பாட்டி, அவளைக் கல்லூரிச் சுற்றுலாவுக்குக்கூட அனுப்பியதில்லை... மிகவும் பயப்படுவார்!

பாட்டியைப் பற்றிய பழைய நினைவுகள் மனதில் படர, ராஜசேகரின் தோளில் உரிமையுடன் சாய்ந்துகொண்டாள், மது.

காரில், இனிமையான சங்கீதம் சாரல் மழையாய் வழிந்துகொண்டிருந்தது.

தன்மேல் ஆதரவுடன் சாய்ந்து உறங்கிவிட்ட மகளை, அன்புடன் அணைத்துக்கொண்டார், ராஜசேகர்.

அவருடைய நினைவுப் பூக்கள் மனதில் மலர்ந்து, சாமரம் வீசின... மனைவி சத்தியாவின் ஞாபகம், நெஞ்சில் பெரும் சோகமாய் படர்ந்தது!

இதுநாள்வரை, தான் அறியாமலே வளர்ந்திருந்த தன் பெண்ணை, கண்களுக்குள் வைத்துப் பாதுகாக்க



வேண்டுமென்று முடிவு செய்தார், அவர்.

பெங்களூருக்குச் செல்லும் வழியில் சாப்பிட்டுவிட்டு, ஊரை அடைந்தபோது, குளிராகவும் இதமாகவும் இருந்தன, மதுவுக்கு!

தனக்கு உரிமை உள்ள சொந்தமான இடத்துக்கு வந்தது போல், உள்ளத்தில் அமைதி வந்தது.

அழகான, மரங்கள் அடர்ந்த பகுதியில் கார் சென்றபோது, ஒரு திருப்பத்தில் அந்தப் பெரிய பங்களா தென்பட்டது.

சுற்றிலும் பெரிய மதில் சுவருடன், பரந்து விரிந்த தோட்டத்தின் நடுவே, சிறிய அரண்மனை போல் தூய வெண்மை நிறத்தில் அமைந்திருந்த அந்த வீடு, நிலவொளியில் அற்புதமாக இருந்தது.

காரிலிருந்து இறங்கிப் பார்த்ததும், மது பிரமித்துப்போனாள்.

அந்த வீட்டின் பிரமாண்டம் மனதை ஏதோ செய்ய, இவ்வளவு பெரிய பணக்காரரா தன் தந்தையென்று ஆச்சரியமானாள்.

எதிரே, பெரிய கதவுகள், அழகான மர வேலைப்பாட்டுடன் அமைந்திருந்தன.

வாயிலில் நின்றிருந்த காவலாளி கதவை பவ்வியமாகத் திறந்து, வணங்கினான்.

மதுவுக்கு வீட்டினுள் நுழைந்ததும், ஏதோ ஒரு திரைப்படத்தில் பார்த்த பங்களாவின் நினைவு வந்தது.

நடுவே, அழகான படிகள் உயர்ந்து, இருபுறமும் பிரிந்து சென்றன.

பெருமையுடன் அவளுக்கு வீட்டைச் சுற்றிக் காண்பித்தார், ராஜசேகர்.

அப்போதுதான், படிகளில் இறங்கிக்கொண்டிருந்த அந்தப் பெண்மணியைக் கவனித்தாள், மது.

வெள்ளை இரவிக்கையும், பட்டுச்சேலையும் அணிந்து, கம்பீரமாக வந்துகொண்டிருந்தார், அப்பெண்.

மதுவைக் கண்டதும், முகத்தில் ஆச்சரியம் தெரிந்தது. ஏதோ யோசனையாகவே இறங்கி, ராஜசேகரை வரவேற்றார்.

"வாங்கண்ணா! யாரு இந்தப் பொண்ணு? அண்ணியைப் போலவே இருக்கா! அவங்களுக்கு உறவா?" கேட்டுவிட்டு, "வாம்மா" என்று அவளை வரவேற்றார்.

மதுவின் தோள்களை அணைத்துப் பிடித்த ராஜசேகர் பெருமையுடன் நிமிர்ந்தார்.

"அண்ணிக்கு உறவா? இன்னும் யாருன்னு தெரியலையா, உனக்கு? வத்சலா... இவ, என் வாரிசும்மா. என் பொண்ணு மதுமிதா!"

அவர் கூறவும், வத்சலாவின் முகம் ஆச்சரியத்தில் மலர்ந்தது.

அவர் மகிழ்ச்சி கலந்த பிரமிப்புடன் வேகமாக அருகில் வந்தார்.

"நீங்க சொல்றது நிஜமாண்ணா? பின்னே ஏன் இத்தனை நாளா, இவளைப் பிரிஞ்சி இருந்தீங்க?" என்றார், ஆர்வத்துடன்.

"எனக்கே நேத்துதான் தெரியும் வத்சலா... என் மதுமிதா உயிரோடு இருக்கிற விசயம்! அவங்க பாட்டியோட சாவுக்கு விசாரிக்கப் போனப்போ, இந்த வைரம் எனக்குப் பரிசாக் கிடைச்சா!" கூறிவிட்டுத் தன் பெண்ணைப் பாசத்துடன் அணைத்துக்கொண்டார், ராஜசேகர்.

இவ்வளவு தூரம் பயணம் செய்து வந்தபோதும், அப்போது தான் புதிதாய் மலர்ந்த மலரைப் போல் நின்றிருந்த மதுவை, வியப்பாகப் பார்த்தார், வத்சலா.

"உனக்கு இன்ப அதிர்ச்சியா இருக்கட்டுமேன்னுதான், நான் வருண்கிட்டேகூட எதுவுமே சொல்லலை. ஆமாம்... வருண் எங்கே? இன்னுமா வரலை?" வினவினார், ராஜசேகர்.

மதுவின் கைகளைப் பிடித்து, முகத்தைப் பாசமாக வருடிய வத்சலா, அண்ணனிடம் திரும்பினார்.

"வருண், வரத் தாமதமாகும்னு சொன்னாண்ணா! தொழில் தொடர்பா ஏதோ விருந்துக்குப் போறதா சொன்னான். நீங்க ஓய்வெடுங்க" கூறிவிட்டு, மதுவை மாடிக்கு அழைத்துச் சென்றார்.

மாடியில், மதுவுக்கென்று ஒரு அறை தயார் செய்யப் பட்டிருந்தது.

அழகிய இரட்டைக் கட்டில்கள், நடுவில். ஒருபுறம் அலங்கார மேசையும், மறுபுறம் சோபாவும் போடப்பட்டிருந்தன.

பூஜாடியில் வைக்கப்பட்டிருந்த தோட்டத்து மலர்களின் நறுமணம், நாசியை இதமாய் வருடியது.

இருபுறமும் மர அலமாரிகள் பொருத்தப்பட்டிருந்தன. அலங்காரத்துடன் இரு கதவுகளும் காணப்பட்டன. அதில் ஒருபுறம் குளியலறையும், மறுபுறக் கதவின் வெளியே அழகிய பால்கனியும் தெரிந்தன.



கதவைத் திறந்தவுடன், சில்லென்ற பனிக்காற்று, சரசமாய் வந்து முகத்தில் மோதி, தேகத்தை சிலிர்க்க வைத்தது. அவள் பார்வையைச் சுழற்றியபோது, அழகிய திரைச்சீலைகளும், சுவர் அலங்காரங்களும், வண்ணமலர்களும் சேர்ந்து, அந்த அறையையே ரம்யமாக்கிக்கொண்டிருந்தன.

பிரமிப்பு நீங்காமல் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த மதுவிடம் வந்தார், வத்சலா.

"மது! நல்லாத் தூங்கி ஓய்வெடுத்துக்கம்மா. காலையிலே, சீக்கிரம் எழுந்திரிக்கணும்னு அவசியமில்லை. மெதுவாவே கீழே வரலாம். காலையிலே பார்க்கலாம்."

கதவை மூடிவிட்டுச் சென்றார்.

மதுவுக்கு, வாழ்க்கையில் என்றுமே பணம் பெரிதாகத் தோன்றியதில்லை. இன்று பார்த்தபோது, பணமிருந்தால் எல்லா வசதிகளும் தானாகத் தேடிவரும் என்பது புரிந்தது.

வத்சலா அத்தையிடம், ஒரு விலகல்தன்மை தெரிவது போல் தோன்றியது.

குளித்துவிட்டு இரவு உடைக்கு மாறினாள்.

சிறிது நேரம் ஒரு புத்தகத்தைப் படித்துவிட்டு, பிறகு படுக்கச் சென்றபோது, ஆழ்ந்த உறக்கம் அவள் இமைகளைத் தழுவியது.

மறுநாள் காலையில் மதுவுக்கு, ஐந்தரை மணிக்கே விழிப்பு வந்துவிட்டது.

வையகமும், வானகமும் நித்திரை கலைந்து எழும் விடியலைப் பார்க்க வேண்டும் போல் தோன்றியது.

ஆவலுடன் எழுந்து, பால்கனிக்கு வந்தாள்.

விடியல் அற்புதமாய் தெரிய, கீழ்வானில் தீபமாய் சூரியன் எழுந்துகொண்டிருந்தான். வெண்மேகங்கள் வானில் உலா வர ஆரம்பித்திருந்தன!

மெல்ல வீசிய தென்றல் காற்றில், காலைப் பனியும் கலந்து குளிர்ாய் மேனியைத் தழுவ, தோட்டத்தில் மலர்கள் மவுனமாய் மலர்ந்துகொண்டிருந்தன.

இயற்கையில் மனமொன்றி, தன்னை மறந்து ரசித்துக் கொண்டிருந்தாள், அவள்.

அதுவரை தன் எண்ணங்களில் மூழ்கியிருந்த மது, பக்கத்திலிருந்த பால்கனியிலிருந்து ஒருவன் தன்னையே,

ஆச்சரியத்துடன் கூர்ந்து கவனிப்பதையும், அங்கு வெகு நேரமாய் அவன் நின்றிருப்பதையும் கவனிக்கவில்லை.

சிறிது நேரம் கழித்து அவள் தன் மோன நிலை கலைந்து திரும்பிப் பார்த்தால், இரவு உடையுடன் உயரமான ஒருவன் அங்கு நின்றிருந்தான்.

இவன்தான், அப்பா கூறிய வருணாக இருப்பானோ என்று தோன்றியது, அவளுக்கு!

அவன், அவளைப் பார்த்த பார்வையில் ஆச்சரியத்துடன் கலந்த ஆராய்ச்சி தென்பட, அவன் பார்வை அவளை என்னென்னவோ செய்தது.

வேகமாகத் திரும்பி, உள்ளே சென்றாள், மது.

மனம், அவன் உருவத்தை மறுபடியும் நினைவுக்குக் கொண்டுவந்தது.

ஆறடிக்கும்மேல், அசாதாரண உயரத்தில், மாநிறமாய், கருத்தடர்ந்த மீசையுடனும், கூரிய கண்களுடனும் அவன் அலட்சியமாக நின்ற தோரணை மனதைக் கவர்ந்தது.

அவன்தான் வருணாக இருக்கவேண்டும் என்று தோன்றிய அதேநேரம், அறைக் கதவு மெலிதாகத் தட்டப்பட்டது.

கதவைத் திறந்தால், கையில் காப்பியுடன் ஒரு வயதான அம்மா நின்றிருந்தார்.

காப்பியைக் கொடுத்துவிட்டு, "அப்படியே உங்கம்மா மாதிரியே இருக்கீங்கம்மா, நீங்க!" வியப்போடு கூறிவிட்டு, அவளையே இமைக்காமல் பார்த்தார்.

"நான் ரொம்ப நாளா இங்கே வேலை செஞ்சுட்டு இருக்கேம்மா. உங்கப்பா, சத்தியாம்மாவைக் கல்யாணம் பண்ணி அழைச்சிட்டு வந்ததும், ஒரு ஆறேழு மாசம்தான் அவங்க இங்கே இருந்தாங்க. அப்புறம, பிரசவத்துக்காக தன் அம்மா வீட்டுக்குப் போனதும்... பிறகு, திரும்பி வராமலே போனதும்... ஒரு கனவாட்டம் இருக்கு" கண்கள் கலங்கக் கூறிவிட்டு அவர் கிளம்பினார்.

"ஒரு நிமிடம்!" என்று தடுத்தாள், மது.

"எங்க அம்மா எப்படிப் பழகுவாங்க? என்னை மாதிரி இருப்பாங்களா?" என்றாள், ஆர்வத்துடன்.

"ஆமாம்மா! அதே அச்சுதான், நீங்க. அதே அழகு! ஆனா,



முதலாளி மாதிரி ரொம்ப உயரம். அமைதியா இருப்பாங்க... நல்லவங்க! அவங்களைப் பிரிஞ்சி, முதலாளிதான் கஷ்டப் பட்டாங்க. நீங்க வந்திருக்கிறதா, பெரியம்மா காலையிலதான் சொன்னாங்க! அதான் உடனே காப்பி போட்டு எடுத்துட்டு வந்தேன்" என்றார், பாசத்துடன்.

அவர் சென்றவுடன், காப்பியைக் குடித்துவிட்டு யோசனை யாக அமர்ந்திருந்தபோதுதான், ராஜசேகர் கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தார்.

"மது! நீ எழுந்திரிச்சிட்டதா மீனாம்மா சொன்னாங்க. அதான் வந்தேன். உனக்கு, இப்ப முக்கியமான ஒருத்தரை அறிமுகப்படுத்தப் போறேன். என்கூட வா!" அவள் கையைப் பிடித்து, அழைத்துச் சென்றார்.

அடுத்த அறையின் வாசலில் நின்று, ராஜசேகர் மெதுவாக கதவு தட்டவும், "வரலாம்!" என்ற கம்பீரமான குரல் உள்ளே இருந்து வந்தது.

## 4

அறைக் கதவைத் திறந்தால், அங்கு காலையில் பால்கனி யில் நின்று அவளை ஆச்சரியமாகப் பார்த்த அந்த உயர்ந்த மனிதன் நின்றிருந்தான்.

ராஜசேகரைப் பார்த்ததும், "என்ன மாமா?" என்றபடி ஆவலாக முன்னே வந்தான்.

அவளைக் கண்டதும் புருவங்கள் கேள்வியாக உயர, நின்று நோக்கியவனின் முகத்தில் ஒரு கூர்மை குடிவந்திருந்தது.

மதுவை, முன்னால் நிறுத்தினார், ராஜசேகர். "மது! இவன்தான் உன் அத்தை பையன் வருண்... வருண்சந்தர்!" என்று கூறிவிட்டு, அவனிடம் திரும்பினார்.

வருண்! இது யாருன்னு சொல்லு பார்க்கலாம். உனக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கணும்னுதான் நான் முன்னாடியே யாருன்னு சொல்லலை. நீயே கண்டுபிடி பார்ப்போம்!" புன்னகையுடன் கேட்டார்.

"தெரியலை மாமா! காலையிலே பார்த்தப்போ, சத்தியா

அத்தையோட ஆவியோன்னு ஆச்சரியப்பட்டேன். அப்படியே, உங்க அறையிலே இருக்கிற புகைப்படத்தில் பார்த்த மாதிரியே இருந்தது. என்னாலே யூகிக்க முடியலை... அத்தைக்கு சொந்தமா?"

கேட்டுவிட்டு, அலட்சியமாய் தோள்களைக் குலுக்கி, உதட்டைப் பிதுக்கி ராஜசேகரிடம் திரும்பினான், வருண்.

"அத்தை மட்டும் இல்லை. உனக்கும்தான் நெருங்கின சொந்தம்! உன் மாமா ராஜசேகரோட, ஒரே செல்லப் பொண்ணு மதுமிதா!" ராஜசேகர் மகிழ்ச்சியுடன் கூறினார்.

ஒருகணம்– அவன் முகத்தில் தோன்றிய உணர்ச்சிகள், பலவிதமாக இருந்தன. அதிர்ச்சி, கோபம், மகிழ்ச்சி மூன்றும் கலந்து தெரிந்தன.

அடுத்த விநாடியே, அது பொய்யோ என்பது போல், அவன் முகம் லேசாக மலர்ந்தது. கண்கள் லேசாக இறுக, அவளை நோக்கி வரவேற்கும் விதமாகப் புன்னகைத்தான்.

ராஜசேகரும் இதைக் கவனித்துவிட்டார்.

"வருண்! உன்னை மிரட்டுறதுக்கு இந்த வீட்டில் ஆள் இல்லைன்னு நீ நினைச்சிட்டு இருந்தே இல்லே? "இங்கே பார்! ஒரு அழகான குட்டி தேவதையைக் கொண்டுவந்திருக்கேன்" அவர் கிண்டலாகக் கூறியவுடன், வேகமாக நிமிர்ந்தான், வருண்.

பிறகு, அவளைத் தலை முதல் கால் வரை அளவிட்டான்.

"குட்டி தேவதையா? ஒத்துக்கவே முடியாது... அழகான ராட்சசின்னு வேணும்னா சொல்லாம்" என்றான், கேலியாக– ஒற்றைப் புருவம் ஏறி இறங்க!

"ஏய்!" என்று, சுட்டுவிரலால் செல்லமாக அவனை மிரட்டினார், ராஜசேகர்.

முதல் பார்வையிலேயே, அவனுக்குத் தன்னைப் பிடிக்க வில்லையோ என்று மதுவுக்குத் தோன்றியது.

தன் பாசத்தையும், சொத்தையும் பங்கு போட ஒருத்தி வந்த கோபமோ என்றும் நினைத்தாள்.

'எனக்கு உன் சொத்தில் ஒரு பைசாகூட வேண்டாம்... என் அப்பாவோட அன்பு மட்டும் போதும்' என்று முகத்தில் அடித்தாற்போல் கூறவேண்டும் என்று தோன்றியது.

மனதுக்குள் கோபம் புகைந்தபோதும், வெளியே



புன்னகைத்தாள்.

"அப்பா! நான் தோட்டத்தை சுத்திப் பார்க்கணும். போய்ப் பார்த்துட்டு வரவா?"

"மது! இது உன் வீடுடா! என்கிட்டே எதுக்குக் கேக்கிறே? நீ எங்கே வேணும்னாலும் போகலாம். நாளைக்கே, நான் உன்னை நம்ம நிறுவனத்துக்கு அழைச்சிட்டுப் போகப்போறேன். எனக்கு அப்புறம் நீயும் வருணும்தானே எல்லாத்தையும் பார்த்துக் கணும்... போயிட்டு வாடா!" என்று அவளை அனுப்பினார்.

அப்புறம் வருணும் அவரும் பேசத் தொடங்கி இருந்தாலும், அந்த அறையைவிட்டு வெளியே வரும்வரை, வருணின் பார்வை தன் முதுகில் ஊசியாய் குத்துவதை, மது திரும்பாமலே உணர்ந்தாள்.

அவள் மாடிப்படிகளில் இறங்கிச் செல்லும்போது, எதிரே வத்சலா வந்துகொண்டிருந்தார்.

"நல்லாத் தூங்கினியா மது? காப்பி குடிச்சியா? வருண் உன்னைப் பார்த்தானம்மா? என்ன சொன்னான்?" ஆர்வத்துடன் கேட்டார்.

"ம்... பார்த்துப் பேசிட்டுத்தான் வர்றேன், அத்தை. என்ன சொன்னாருன்னா கேக்கிறீங்க? அழகான ராட்சசின்னு சொன்னார்! நான் தோட்டத்தை சுத்திப் பார்த்துட்டு வர்றேன். அப்பாவும், அவரும் பேசிட்டு இருக்காங்க" கூறிவிட்டுக் கீழே சென்றாள், மது.

திடுக்கிட்ட வத்சலா, தன் மகனின் சுபாவத்தைப் பற்றி அறிந்திருந்ததால், மனதில் ஏதோ ஒரு எண்ணம் தோன்றியது. அது, அவர் உதடுகளில் புன்னகையை வரவழைத்தது.

தோட்டத்திற்குச் சென்றதுமே, மதுவுக்கு மற்றதெல்லாம் மறந்துபோயிற்று. அழகான மலர்களும், மரங்களும், புல்வெளியும், உள்ளத்தில் உற்சாகத்தை வரவழைப்பதாய் இருந்தன.

வருணின் வார்த்தைகளால் சஞ்சலப்பட்ட மனதை, இயற்கை தன்வசப்படுத்தியது.

எல்லாவற்றையும் ரசித்துக்கொண்டிருந்தவள், மாடியிலிருந்து தன்னையே கூர்மையுடன் அளவெடுத்த இரு விழிகளை அறியவில்லை.

பலவித வண்ணங்களில் பூத்துக் குலுங்கிய மலர்கள், அவளின்

வருகைக்காகத் தவமிருந்தவை போல் வரிசையாகக் காத்திருந்தன.

மனம் ஆழ்ந்த லயிப்புடன் எல்லாவற்றையும் ரசித்ததில், மனம் லேசாகியது.

வாழ்க்கையே புதிதாக இருக்க, அதே உற்சாகமான மனநிலையில் வீட்டிற்குள் வந்தாள்.

குளித்துவிட்டு, தயாராக அமர்ந்திருந்தார், ராஜசேகர்.

"அப்பா!" என்றபடி ஆவலுடன் வந்த மகளைப் பார்த்ததும், "மது! பூஜை பண்ணனும். உனக்காகத்தான் காத்துட்டு இருந்தேன். வாம்மா" என்று அழைத்துச் சென்றார்.

புதிய மலர்களுடன், தெய்வீக மணம்கமழ்ந்த அந்தப் பூஜை அறையில் அவளை விளக்கேற்றச் சொல்லிவிட்டு, பூஜை செய்தார், ராஜசேகர்.

அவளுடைய அம்மாவின் புகைப்படம், ஒருபக்கச் சுவரில் மாட்டி மாலை போடப்பட்டிருந்தது. நெகிழ்ச்சியுடன் கும்பிட்டு விட்டு பிரசாதத்தை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள், மது.

"என்னடா வேண்டிக்கிட்டே?" பாசத்துடன் கேட்ட அப்பாவை நிமிர்ந்து பார்த்தாள்.

"நீங்க எப்பவுமே என்னோடு இருக்கணும்னு வேண்டிக் கிட்டேன்ப்பா."

மது கூறவும், அவர் கண்களில் நீர் நிறைந்தது.

இருவருமாக சாப்பாட்டு அறைக்கு வந்தபோது, வருணும் அங்கு அமர்ந்திருந்தான்.

அவளைப் பார்த்த பார்வையில் ஏளனம் தெரிந்தாலும், உடனே இயல்பானான்.

"மாமா! நீங்க சாப்பிட வரலையா? இன்னிக்கு என்னம்மா செஞ்சிருக்கீங்க?" என்றான், வத்சலாவிடம்!

"மது வந்திருக்கா இல்லையா? இன்னிக்குப் பெரிய விருந்து தான்!" அவர் ஆர்வத்துடன் கூற, வருணின் முகம் ஒருகணம் சுருங்கியது.

அவனை வேண்டுமென்றே சீண்ட வேண்டும் போலிருந்தது, மதுவுக்கு!

"அப்பா! நான் நாளைக்கு உங்க நிறுவனத்துக்கு வர்றேன். எனக்கும் எல்லாம் கத்துக்கொடுங்க. உங்களுக்கு, என்னால முடிஞ்ச உதவியை நான் செய்கிறேன்! வீட்டில் இருந்தா



எனக்குப் பொழுதே போகாது" கூறிக்கொண்டே, ஓரக்கண்ணால் வருணையே பார்த்தாள்.

"நாளைக்கே, உன்னை அழைச்சிட்டுப்போறேன், மது. என்ன வருண்! உனக்கு சம்மதம்தானே? மதுவுக்கு, ஏற்கெனவே செயலாளர் வேலை செஞ்ச அனுபவம் இருக்கு! என்ன சொல்றே?" என்றார்.

"மாமா! நம்ம அலுவலகத்துலே உடனே எந்த வேலையும் காலி இல்லை. அவங்க வீட்டிலே இருக்கட்டும். எதுக்குத் தேவை இல்லாம கஷ்டப்பட்டுக்கிட்டு?" என்று கூறிவிட்டு, சாப்பிட ஆரம்பித்தான், வருண்.

"என்ன வருண்? நம்ம நிறுவனத்தோட ஒரு முதலாளி நீ! நீ நினைச்சா ஒரு வேலையை உருவாக்க முடியாதா என்ன! இல்லன்னா, நான் அவளை ஓட்டல் நிர்வாகத்துல பயிற்சி கொடுத்து, அதை நிர்வாகம் பண்ணப் பழக்கிடுறேன்."

சாப்பிட்டுக்கொண்டே, சிறிது நேரம் யோசித்தான், வருண்.

"வேணாம் மாமா! என்னோட செயலாளர், இன்னும் ரெண்டு மாசத்துல கல்யாணம் பண்ணிக்கப் போறாங்க. அதுக்குள்ளே அவங்களை வைத்து மதுவுக்கு பயிற்சி கொடுக்கச் சொல்லிடலாம்" என்று முடித்தான்.

அவன் உதடுகளில் தன் பெயர் இயல்பாக உச்சரிக்கப் படுவது, மதுவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

தன்னால், அவனை இயல்பாகப் பெயர் சொல்லி அழைக்க முடியுமா என்பது தெரியவில்லை.

அன்று மாலையில், சீக்கிரமே வீட்டுக்கு வந்த ராஜசேகர், மதுவை அழைத்துக்கொண்டு வெளியே சென்றார்.

அவர், அவளை அழைத்துச்சென்ற இடம், பிரமாண்ட துணிக்கடை.

அங்கு சென்றவுடன், தனக்குப் பிடித்த வண்ணங்களில் சுடிதார்களை எடுக்க ஆரம்பித்தார், ராஜசேகர்.

"யாருக்குப்பா இதெல்லாம்?" என்ற மதுவிடம், "ஒண்ணும் பேசக்கூடாது. எல்லாம் உனக்குத்தான். பிடிச்சிருக்கான்னு மட்டும் சொல்லு, மது!" என்று அடக்கினார்.

ஒவ்வொன்றின் விலையைப் பார்த்தபோதும், மதுவுக்குத் தலைசுற்றியது.

"ஏம்ப்பா, இவ்வளவு விலை அதிகமா பார்க்கிறீங்க? எனக்கு வேண்டாம்" என்று மறுத்த போது, கோபத்துடன் நிமிர்ந்தார், ராஜசேகர்.

"விலையை ஏன் பார்க்கிறே மது? சும்மா இரு... ராஜ சேகரோட பொண்ணு நீ! இதெல்லாம் பேசக்கூடாது. பிடிச்சதை மட்டும் எடுத்துக்க" எனக் கூறிவிட்டு, விலை உயர்ந்த சுடிதார்களாகத் தேர்வு செய்யத் தொடங்கினார்.

## ஆப்பிள்

ஆப்பிள் பழத்தில் மாலிக் அமிலம் உள்ளது. 'மாலிக்' என்ற வார்த்தை 'மாலும்' என்ற இலத்தீன் சொல்லில் இருந்து உருவானது. மாலும் என்றால் லத்தீன் மொழியில், ஆப்பிள் என்றே பொருள்.

பிறகு, சேலைகளுக்கான இரவிக்கைகளை அங்கேயே கீழ்த்தளத்தில் தைக்கக் கொடுத்துவிட்டுத் திரும்பும்போது சோர்ந்துபோயிருந்தாள், மது.

"ரொம்ப அநியாயம்ப்பா நீங்க பண்ணுறது! என்கிட்ட ஏற்கெனவே நிறைய துணிகள் இருக்கு. சொன்னால் கேக்கவேமாட்டேன்கிறீங்க!" செல்லமாகக் கோபப் பட்டாள், மது.

"என் மதுக்குட்டிக்கு இப்பதான் முதல் தடவையா எல்லாம் செய்யுறேன், நான்! அதிலே போய் கணக்குப் பார்க்கிறியே... சரியான கஞ்சம்டா நீ!" சலித்துக்கொண்டே, செல்லமாகப் பெண்ணின் கன்னத்தை தட்டினார்.

அவர் தோளில் ஆதரவுடன் சாய்ந்துகொண்டபோது, எங்கெங்கோ சுற்றிவிட்டு, வீடு வரும் இதம் தோன்றியது, மதுவுக்கு!

வீட்டுக்கு வந்து அத்தையிடம் எல்லாவற்றையும் காண்பித்துவிட்டு, மாடிக்குச் சென்ற மது, தனக்குப் பிடித்த இளநீலநிற சுடிதாரை மட்டும் எடுத்து தனியே வைத்தாள்.

மறுநாள் அலுவலகத்துக்கு, அதை அணிந்து செல்லலாம் என்ற எண்ணத்துடன், குளித்துவிட்டுக் கீழே வந்தாள்.

அன்றிரவும், தொழில்முறை விருந்துக்கென வருண் வெளியே சென்றிருந்தான். அவள் உறங்கச் செல்லும்வரை





அவன் வரவில்லை.

மதுவுக்கு, வெகுநேரம் உறக்கம் வரவில்லை.

நீண்டநேரம் சென்று, அவனுடைய கார் சத்தமும், பின்னர் அவனுடைய காலடி ஓசையும் வெளியே கேட்டபோதுதான் அவள் கண்கள் உறக்கத்தைத் தழுவ ஆரம்பித்தன.

## 5

**கா**லையில் உலாவச் செல்வது பழக்கமென்று ராஜசேகர் கூறி இருந்ததால், எழுந்து பல்துலக்கி- முகம் கழுவிவிட்டுக் கீழே சென்றாள், மது.

வருணும், ராஜசேகரும் தயாராக இருந்தனர்.

அவளைப் பார்த்ததுமே புருவம் சுருக்கிய வருண், உடனே திரும்பிக்கொண்டான்.

மூன்று பேரும் வெளியே வந்து, சரிவில் இறங்கி நடக்க ஆரம்பித்தனர். ஏதோ யோசனையுடன் வருண் முன்னே செல்ல, மதுவும் ராஜசேகரும் பின்தொடர்ந்தனர்.

'நடை' முடிந்து, வீடு வந்து, குளித்துவிட்டுச் சாப்பிட வந்த போதும், வருண் மவுனமாகவே இறுகிய முகத்துடன் இருந்தான்.

ஆனால், அவனுடைய பார்வை அடிக்கடி 'அவள்மேல் படிந்து விலகியது.

மது, ஆடைக்கு ஏற்றாற்போல் அதிலிருந்த வெள்ளி சரிகை வேலைப்பாடுகளுக்குப் பொருத்தமாக முத்து நகைகள் அணிந்து, தேவதை போல் காட்சி அளித்தாள்.

அவனுடைய பார்வைகள், மதுவை தர்மசங்கடத்தில் ஆழ்த்தி அவள் மனம் குழம்பி, முகம் சிவந்தது.

அன்று அலுவலகத்துக்கு, ராஜசேகருடன் மதுவும், ஒரு காரிலும், வருண் வேறு காரிலும் சென்றனர்.

அலுவலக வளாகமே பெரிய ஐந்து நட்சத்திர ஓட்டலைப் போலிருக்க, மேலே "ராஜ் டவர்ஸ்" என்று, பெரிதாக எழுதப் பட்டிருந்தது.

காரைவிட்டு பிரமிப்புடன் இறங்கிய மதுவைக் கண்டதும், வருண் உதட்டைப் பிதுக்கினான். தோளைக் குலுக்கியபடி,



அலட்சியமாகக் காரிலிருந்து இறங்கினான்.

அலுவலகத்தின் உள்ளே சென்றபோது, ஊழியர்கள் அனைவரும் அவளை மகிழ்ச்சியுடனும், ஆர்வத்துடனும் வரவேற்றனர்.

அனைவருக்கும் மதுவைப் பெருமையுடன் அறிமுகம் செய்தார், ராஜசேகர்.

அவளைத் தன் அறைக்கு அழைத்துச்சென்று, நாற்காலியில் உட்கார வைத்தார். அந்த அலுவலகத்தின் உள் அலங்காரம், ஒரு கைதேர்ந்த சிற்பி செதுக்கிய கூடம் போல் வெகு அழகாக இருந்தது.

அவருடைய அறை நடுவிலிருக்க, இருபுறமிருந்த அறைகளில் ஒன்று ஓய்வெடுக்கும் அறையாகவும், மற்றொன்று- செயலாளர் அறையாகவும் பயன்படுத்தப்படுவது புரிந்தது.

அங்கிருந்து வருணின் அறைக்கு அவளை அழைத்துச் சென்றார், ராஜசேகர்.

வருண் அறையும் அதே அமைப்பிலேயே இருந்தது.

அடுத்த அறையில் அவனுடைய செயலாளர் நாதமணி, இளமையாக- மிதமான அழகுடனும் அதிகமான ஒப்பனையுடனும் இருந்தாள்.

அவளிடம் மதுவை ஒப்படைத்தார், ராஜசேகர். மதுவை அறிமுகப்படுத்தியதுமே, அவள் பார்த்த பார்வையில் ஒரு மரியாதை தெரிந்தது.

"நாதமணி! இவங்க இந்த நிறுவனத்தோட இன்னொரு முதலாளி... வருண் மாதிரி! இவளும் உன்னை மாதிரியே படிச்சவதான். அவளுக்கு, எல்லாத்தையும் நல்லாப் பழக்கிவிடு. இப்ப, வருணுக்கு உதவியா இருக்கட்டும். எல்லாம் பழகினதும், உயர்ந்த பதவிக்குக் கொண்டுவந்திடலாம்" என்றார்.

வெளியில் வந்து, வேலையில் ஆழ்ந்திருந்த வருணைப் பார்த்து, "சரி வருண்! நான் வர்றேன். மதுவைப் பார்த்துக்கோ!" என்று கூறிவிட்டுச் சென்றார்.

மது, நாதமணியிடம் சென்று தினசரி நடப்புகள் பற்றி கேட்டுத் தெரிந்துகொண்டாள்.

முன்பே செய்த வேலைதான் என்றாலும், இந்தப் புது வேலை தனக்கு சவாலாகவே அமையும் என்று அவளுக்குத் தோன்றியது.

அவள் முன்பு வேலை செய்தது, சிறிய தனியார் நிறுவனத்தில்! இங்கு, அப்படியில்லை... பல கோடிகள் புரள்வது புரிந்தது.

எல்லா விபரங்களுமே, கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டிருந்தன. இரகசிய விபரங்கள் அடங்கிய கோப்புகள் அனைத்துமே வருணின் வசம் இருப்பது புரிந்தது.

தன்னால் அவனுடன் இணைந்து பணியாற்ற முடியுமா என்பதே மனதில் பெரிய கேள்விக்குறியுடன் இருந்தது.

அவன் முன்னிலையில் தான் எந்தத் தவறும் செய்துவிடாமல், கவனமாக இருக்கவேண்டுமே என்ற கவலை அவளுக்குள் முதன்முதலாய் எட்டிப் பார்த்தது.

அன்று முழுவதும் வேலை, எந்த இடையூறுமின்றி சென்றது.

மதியம் இடைவேளையில் அவளைச் சாப்பிட அழைத்தார், ராஜசேகர். அவருடைய அறைக்கு சென்றபோது, அங்கு வருண் இல்லை.

"வருண் உன்கூட வரலையா, மது?" என்று ராஜசேகர் கேட்டபிறகுதான், தான் அவனைக் கூப்பிடவில்லை என்பதே நினைவுக்கு வந்தது.

உடனே, தொலைபேசியில் நாதமணியிடம் பேசினாள், அவள்.

"நான் மது! வருண் அங்கே இருக்காரா? அப்பா, அவரோடு பேசணுமாம்."

"அவர் இப்பத்தான் கிளம்பினார். அங்கதான் வந்துட்டு இருக்கார்னு நினைக்கிறேன்" என்று கூறினாள், நாதமணி.

அப்போது உள்ளே வந்த வருண், அவளைத் திரும்பியும் பார்க்காமல், ராஜசேகரிடம் பேசிக்கொண்டே சாப்பிட ஆரம்பித்தான்.

வீட்டிலிருந்து வந்திருந்த சாப்பாட்டில், எல்லா வகைகளிலும் சிறிது இனிப்பு கூடித் தெரிந்தது.

சாப்பிடும்போதே வருண் ராஜசேகரிடம் கூறினான்:

"மதுவால் முடியாது மாமா... சின்னப் பெண்! அனுபவம் போதாது... அதுவும், பெரிய நிறுவனத்துல வேலை செய்கிற அளவுக்கு திறமையும் பத்தாது" என்று கூறி, அவளையே அழமாய் பார்த்தான்.

அவள் கோபமாகத் தன் தந்தையிடம் திரும்பினாள்.

"நான் ஒண்ணும் சின்னப்பொண்ணு இல்லேப்பா...



எனக்கும் இருபத்தியொரு வயசு ஆகுது. நானும் இதுமாதிரி ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்தவள்தான்" என்றாள், மது.

"பாவம் அந்த மனுசன்!" என்று நக்கலாகக் கூறிவிட்டு, "சொல்லுங்க மாமா, நீங்களே!" என்றான், கிண்டலாக.

ராஜசேகர் இருவரையும் வியப்புடன் நோக்கினார்.

"இதென்ன... உங்க ரெண்டு பேருக்கும் நடுவுலே நான் என்ன குறுக்கே? நீங்க ரெண்டு பேருமே பேசி ஒரு முடிவுக்கு வாங்க" புன்னகையுடன் கூறிவிட்டு, சாப்பிடுவதைத் தொடர்ந்தார்.

அவள் நிமிர்ந்தபோது, ஏளனமாய் ஒற்றைப் புருவத்தை ஏற்றி இறக்கிய அவனுக்கு பதில் போல், தலையை சிலுப்பிக் கொண்டு சாப்பாட்டில் தன் கவனத்தைப் பதித்தாள், மது.

தன் திறமையை முழுவதுமாக வெளிப்படுத்தி, அவனே மெச்சும்படி நடக்க வேண்டும் என்று அவள் மனம் உறுதிபூண்டது.

அன்று கூடுதல் ஆர்வத்துடன் அலுவலகத்தின் முக்கியமான வேலைகளை, நெளிவு சுளிவுகளைக் கற்றுக்கொண்டாள்.

நாதமணி முழுமையான மனதுடன் ஒத்துழைத்ததால், முதள்நாள் வேலை இனிதாகவே முடிந்தது. வருணின் பேச்சைத் தவிர!

அன்று மாலை வீட்டுக்கு வந்த உடனே வத்சலா, தன் அண்ணனைப் பிடித்துக்கொண்டார்.

"ஏண்ணா! மது வந்து ரெண்டு நாள்தான் ஆகுது. அதுக்குள்ளே வருணும் நீங்களும் சேர்ந்து ஏன் அவளைக் கஷ்டப்படுத்துறீங்க?"

அப்போதுதான் உள்ளே வந்துகொண்டிருந்தான், வருண்.

"நாங்க கஷ்டப்படுத்துறோமா? நல்லா சொன்னீங்க? எங்களைக் கஷ்டப்படுத்துறது உங்க அண்ணன் பொண்ணு தான். அங்கேயே கேளுங்க!" குத்தலாகக் கூறிவிட்டு, மாடிக்குச் சென்றுவிட்டான்.

அவன் போவதையே பார்த்துக்கொண்டிருந்த மதுவுக்கு, அவன் புரிந்துகொள்ளமுடியாத புதிராய்... ஆனால், தன்னை அவனுக்குப் பிடிக்கவில்லை என்பது மட்டும் புரிந்ததாய்!

எனக்கு என் அப்பாவின் அன்பு மட்டும் போதும் என்ற எண்ணம் வைராக்கியமாய்– கோபச் சிலும்பலாய் மனதில் வந்தன.

**உப்பு கூடிவிட்டதா?**

குழம்பில் கூடுதலாக உப்பு போட்டுவிட்டீர்களா? கவலை வேண்டாம். ஒரு உருளைக் கிழங்கை தோல் நீக்கி, குழம்புக்குள் சிறிது நேரம் போட்டு எடுங்கள். கூடுதலான உப்பை உருளைக்கிழங்கு இழுத்துவிடும்!

இதயம், ஓட்டுக்குள் சுருங்கும் நத்தையானது.

அன்றிலிருந்து, அவனிடம் பேச்சை தவிர்க்க ஆரம்பித்தாள், மது.

காலையில் மூன்று பேரும் உலாவச் செல்லும்போதும், அங்கு மவுனமே துணையாய்! வீட்டில் அவன் எதிர்ப்படும் போதெல்லாம், எதிர் திசை தேடின அவள் விழிகள்!

அந்த வாரம் முழுவதும், எந்த மாற்றமுமின்றி சென்றது.

அலுவலகத்திலும், அவனிடம் தான் செல்லவேண்டிய முக்கிய வேலைகளுக்கும் நாதமணியையே அனுப்பினாள்.

மற்ற வேலைகள், ஆர்வத்துடன் கைவசப்பட்டன.

அன்று திரும்பி வரும்போது, ராஜசேகர் அவளை அழைத்துக்கொண்டு பெரிய துணிக்கடைக்குச் சென்றார்.

"அப்பா! இங்கே ஏன் வந்திருக்கோம்? நான் அன்னிக்கே சொல்லிட்டேன்... எனக்கு இனிமே எதுவுமே வேண்டாம்னு! சொன்னா கேக்கமாட்டீங்களா?" பொய்யான கோபத்துடன் வந்தது, மதுவின் குரல்!

"ம்து! இங்கே இருக்கிற, என்னோட தொழில்முறை நண்பர்களுக்கெல்லாம் உன்னை அறிமுகப்படுத்தணும்டா! அதுக்காக ஒரு விழா ஏற்பாடு பண்ணப்போறேன். என் மது, அன்னிக்கு இளவரசி மாதிரி இருக்கணும். இப்போ இளவரசிக்கு என்ன உடைன்னு பார்க்கப் போறோம். சரியா?"

"ஏன்ப்பா... தேவையில்லாம இவ்வளவு செலவு பண்ணி விழா எல்லாம்? எனக்கு என்னவோ போல இருக்கு... வேண்டாமே!"

"அதெல்லாம் பேசக்கூடாது! இந்த விசயத்துல, நீ நான் சொல்ற பேச்சைக் கேக்கிறே... சரியா? அடுத்த ஞாயிற்றுக்கிழமை விழா நடக்க ஏற்பாடு பண்ணியாச்சு... அதுவும் நம்ம ஓட்டலிலே!" பிடிவாதமாக முடித்தார், ராஜசேகர்.



அவளுடைய உடைகள் அவர் தேர்வாகவே இருந்தன.

தங்க, வெள்ளை நிறம் கலந்த பட்டில், கடையிலிருந்த மாடல் புத்தகத்தில் இருப்பது போலவே உடையைத் தயார் பண்ணும்படிக் கூறிவிட்டுத் திரும்பி வரும்போது, அதன் விலையைக் கேட்டு மயக்கம் வந்தது, மதுவுக்கு!

அந்த வாரம் முழுவதும், வருணுக்கும் மதுவுக்குமிடையே ஒரு விலகல் தன்மையே படர்ந்திருக்க– விழாவுக்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன.

எல்லோருக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டுவிட, வருண் எதிலுமே பெரிதாக ஆர்வம் காட்டவில்லை.

முதல்நாள் உடை தயாராகி வந்தபோது, அதைப் பார்த்தவுடன் மதுவுக்குப் பிரமிப்பாய் இருந்தது!

'இது எனக்கே எனக்கா?' என்ற பரவசம் உள்ளே எழ, மெதுவாய் வருடியபோது பஞ்சுப்பொதியாய், மென்மையான தங்கச் சிறகைப் போல் இருந்த அது மதுவின் இதயம் கவர்ந்தது.

வருணிடம் தெரிந்த விலகல் மட்டும் மனதினுள் முள்ளாய் தைத்தது!

காலையில் எழுந்து குளித்துவிட்டு, பால்கனியில் நின்று தோட்டத்தை ரசித்தபடி, மது முடியை உலர வைத்துக் கொண்டிருந்தாள். அப்போது பின்புறம் யாரோ தன்னை உற்றுப் பார்ப்பது போன்ற ஒரு உணர்வு!

ஆனால், அவள் திரும்பிப் பார்க்கவே இல்லை. ஊசி குத்துவது போன்ற பார்வை மட்டும் முதுகில் உறுத்தியது.

அடுத்த பால்கனியில் நின்று, யோசனையுடன் மதுவையே பார்த்துக்கொண்டிருந்த வருணின் முகத்தில் பலவித உணர்ச்சிகள்!

இதுவரை எந்தப் பெண்ணுமே அவனை ஈர்த்ததில்லை, சலனப்படுத்தியதுமில்லை. தொழில் முறையில், அவன் சந்திருந்த பல அழகான பெண்களும்கூட அவனைக் கவர்ந்ததில்லை.

சில பெண்கள், அவனைக் கவருவதில் ஆர்வம் காட்டி, சுற்றிவந்ததாலோ என்னவோ, தன் அம்மாவைத் தவிர, வேறு பெண்களிடம், அவனுக்கு மதிப்பே இல்லாதிருந்தது.

ஆனால், மது தன்னை ஆட்படுத்திவிடுவாளோ என்ற பயம் கோபச் சாட்டையாய் உள்ளே சுழன்றடித்தது!

தலையைக் குலுக்கி, தன்னிடமே மூண்ட கோபத்துட வேகமாக உள்ளே சென்றான், வருண்.

## 6

அன்று மதியம் சாப்பிட்ட பிறகு, சிறிது நேர ஓய்வெடுத்தாள், மது.

மூன்று மணிக்கெல்லாம் அழகு நிலையத்திலிருந்து வந் விட்டிருந்தனர். அவளை எழுப்பிய வத்சலாவும், ம தயாராகும்வரை அருகில் இருந்தார்.

முதலில், தலையில் தங்க மணிகள் வைத்து அலங்கார செய்தனர்.

பின்புறம் தலையை விரித்தபடியே... ஆனால், கலையாம இருக்கும்படி முத்துகள் பதித்து அலங்கரித்து, முகத்துக்கு ஒப்பனை செய்தனர்.

உடை அணிவிக்கும்முன், வத்சலா சென்று ஒரு நகை பெட்டியை எடுத்து வந்தார். அவள் உடைக்குப் பொருத்தமா நகைகள் அதில் இருந்தன.

அலங்காரம் முடிந்து, கண்ணாடியில் பார்த்தபோது மதுவுக்குத்தான் இவ்வளவு அழகா என்ற பிரமிப்பு!

வெண்மையும், தங்கநிறமும் இணைந்த பட்டில் பாவாடையு மேலே சரிகை வேலைப்பாடுகள் செய்த மேலாடையும் அ நிற துப்பட்டாவும், அவள் அழகைப் பலமடங்கு அதிகரித்தன

அருகிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த வத்சல ஆசையுடன் அவள் கன்னத்தை வருடினார்.

"என் கண்ணே பட்டுடும் போலிருக்கு... அவ்வளவு அழக இருக்கே மது, நீ!" பரவசத்துடன் கூறிவிட்டு, அண்ண அழைத்துவரச் சென்றார்.

உள்ளே வந்த ராஜசேகர், மதுவைப் பார்த்ததும் கண்க பனிக்க, கைகளை அவளிடம் நீட்டி, "வாடா" என்றார்.

மது, மெல்ல நடந்து வந்து, அவர் மார்பில் சாய்ந் கொண்டார்.

"ஏய்! எல்லாம் கலைஞ்சிடப்போகுது!" என்று கூறி



னீராஜசேகர், அவளை நிமிர்த்தி "ரொம்ப அழகா இருக்கேடா!" என்றார். பிறகு அழகு நிலையப் பெண்களிடம் திரும்பினார்.

"ரொம்ப நல்லா பண்ணி இருக்கீங்கம்மா. பணம் கொடுக்கச் சொல்லி இருக்கேன்... நீங்க வாங்கிட்டு கிளம்புங்க" என்று அனுப்பி வைத்தார்.

"மணி இப்பவே அஞ்சாயிடுச்சி. நானும், அத்தையும் போய் தயாராகி வந்தவுடனே கிளம்பலாம். ஆறு மணிக்குப் புறப்பட்டா சரியா இருக்கும்" என்று கூறிவிட்டு, செல்லமாக மகளின் கன்னத்தை வருடிவிட்டு சென்றார்.

ஐந்தரை மணிக்கு இருவரும் கீழே சென்றபோது, வருண் புது உடையில் அசத்தலாகக் காத்திருந்தான்.

புத்தகம் படித்துக்கொண்டிருந்தவன், பேச்சுக் குரல் கேட்டு நிமிர்ந்தபோது, தன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை.

வானத்திலிருந்து இறங்கிவரும் சிறகில்லாத தேவதை போல், மது வந்துகொண்டிருந்தாள்.

அவள் இறங்கி வருவது போலின்றி, ஏனோ படிகளில் மிதந்து வருவது போலிருந்தது. அவனுடைய இளமை கனவுகளில் உலா வந்துகொண்டிருந்த தேவதை, இன்று பெண் உருவெடுத்து நேரில் வருவது போலிருந்தது, வருணுக்கு!

கீழே வந்ததும் நிமிர்ந்து பார்த்த மதுவுக்கு, வருணுடைய பார்வையின் கூர்மை தாங்கமுடியாததாய் இருந்தது! உள்ளம் படபடக்க... குனிந்துகொண்டாள், அவள்.

"வருண்! எப்படி இருக்கா என் இளவரசி?" குரலில் பெருமை பொங்கக் கேட்ட ராஜசேகரிடம், ஒன்றும் சொல்லாமல் தலையசைத்தான், வருண்.

"நான் முன்னாலே கிளம்புறேன் மாமா! அங்கே போய் எல்லாம் கவனிக்கணும்... நீங்க அம்மா வந்தவுடனே அழைச்சிட்டு வாங்க" கூறிவிட்டு, விரைவாக அங்கிருந்து சென்றுவிட்டான்.

மதுவுக்கு, மனதின் ஓரம் முள் தைத்தாற்போல ஆனது! தன்னை அவனுக்குப் பிடிக்கவில்லையோ என்ற கவலை உணர்வு, முகத்தை வாட்டியது.

நேரே பூஜை அறைக்குப் போய், கும்பிட்டுவிட்டு வந்தபோது, வத்சலாவும் தயாராகிவிட- மூவரும் கிளம்பினர்.

ஓட்டலுக்குச் சென்றவுடன், அவளுக்கென்று கொடுக்க பட்டிருந்த அறையில் வத்சலாவும், மதுவும் சிறிது நேர ஓய்வெடுத்தனர்.

பிறகு, ராஜசேகர் அவளை விழா நடக்கும் கூடத்துக் அழைத்துச்சென்றார்.

மதுவுக்குக் கால்கள் பின்னலிட்டன. தந்தையின் கைகை இறுகப் பிடித்துக்கொண்டாள்.

அவரும் கவனமாக அவளை அழைத்துச்செல்ல, அதுவரை கலகலப்பாக இருந்த அந்தப் பெரிய கூடம், உடனே மு நிசப்தத்துக்கு வந்தது.

அனைவரின் பார்வையும் மதுவின் மேலிருக்க, எல்லோரி மும் ஒருவித பிரமிப்பு கலந்திருந்தது. ஒவ்வொருவரும் விதவி மான முகபாவத்துடன் இருந்தனர்.

"வணக்கம்! என் அழைப்பை ஏற்று எல்லோரும் வந்ததுக் நன்றி!" என்று அவர்களை வரவேற்றார், ராஜசேகர்.

"நீங்க யாருமே எதிர்பார்த்திருக்கமுடியாத முக்கியமா ஒருத்தரை... என்னோட இளவரசியை, உங்க எல்லோருக்கு அறிமுகப்படுத்தணும்னுதான், நானும் வருணும் இந்த விழாவை ஏற்பாடு செய்தோம். இதோ என் பொண்ணு மதுமிதா!"

அவர் கூறவும், அங்கிருந்தவர்களிடம் பெரும் சலசலப் எழுந்தது.

எல்லோரும், வருணுக்குப் பார்த்திருக்கும் மண பெண்ணைத்தான் அவர் அறிமுகப்படுத்தப்போவதா எதிர்பார்த்து காத்திருந்தனர்.

ஆனால், தன் மகளையே அழைத்து வந்தது, அவர்களுக் பல உணர்வுகளை ஏற்படுத்தின... கூட்டத்தில் சலசலப் அடங்க சிறிது நேரம் பிடித்தது.

தங்கள் பெண்ணை, வருணுக்குத் திருமணம் செய் தரவேண்டும் என்று எண்ணியிருந்த பலரின் முகத்தில் வருத்தமு கோபமும் இணைந்து பிரதிபலித்தன.

வருண், அனைவரையும் வரவேற்கும் விதமாக சைகை காட்டிக்கொண்டே கூட்டத்திற்குள் சென்றுவிட்டான்.

முகம் வெளிக்காட்டாவிட்டாலும், மனம் மட்டும் தீவி யோசனையில் மூழ்கி இருந்தது.



அந்தக் கூட்டத்திலிருந்த இன்னொரு தொழிலதிபரின் மகள் ராகினி, அவன் கையைப் பிடித்துக்கொண்டாள். எப்போதுமே எல்லா விழாக்களிலுமே வருணையே சுற்றிவருபவள், ராகினி.

அவனிடம் ஒட்டினாற்போல் நின்றிருந்த அவளிடம், வருண் குனிந்து ஏதோ பேசினான்.

அப்போதுதான் பார்வையை அந்தப் பக்கம் திருப்பிய மதுவுக்கு, அவர்களுடைய நெருக்கம் மனதை விதிர்விதிர்க்கச் செய்தது.

ஏதோ, சொல்லத் தெரியாத கோபம் மனதில் உண்டாகி மனம் சட்டென்று சோர்வடைந்து, தவிப்பானது!

எனக்கென்ன வந்தது என்பது போல், முகம் திருப்பிக் கொண்டாலும், அதையே எண்ணிச் சோர்ந்தாள், மது.

இன்னும், இவனுக்கு எத்தனை பெண் நண்பிகள் இருப்பார்களோ என்ற சிந்தனை, மனதை மிகவும் வாட்டுவதாய் இருந்தது!

நேரே தந்தையின் அருகில் சென்று, அவருடைய கைகளைப் பிடித்துக்கொண்டாள். அவருடைய அண்மையே அவளுக்கு பெரும் பலம் சேர்த்தது!

தன்னருகில் வந்த மகளைப் பாசத்துடன் அணைத்துக் கொண்டார், ராஜசேகர்.

தூரத்திலிருந்து இதைக் கண்டதும், அந்த பாசப் பிணைப்பு, வருணின் கண்களில் கடும் சீற்றத்தை வரவழைத்தது.

அவளை ஒரு இடத்தில் உட்கார வைத்தார். பிறகு, மெதுவாகக் கூட்டத்தில் கலந்து, ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக நலம் விசாரித்தபடி சென்றுகொண்டிருந்தார், ராஜசேகர்.

வருணின் வயதொத்த ஆண்கள் கண்களில் ஆர்வம் தெரிந்தது. அனைவருமே ஆவலுடன் அவளிடம் பழக முயற்சித்தனர்.

ராஜசேகரின் நண்பர் மகன் கிஷோர், அவளிடமே பார்வையைச் செலுத்திக்கொண்டிருந்தான்.

அவள் தனியாக விடப்பட்ட மறுகணமே, அவளின் அருகில் வந்து அமர்ந்தான்.

"மதுமிதா! என்ன அழகு நீங்க... உங்ககிட்டே பேசணும்னு இவ்வளவு நேரமா காத்திட்டு இருந்தேன்" பிதற்றலாய் வந்தது குரல்.

தன்னை அவனிடமிருந்து மீட்பதற்கு யாராவது வருவார்களா

என்று சுற்றிலும் பார்த்தாள், மது. ஆனால், யாருமே அவர்களைக் கவனிக்கவில்லை.

அவன் மதுவின் அழகைப் புகழ்ந்து தள்ளிக்கொண்டிருந்தான். அவளுக்கோ தர்மசங்கடமாக இருந்தது.

வெளியில் புன்னகைத்தாலும், அவன் அறுவையிலிருந்து எப்படித் தப்புவது என்ற யோசனையிலேயே இருந்தாள்.

திடீரென, ஒரு வலிமையான கை, அவளுடைய தோளை மென்மையாக அழுத்தியது... திடுக்கிட்டுத் திரும்பினாள்.

அங்கே- வருண்!

தன் முகத்தில் எந்த உணர்வுமின்றிக் குனிந்து, "அம்மா உன்னைக் கூப்பிடுறாங்க... வா!" என்று கூறிவிட்டு, கிஷோரிடம் திரும்பினான்.

"கிஷோர்! எப்படி இருக்கே? அப்பா வரலையா?" என்ற கேள்வியுடன், மதுவை எழுப்பி நிறுத்தினான்.

முதன்முதலில், ஒரு ஆணின் தொடுகை அவளுக்குள் பெரும் சலனத்தை உண்டுபண்ணுவதாய் இருந்தது!

அவள், ஆண்களை அறியாதவள் அல்ல... கூடப்படித்த ஆண் நண்பர்களிடம் புத்தகங்கள் கொடுக்கும்போதும், அலுவலகத்தில் உடன் வேலை செய்பவர்களிடம் பழகும்போதும், கூட்டத்தில் பயணம் செய்யும்போதும், எத்தனையோ தடவை ஆண்களின் லேசான தொடுதல் நேர்ந்திருக்கிறதுதான்.

ஆனால், அப்போதெல்லாம், இன்று போல் மனம் படபடத்ததில்லை.

முதலில் அவன் கைப்பட்ட இடம் குறுகுறுவென்று... மறுநிமிடம் தீயாய் தகித்தது.

எரியும் சுவாலைகள் அணைந்த பிறகும், சூட்டைப் பரப்பும் கனலைப் போல், அந்த இடம் சூடாகவே இருந்தது.

காதருகில் திடீரென அவனுடைய அடிக்குரல் சீறலாய் கேட்க- என்னவென்று நிமிர்ந்து பார்த்தால், பற்களைக் கடித்தபடி கோபமாக நின்றிருந்தான்.

"யார்கிட்டே, எப்படிப் பழகிறதுன்னு தெரியாதா? அறிவில்லை? ரொம்ப வழியறவன்கிட்டே இருந்து சாமர்த்தியமா எழுந்திரிச்சிப் போகத் தெரியாது?" சீற்றத்துடன் கூறிக்கொண்டிருந்தான், வருண்.



இவன் என்றாவது தன்னிடம் சிரித்து சுமூகமாகப் பேசுவானென்று, ஏக்கம் உண்டு மதுவுக்கு!

அந்தப் பெண்ணிடம் மட்டும் கொஞ்சிப் பேசிக் கொண்டிருந்தான். என்னிடம் மட்டும், தீயாய் காய்கிறானே என்று மனம் பொறாமையில் தகிக்க, "சாரி" என்று முணுமுணுத்துவிட்டு, வேகமாகத் திரும்பிச் சென்றாள்.

ஆனால், அவளை விடாமல் பின்தொடர்ந்து வந்தான், வருண்.

"அவன்கிட்டே போய், பல்லைக் காட்டுறே? அவன் எப்படிப் பட்டவன்னு தெரியுமா, உனக்கு? சரியான பொறுக்கி! அவனை எல்லாம் தூரமா வைக்கணும்... அளவா பழகணும்" சினம் மிகுந்து தெரிந்தது, அவன் குரலில்!

மதுவுக்குத் தாங்கமுடியாத கோபம் வந்தது.

கிஷோரை, அவள் இன்றுதான் பார்த்துப் பேசுகிறாள். அவன் எப்படிப்பட்டவனென்று எப்படி தெரியும்? இவன் மட்டும், அந்தப் பெண்ணிடம் குழைகிறான். இவன் என்ன என்னைக் குறை சொல்லுவது என்ற வீம்பு வந்தது.

"எனக்கு... உங்களை மாதிரி, கிஷோர் மாதிரி, ஆண்கள் கிட்டே, எப்படிப் பழகிறதுன்னு தெரியாது. இந்த மாதிரி விழாவெல்லாம் எனக்குப் பழக்கமில்லை. அதனால, இனிமே உங்களை மாதிரி ஆண்கள்கிட்டே கவனமா நடந்துக்கிறேன்" என்றவள், திரும்பிப் பார்க்காமல் சென்று, வத்சலாவின் அருகில் அமர்ந்தாள்.

அவன் பார்வை, கோபக் குத்தீட்டிகளாய் முதுகில் பாய, அவள் மனம்தான் காயப்பட்டுப்போனது.

வத்சலா ஆனந்தத்துடன் அவளை அணைத்துக்கொண்டார்.

"எங்க அண்ணி மாதிரியே நீ கொள்ளை அழகு, மது!" என்றவர், மற்றவர்களிடம் பெருமையாகக் கூறினார்.

அன்று, விழா முடியும்வரை, வருண் அவளிருந்த பக்கம்கூட வரவில்லை.

விழா முடிந்து வந்து, உடை மாற்றி, ஒப்பனையைக் கலைத்து விட்டு, மது உறங்கச் செல்லும்போது, வெகு நேரமாகி இருந்தது.

மனம் ஏனோ, இரும்புக் குண்டை வைத்து அழுத்தியது போல் சோர்வுடன் தவிக்க- அப்படியே உறங்கிவிட்டாள்.

பிறகு வந்த கனவுகளிலும், வருணுடைய கோபமே மையம் கொண்டது!

## 7

மறுநாள் காலையில் எழுந்தபோது, மணி எட்டாகி இருந்தது.

அவசரமாக எழுந்து தயாராகி, கீழே செல்வதற்காக அறைக் கதவைத் திறந்தால், எதிரே ராஜசேகர் நின்றிருந்தார்.

"தயார் ஆகிட்டியா, மது? இன்னிக்கு நீ வரமாட்டே... ஓய்ஞ்சுபோயிருப்பேன்னு வருண்கிட்ட சொன்னேன். பேசாம ஓய்வெடுத்துக்கடா! நாளைக்கு அலுவலகத்துக்கு வரலாம்" என்றார், வாஞ்சையுடன்.

"இல்லப்பா... நான் கிளம்பிட்டேன். எதுக்குத் தேவை இல்லாம வீட்டிலே சும்மா இருக்கணும்? நானும் வர்றேன்" கூறிய மது, சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினாள்.

அலுவலகத்திற்குச் சென்று, வருணுடைய அறைக் கதவைத் தட்டி, உள்ளே சென்றாள். ஏதோ வேலையாக இருந்தவன், மெல்ல நிமிர்ந்து பார்த்துவிட்டு, முகத்தில் எந்த உணர்ச்சியுமின்றி தலைகுனிந்து வேலையில் ஆழ்ந்தான்.

நேராக அவனெதிரில் சென்று, 'காலை வணக்கம் முதலாளி' என்றால் என்ன செய்வான் என்று தோன்ற, அந்த எண்ணமே இதழ்களில் புன்னகையை வரவழைப்பதாய் ஆனது.

நாதமணியின் அறைக்குள் சென்று, காலை வணக்கம் கூறவும், அவள் புன்னகையுடன் மதுவை வரவேற்றாள்.

இவளாவது, தன் வரவை விரும்புகிறாளே என்ற எண்ணம் தெம்பளிப்பதாய் இருந்தது.

"அந்தப் புது ஒப்பந்தம் பத்தின பத்திரம் எல்லாம் தயார் பண்ணிட்டீங்களா, நாதமணி? இல்லன்னா கொடுங்க! நான் பண்ணுறேன். அப்புறம், உங்க முதலாளிகிட்டே கையெழுத்து வாங்கவேண்டிதையெல்லாம் தனியா எடுத்து வச்சிருந்தேனே... வாங்கிட்டீங்களா?" என்றாள், குறும்புடன்.

அவளிடமிருந்து பதில் இல்லையே என்று திரும்பினால், நாதமணி தலையைப் பிடித்தபடி அமர்ந்திருந்தாள்.



"என்னாச்சு நாதமணி? தலைவலியா? அப்புறம் ஏன் வேலைக்கு வந்தீங்க?" என்றாள், மது– பரிவுடன்.

"நேத்து இராத்திரியிலிருந்தே லேசா காய்ச்சல் மேடம்! அதோடு, விடுப்பும் இல்லை. நீங்க தனியா கஷ்டப்படுவீங்களேன்னு வந்தேன்."

"நீங்க கிளம்பி வீட்டுக்குப் போங்க. மாத்திரை ஏதும் இருந்தா, போட்டுக்கிட்டு படுத்து ஓய்வெடுங்க. இங்கே எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன்."

வற்புறுத்தி அவளை அழைத்துச்சென்று, அலுவலகக் காரிலேயே வீட்டில் விட்டுவரச் சொன்னாள்.

பிறகு, வேலை சரியாக இருந்தது. இடையில் எதையோ எடுத்துச்செல்வதற்கு அந்த அறைக்குள் வருண் வந்ததையோ, ஒருகணம் நின்று அவளை ஆழமான பார்வையுடன் கவனித்து விட்டுச் சென்றதையோ, அவள் அறியவில்லை.

மதியம் சாப்பிடும்போது யோசித்ததில், நேற்று வருண் தன்னைக் கிஷோரிடமிருந்து காப்பாற்றி அழைத்துச் சென்றதற்கு, தான் பேசியது அதிகமோ என்ற எண்ணம் மதுவின் மனதில் முள்ளாய் தைத்தது.

நாதமணி சென்றுவிட்டதால், மதுவே வருணிடம் எல்லா விசயத்துக்கும் நிற்கும் நிலை வந்தது.

ஒரு முடிவுடன், அவனிடம் கையெழுத்து வாங்கச் சென்ற போது, வருண் குனிந்து எதையோ எழுதிக்கொண்டிருந்தான்.

மதுவிற்கு, அவனைப் பெயர் சொல்லி அழைத்துப் பழக்கமில்லாததால் அவனிடம் எப்படி மன்னிப்புக் கேட்பது என்ற யோசனை வந்தது.

நேறறு தன் பெயர் அவன் உதடுகளில் எவ்வளவு இயல்பாய் உச்சரிக்கப்பட்டதென்ற ஆச்சரியம் மனதில் எழ, "என்னை மன்னிச்சிடுங்க" என்று கூறினாள், மெலிதான குரலில்.

வேகமாக நிமிர்ந்த அவன் முகத்தில் கசப்பும், சீற்றமும் கலந்து தெரிந்தன!

"எதுக்கு மன்னிக்கணும்? என்னையும், கிஷோரையும், ஒண்ணா ஒப்பிட்டுப் பேசினியே அதுக்கா? இல்லை... உன்னை, அவன்கிட்ட இருந்து காப்பாத்தினதுக்கு, அவன் எப்படின்னு புரியவச்சதுக்கு, ரொம்ப அழகா நன்றி சொன்னியே...

அதுக்காகவா?" கோபக் குமுறலாய் வந்தது, அவன் குரல்.

அவளுடைய இதழ்கள் துடித்தன. முகம் கோபத்தில் சிவந்தது. ஒன்றும் சொல்லத் தோன்றாமல், உதட்டைக் கடித்து விட்டுப் பேசாமல் திரும்பி வந்துவிட்டாள்.

பதற்றத்துடன் தன் இருக்கையில் அமர்ந்தாள். மூச்சு வாங்கியது.

வருண் தன்னைக் கண்டதுமே ஏன் தீயாய் காய்கிறான் என்று மனம் நொந்தது.

இன்றே தன் தந்தையிடம் பேசி ஓட்டல் நிர்வாகப் பயிற்சியை கற்றுக்கொள்ளலாம் என்ற முடிவில், சிறிது நிம்மதி அடைந்தாள்.

ஒரு முடிவுடன் நிமிர்ந்தபோது, வருணிடமிருந்து அழைப்பு வந்தது.

வருணின் குரல் அழுத்தமாய் ஒலித்தது.

"ஒரு கடிதம் தயார்பண்ணணும். வர்றியா?" என்று காதருகில் கேட்க– குறிப்பெடுக்கும் எண்ணத்துடன் அங்கு சென்றாள்.

இருவருக்குமிடையில் எதுவுமே நடக்காதது போல், வேகமாகக் கடிதத்தை வாசிக்கலானான், அவன்.

அவள் நின்றுகொண்டே எழுத– நாற்காலியில் உட்காரும்படி சைகை செய்துவிட்டு, அவளருகேயே மேசையின் நுனியில் இயல்பாக அமர்ந்துகொண்டான்.

அவன் அருகாமை, மதுவை மிகவும் பாதித்து, படபடக்கச் செய்வதாய் இருந்தது.

அவன் முடித்ததும், வேகமாக எழுந்து செல்ல அவள் முயற்சித்தபோது, மேசையில் இடித்துத் தடுமாறியவளை சுலபமாகத் தாங்கிப் பிடித்து நிறுத்தினான், வருண்.

அவள் முகம், ஆத்திரத்தில் சிவந்துபோனது.

அவனிடமிருந்து தன் கையை அவசரமாக விடுவித்துக் கொண்ட மது, திரும்பிப் பாராமல் சென்றாள். அதை கம்ப்யூட்டரில் பதிவு செய்து எடுத்து வந்து மேசையில் வைத்தபோது, மதுவுக்கு அடுத்த வேலையை தயாராக வைத்திருந்தான், வருண்.

அன்று, மது வேலை முடித்து நிமிர்ந்து, கைகளை சோம்பல் முறித்தபோது, மணி ஐந்தரையாகி இருந்தது.

வருண் கடுமையான உழைப்பாளி என்பதும், தான்



மட்டுமின்றி தன்னிடம் வேலை செய்பவர்களையும் நன்றாக வேலை வாங்கிவிடுவான் என்பதும் புரிந்தது.

ஒரு வேலையில் இறங்கி விட்டால், அவன் இடையில் ஓய்வே எடுப்பதில்லை என்பதும் அன்றுதான் தெரிந்தது, மதுவுக்கு!

அன்றைய நடப்பை மனதில் அசை போட்டுக் கொண்டிருந்த போது, ராஜசேகரிடமிருந்து அழைப்பு. அவளுக்கு முன்பே தொலைபேசியை எடுத்திருந்தான், வருண்.

"என்ன மாமா! உங்க பொண்ணை ரொம்ப வேலை வாங்கிடுவேன்னு பயமா? சரியான நேரத்துக்கு போன் பண்ணிட்டீங்க!" கேலியுடன் வந்தது, அவன் குரல்.

"அலுவலகத்துலே, உன் காரியதரிசியாச்சே... நீயாச்சு அவளாச்சு... நான் அதிலே தலையிடமாட்டேன். ஆனா, வேலை முடிஞ்ச உடனே, அவளை நீ என்கிட்ட ஒப்படைச்சிடணும், வருண்!"

"ஒரு பத்து நிமிடத்துலே, நாங்களே வர்றோம். அங்கேயே இருங்க மாமா!" கூறிவிட்டு வைத்தான், வருண்.

மது யோசனையுடன் நிமிர்ந்தபோது, அவளுடைய அறை வாசலில் கைகளைக் கட்டிக்கொண்டு அலட்சியமாகக் கதவில் சாய்ந்தபடி வருண் நின்ற விதமே, அவளுக்குள் பயத்தை விதைத்தது.

இன்று, இன்னும் அவன்வசம் என்ன பாக்கி இருக்கிறதென்ற எண்ணம், உடலை சிலிர்க்கச் செய்தது!

மது கைப்பையுடன் அவனைத் தாண்டிச் செல்ல முயற்சித்த போது, அழுத்தமாக கையைப் பிடித்துத் தடுத்தான்.

புருவங்கள் நெளிய, "என்ன... ஒரே நாளில் பயந்துட்டியா?

ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 825 |
| ஆறு மாதம் | ரூ. 475 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை-600 007.

மாமாகிட்டே சொல்லி, ஓட்டல் நிர்வாகமே கத்துக்கலாம்னு தோணுதா? நான்தான் சொன்னேனே, உன்னால் முடியாதுன்னு! நீங்க எல்லாம் நுனிவிரலில் அழுக்குப்படாம, உடம்பு வலிக்காம வேலை செய்கிற கூட்டம்!" என்றான், சவாலாக.

தலையைக் குலுக்கிக்கொண்டு நிமிர்ந்தாள், மது.

"நான் ஏன் பயப்படணும்? எனக்கும், செயலாளரா வேலை செஞ்சுப் பழக்கம்தான். அதுவும், இது என் அப்பாவோட நிறுவனம் வேறே! நான் என்னிக்குமே பயந்தது கிடையாது!" என்றாள், கோப விழிகளுடன்.

ஏதோ யோசனையுடன், விலகி வழிவிட்டான், வருண். அவனுடைய கைகளின் பதிவு, அவள் கைகளில் சிவப்பாய் மனதில் பசுமையாய்!!

வேகமாக வெளியே சென்ற மதுவின் மனம் படபடத்தது. தான் எண்ணியதை இவன் எப்படிக் கண்டுபிடித்தான் என்ற கேள்விக்கு விடை தெரியவில்லை.

ஆனால், வேறு வேலைக்குச் செல்லமுடியாதபடி தன் வாயாலே பேச வைத்துவிட்டானே என்ற ஆச்சரியமும் உள்ளத்தில் எழுந்தது!

இவன், மனிதர்களின் பலவீனம் தெரிந்து வெற்றி கொள்பவன் என்று தோன்றியது.

இனி, வருணிடம் கவனமாக இருக்க வேண்டும் என நினைத்துக்கொண்டாள்.

தந்தையைப் பார்த்ததும் மற்றதெல்லாம் மறந்துபோனது. வீட்டுக்குச் சென்றவுடன் வத்சலாதான் ஆரம்பித்தார். "மது பெங்களூக்கு வந்து இத்தனை நாளாகுது. அவளை எங்கேயும் அழைச்சிட்டுப் போகலை. இந்த ஞாயிற்றுக்கிழமை லால்பார்க் போகலாமே!"

"சரிம்மா! போகலாம். வருண்கிட்ட சொல்றேன். இந்த வாரம் வேறு ஏதும் வேலை இல்லாமப் பார்த்துக்கச் சொல்றேன்" என்றார், ராஜசேகர்.

மறுநாளும், நாதமணி வராததால் அலுவலகத்தில் வேலை சரியாக இருந்தது. வருண் நேற்று நடந்துகொண்ட விதம் பற்றி, அப்பாவிடம் அவள் எதுவும் கூறவில்லை.

தொழில் முன்னேற்றம் குறித்து பேசி முடிவு செய்யும்



நேரத்திலெல்லாம், அவளுடைய யோசனைகள் வருணின் பார்வையில், வியப்பையும் மெச்சும் பாவனையையும் ஏற்படுத்தின.

அந்த சனிக்கிழமை 'எல்லாரும் சேர்ந்து நாளை வெளியில் போகலாம்' என்று வத்சலா கூறியது நினைவில் மோதியது.

அன்று வேலை அதிகமாக இருக்க... வருண் தாமதமாகத்தான் வீட்டுக்கு வந்தான். ராஜசேகரிடம், இரவுச் சாப்பாட்டின்போது வத்சலா கேட்டார்:

"ஏன்னா! ஞாபகம் இருக்கா? நாளைக்கு நாம எல்லாரும் வெளியில போகலாம்னு பேசிட்டிருந்தோமே?"

ராஜசேகர், 'ஆம்' என்று தலையசைத்தார். "வருண்! இன்னொரு செயலாளர் பதவிக்கு விளம்பரம் கொடுத்துடலாமா?" யோசனையுடன் வந்தது, அவர் குரல்.

"எதுக்கு மாமா?" என்றான் வருண், கேள்விக்குறியுடன்.

"உனக்கு உதவியா இருக்கத்தான்! நாதமணி விடுப்புல இருக்கா. நிரந்தரமா இன்னொரு பெண்ணை வேலைக்குச் சேர்த்துடலாமே! உனக்கும் பிரச்சினை இல்லாம இருக்கும்."

"எனக்குப் பிரச்சினையே இல்லை மாமா! மது முடியலைன்னு ஏதும் சொன்னாளா? முடியாதவ எதுக்கு அங்கே வரணும்? வீட்டில் இருக்கவேண்டியதுதானே?"

உயர்த்திய புருவங்களுடன், மதுவை ஏளனமாகப் பார்த்து விட்டுத் திரும்பிக்கொண்டான், வருண்.

"ஏய் வருண்... அவளை ஏன் வம்புக்கு இழுக்கிறே! மது என்கிட்டே, ஒண்ணுமே சொல்லலை... நானாதான் கேக்கிறேன். அவளும் சரியான வேகத்துல வேலை முடியாம, நீயும் கஷ்டப்பட வேணாம்னுதான் சொன்னேன். அப்புறம் உன் விருப்பம்!" என்று கூறிவிட்டு, சாப்பிட ஆரம்பித்தார், ராஜசேகர்.

"அப்பா! எனக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. நீங்க கவலைப் படாதீங்க. வேலை, நமக்கு சவால்விடுகிற மாதிரி இருக்கிறது தான் எனக்குப் பிடிக்கும். நாதமணி இருக்கிறவரைக்கும் இருக்கட்டும். அப்புறம், நானே பார்த்துக்கிறேன்" என்று முற்றுப்புள்ளி வைத்தாள்.

ஓரக்கண்ணால் வருணை கவனித்தபோது, அவன் அவளையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான்.

இருவருடைய விழிகளும், கூரிய வாட்களாய், பார்வை போர்க்களத்தில் சந்தித்தன. ஆனால், காயம் மட்டும் அவள் உள்ளக் களத்தில் பெரிதாய் தெரிந்தது.

இரவு வெகு நேரம், உறக்கம் வராமல் புரண்டு அலைபாய்ந்த மது, பிறகு ஓய்ந்துபோய் உறங்க ஆரம்பித்தாள்.

நித்திரை நினைவுகளைத் தள்ளும்படி செய்து, கனவுகளை அவளுக்கு அறிமுகப்படுத்தியது.

## 8

மறுநாள் காலையில் குளித்து, முடியைத் தளரப் பின்னி, தனக்குப் பிடித்த ரோஜா வண்ண சுடிதாரில் புகுந்துகொண்டாள். அதன் தையல் வேலைகளுக்கு ஏற்றாற்போல் சிவப்புக் கற்கள் பதித்த தோடு அணிந்து தயாராகி கீழே வந்தாள், மது.

அவளைக் கண்டதும் வருணின் கண்களில் வந்த சிறு மின்னலையும், குறும்பையும், ஒருவருமே கவனிக்கவில்லை.

அனைவரும் கிளம்பினார்கள். காரில் சென்றார்கள்.

அந்தப் பூங்காவில் நுழைந்ததுமே இதமான குளிரும், விதவிதமான வண்ண மலர்களும், பச்சைப்பசேலென்ற புல்வெளியும், மனதைக் கவர்ந்தன. அனைவரும் சுற்றிப் பார்த்துக்கொண்டே மெல்ல நடந்தபோது, வருண் எல்லாவற்றையும் புகைப்படமெடுத்துக்கொண்டே வந்தான்.

முதியவர்கள் இருவரும், ஒரு மர நிழலில் அமர்ந்து ஓய்வெடுத்துக்கொண்டனர்.

"அப்பா! நான் சுற்றிப் பார்த்துட்டு வர்றேன். நீங்க ரெண்டு பேரும் ஓய்வெடுங்க. திரும்பி இங்கேயே வந்திடுறேன்" கூறிவிட்டுத் தனியாகச் சென்றாள், மது.

வருண், வேறுபுறம் சென்றுகொண்டிருந்தான்.

இயற்கை செய்த மாயம் போல் மனதில் நீண்ட நாட்களுக்குப் பிறகு கவிதை வந்தது, மதுவுக்கு!

ஆம்... பனிக்காற்று, மலர்களுடன் கொஞ்சி விளையாடியது. கவிதைப் பூக்கள், கனவுப் புனலில் மிதக்க ஆரம்பித்தன.

பரந்து விரிந்த மரங்களைக் கண்டால், வேருக்குக் குடைபிடிக்கும் விருட்சங்களாகவும், உயர்ந்த தைல மரங்களைக் காணும்



போது, வானுக்கு வர்ணம் அடிக்கும் தூரிகைகளாகவும், மலர்களைக் கண்டபோது ஆதவன் வரவிற்காகக் காத்திருந்து தவம்புரியும் அழகிகள் போலும் தோன்றியது.

இதழ்களில் உறைந்த மென்மையுடன், எல்லாவற்றையும் ரசித்துக்கொண்டிருந்தவள், யாரோ தன் அருகில் நிற்பது போன்ற உணர்வு ஏற்பட திரும்பினாள்.

வருண், அந்தக் காட்சிகளைப் படமெடுப்பதைக் கண்டதும், இவனுக்குக்கூட ரசனை இருக்கிறதா என்ற ஆச்சரியம் அவள் மனதில் எழுந்தது.

மெல்ல நடந்து சென்றபோது அந்தப் புல்வெளியின் முடிவில் சிறிய குன்றும், மேலே ஒரு மண்டபமும் தெரிந்தன.

அதையே நோக்கிக்கொண்டிருந்தபோது, வருண் அவளருகில் வருவது தெரிந்தது.

"மேலே போகலாமா?" என்று இயல்பாகக் கேட்டவனிடம், 'சரி' என்பது போல் தன்னையே நம்பமுடியாமல் தலையசைத்த மது, அவனுடன் சேர்ந்து ஏறத் தொடங்கினாள்.

பேசாமலே இருவரும் சென்றனர்.

"இந்த மண்டபத்துலே, கொஞ்ச நேரம் உட்கார்ந்துட்டுப் போகலாம்" என்று அவன் உட்காரவும், அவளும் எதிரில் அமர்ந்துகொண்டாள்.

சிறிது நேரம், அங்கு வார்த்தைகளின்றி மவுனமொழியில் கரைய- இருவருக்கும் இடையில் மலரும் நினைவுகளின் மல்யுத்தம் நடந்துகொண்டிருந்தது.

மெதுவாக நிமிர்ந்த மது, வருண் தன்னையே இமைக்காமல் பார்த்துக்கொண்டிருப்பதை உணர்ந்ததும், சட்டென்று முகம் சிவந்தாள்.

அவள் கன்னங்களில் செம்மை பரவக் கண்டதும், அவன் முகம் இளகி, மென்மையாகி, கண்கள் பளபளத்தன.

முதன்முதலில், அவன் கண்களில் சிலிர்ப்பையும், முக மென்மையையும் கண்ட மதுவின் இதயம், ஒரு நொடி தன் இயக்கத்தை நிறுத்தி, பிறகு இயல்பாக துடிக்கத் தொடங்கியது.

தன்னைச் சுற்றி அவன் எழுப்பி இருந்த இரும்புவேலி, பூட்டுக்கள் அகன்று நொறுங்கி விழுந்தாற்போல் ஆனது!

இவன் முகம், இந்த நேரம் எவ்வளவு இளமையாகத் தோன்றுகிறது என்ற ஆச்சரியம் அவள் உள்ளத்தில் எழ, ஏன்

எப்போதும் இறுகிய முகத்துடன் இருக்கிறான் என்ற எண்ணம் கேள்வியாய் உறுத்தியது.

இந்த ஆராய்ச்சி தன்னை ஆபத்தில் கொண்டுசேர்த்து விடும் போல் தோன்றியதால், முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள், மது.

அவளையே கவனித்துக்கொண்டிருந்த அவனுடைய கண்கள் மின்ன, சிறு புன்னகை ஒன்று முகத்தில் குடிவந்தது. பிறகு, அவளின் எண்ண ஓட்டத்தைப் படித்தவன் போல், முகத்தை இறுக்கமாக்கினான்.

"என்ன மது! என்னைப் பார்த்தா பயமா இருக்கா? இல்லை... என்னைப் பார்க்கப் பிடிக்கலையா? ஏன் திரும்பிக்கிறே?"

திடுக்கிட்டுத் திரும்பிய மது, தர்மசங்கடத்துடன் பேச ஆரம்பித்தாள்.

"இல்லை, அப்படியெல்லாம் இல்லை, வருண். நீங்க சிரிச்சா நல்லா இருக்கும்னு நினைச்சேன்" என்று உண்மையைக் கூறிவிட்டு, உதட்டைக் கடித்துக்கொண்டாள்.

ஒற்றைப் புருவத்தை உயர்த்தி, உதடுகள் இரகசியமாய் விரிய வருண் சிரித்தபோது, அவள் விழிக்ள் இன்னும் தழைந்தன. சிறு முறுவலுடன் அவளையே நோக்கின.

"நீகூட, இப்படி இயல்பா அடிக்கடி பேசினால் நல்லாத்தான் இருக்கும். ஆனா, நீ இன்னிக்குத்தானே என்னைப் பெயர் சொல்லி அழைக்கிறே! ஏன் பயம்? நான் என்ன புலியா? சிங்கமா?" கேட்டுவிட்டு இயல்பாகச் சிரித்தான்.

இவனுடைய உண்மையான குணம் என்ன என்ற ஆராய்ச்சி மனதினுள் படர்வதாய்!

தன்னிடம் மட்டுமே முரண்படுகிறானோ என்ற எண்ணம்– கடந்தகாலமாய்!

ஆனால், இந்த நிமிடப் பகிர்தல் இனிமையாய் தோன்ற ஒரு இனம்புரியாத உணர்வு நெஞ்சை ஆக்கிரமித்தது.

வருண், அவளைக் கைதட்டிக் கூப்பிட்டான்.

"அதுக்குள்ளே எங்கே போயிட்டே? என்ன மது... ஊர் ஞாபகமா?"

"ம்... அப்படி ஒண்ணுமில்லை. சும்மா யோசிச்சிட்டு இருந்தேன்" என்றாள், மது ஒரு பெருமூச்சுடன்!



"அப்படியா? எந்த விசயமும் இல்லாம, விட்டத்தைப் பார்த்துப் யோசிச்சிட்டு இருக்கிறவங்களுக்கு எங்க ஊரிலே வேறே ஏதோ பேர் சொல்லுவாங்க... அது உனக்குத் தெரியுமா?"

கண்களில் மட்டுமே தெரிந்த புன்னகையுடன் வருண் கேட்டபோது, மதுவுக்குத் தாங்கமுடியாத சிரிப்பு வந்தது.

அதற்குப் பிறகு இருவரும் இயல்பாகப் பேசிக் கொள்ளலானார்கள்.

பொதுவான விசயங்களில் பேச்சு சென்றபோது, மதுவுக்கும் அவனிடம் பேசுவது இலகுவாகவே இருந்தது.

தன்னுடை. இளமைக்கால அனுபவங்களை, கண்களில் ஒளியுடன் அவனிடம் பகிர்ந்தாள், மது.

ஆர்வத்துடன் எல்லாம் கேட்டுக்கொண்டிருந்தவன், "உங்க பாட்டி எப்படி? ரொம்பக் கண்டிப்பா?" என்றான், கேள்வியாக.

"ம்... ரொம்ப! அதுவும், அம்மா காதல் கல்யாணம் செஞ்சிக் கிட்டதாலே பாட்டிக்கு ரொம்ப பயம்! நண்பர்கள் வீட்டுக் கெல்லாம் அனுப்பமாட்டாங்க. தோழிகளோடு சினிமாவுக்குப் போகக்கூடாது. இதுமாதிரி நிறைய... ஆனா, இப்பப் புரியுது... எல்லாமே நல்லதுக்குத்தான்னு!" "உனக்கு, உங்க அப்பா இருந்ததே தெரியாதுன்னு என் அம்மா சொன்னாங்க. அப்போ, நான் நம்பலை! மாமாவைப் பத்தி உனக்கு எப்பத் தெரிஞ்சுது?"

"பாட்டி இறந்த அன்னிக்குத்தான்! அப்பா உயிரோடு இருக் கிறது தெரிஞ்சவுடனே, எப்படி இருந்தது தெரியுமா? சின்னவயசுல இருந்தே அம்மா, அப்பா ரெண்டு பேருமே இல்லைன்னு சொல்லியே, பாட்டி என்னை வளர்த்துட்டாங் களா? ரொம்பக் கஷ்டமா இருந்தது. படிச்சிட்டிருந்தப்ப, பள்ளியில நடக்கிற எல்லாப் போட்டியிலும் கலந்துப்பேன். பரிசு வாங்கும்போது, யாருமே வரலையேங்கிற ஏக்கம், அழுகை அழுகையா வரும்!"

பழைய நினைவில் அவள் கண்கள் கலங்க– தன்னுள் எதுவோ பிறழ்வது போலிருந்தது, வருணுக்கு!

சிறிது நேர மவுனத்திற்குப் பிறகு அவள் தன்னைப் பற்றிக் கேட்டபோது, அவனும் பேச ஆரம்பித்தான்.

"என்னோட சின்ன வயசுல, எனக்கு ஒரு முன்னோடியா இருந்தவர் மாமாதான். எங்க அப்பா, அடிக்கடி உடம்பு சரியில்லாம இருப்பாங்க. கம்பீரமா என் மனசைக் கவர்ந்தது,





மாமாதான்! அவரைத்தான் நான் எதுக்குமே பின்பற்றி நடப்பேன். என் மனசுல இன்னிக்கு வரைக்கும் பதிஞ்ச முதல் நாயகன்னா, அது மாமா மட்டும்தான்! ஏன்... அவரை, என்னை உருவாக்கின சிற்பின்னுகூடச் சொல்லலாம்!" நெகிழ்ச்சியுடன் கூறினான், வருண்.

மதுவுக்கு அப்போது, வருணைப் பற்றி அப்பா கூறியது அட்சரம்பிசகாமல் நினைவில் படர்ந்தது.

திரும்பவும் கை சொடக்கி அழைத்தான், வருண்.

"ஏய்! என்ன யோசனை?"

நினைவுகள் கலைய நிமிர்ந்தாள், மது.

"அப்பா, உங்களைப் பத்திப் பேசினதை நினைச்சிப் பார்த்தேன்."

ஒருவிதத் தடுமாற்றத்துடன், "மாமா என்ன சொன்னார்?" என்றவனின் புருவங்கள் நெரிந்து, பார்வை எங்கோ பதிந்திருந்தது.

"அவர், உலகமே நீங்கதான்னு சொன்னார். அவரோட பாசத்தைக் கொட்டி உங்களை வளர்த்ததாவும், அவர் வாழ்ந்ததே உங்களுக்காகத்தான்னும், இனிமே, நாம இரண்டு பேரும் அவருக்கு ரெண்டு கண்கள் மாதிரின்னும் சொன்னார்."

இமைகள் இடுங்க, அவள் கூறிய அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த வருண், அவள் முடித்தவுடன் கண்மூடியபடி சிறிது நேரம் அமர்ந்திருந்தான்.

அப்போதுதான், அவன் முகத்தை வெகு அருகில் கூர்ந்து கவனிக்க முடிந்தது, மதுவால்!

அந்தக் கூரான நாசியும், உறுதியான தாடையும், அழுந்த மூடியிருந்த உதடுகளுக்குமேல் அடர்ந்திருந்த மீசையும், இளக்கமில்லாத அந்த முகமும் அவன் பிடிவாத குணத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாய்!

கண்மூடி அமர்ந்திருந்த அவன் தோற்றம், அவளை வெகுவாய் சலனப்படுத்துவதாய்!

அவனுடைய முகத்தை இரு கைகளிலும் ஏந்தி, 'நான் இருக்கிறேன் உனக்கு!' என்று ஆறுதல் கூறவேண்டும் போல் பரபரத்த கைகளை அடக்கிக்கொண்டாள்.

அந்த நிமிடம்- அவளைக் கேட்காமலே பிரிந்து ஓடிய இதயம், வருணிடம் சென்று நின்றது.

அன்றொரு மழை நாளில், அவளுடைய புத்தகத்தினுள் தஞ்சம் புகுந்த மயில் இறகைப் போல், அவன் நினைவுகள் அவள் உள்ளத்தை இதமாய் வருடின.

கண்கள் திறந்து, வருண் அவளைப் பார்த்த பார்வை, பல உணர்ச்சிகளைப் பிரதிபலித்தது. குனிந்து கைக்கடிகாரத்தை ஏறிட்டான், வருண்.

"நேரமாயிடுச்சே... மணி ஒண்ணாயிடுச்சி! பேசிட்டு இருந்ததில் நேரம் போனதே தெரியலை. இப்ப கிளம்பினா சரியா இருக்கும். நேரா, நம்ம ஓட்டலுக்குப் போய் சாப்பிட்டுட்டு கொஞ்ச நேரம் ஓய்வெடுத்துவிட்டு அப்புறமா வெளியே போலாம்" என்றபடி எழுந்து அவளுக்காகக் கைநீட்டினான்.

தன் கை, தனது அனுமதியின்றியே உயர்ந்து அவன் கைகளுக்குள் அடைக்கலமானது கண்டு வெட்கமாக இருந்தது, மதுவுக்கு!

அவளுடைய கையைப் பிடித்து, எழுப்பி நிறுத்தியவன், பற்றிய கையை விடாமலே அழைத்துச்சென்றான்.

மதுவுக்கு, அவன் பிடித்திருந்த இடம் குறுகுறுத்தது.

அவனுக்கு எந்த உணர்ச்சியும் தோன்றவில்லையோ என்று எண்ணும்போதே, மனதில் ஏமாற்றம் விரவிப் பரவியது.

இன்று வருணைப் பார்க்கும்போது, ஏனோ பல பிறவிகளாகப் பார்த்துப் பழகியது போன்ற உணர்வு வந்தது.

உள்ளம் படபடக்க... மெதுவாகத் தன் கைகளை விடுவித்துக்கொண்டாள், மது.

ராஜசேகரும் வத்சலாவும், மகிழ்வுடன் எழுந்தனர்.

"என்ன? எல்லா இடமும் சுத்திப் பார்த்தாச்சா? மதுவுக்குப் பிடிச்சிருக்குதா?" கேட்டுக்கொண்டே உடன் வந்தனர்.

மது தலையாட்டினாள்.

அங்கிருந்து கிளம்பி, ஓட்டலுக்குச் சென்றபோது, அந்தக் கட்டடத்தின் அமைப்பே, அழகான முகப்புடன் மனதைக் கவர்ந்தது.

உள்ளே சென்று அவர்களுக்கென்று முன்பதிவு செய்யப்பட்டிருந்த மேசையில் அமர்ந்தபோது, மது பக்கத்தில் உட்கார்ந்தான், வருண்.

"இன்னிக்கு முக்கிய விருந்தாளி நீதான்! எல்லாமே உன்னோட விருப்பம்தான்... நீயே சொல்லு!" என்றான், குறும்புடன்.



"வருண்... உங்க ஓட்டல்லே எந்தெந்த உணவு வகை நல்லா இருக்கும்னு உங்களுக்குத்தான் தெரியும். நீங்களே சொல்லி விடுங்களேன்."

"ஒரு சின்னத் திருத்தம்... இந்த ஓட்டல் என்னோடதில்லை, நம்மளோடது... புரிஞ்சுதா? அப்புறம்... நான், என்ன வரவழைச்சாலும், நீ சாப்பிடுவியா?" என்றான், சவாலாக.

"ம்... நிச்சயமா சாப்பிடுவேன்" முறுவலுடன் கூறினாள், மது.

இருவரிடையேயும் ஏற்பட்டிருந்த மாற்றத்தைக் கவனித்த ராஜசேகரும், வத்சலாவும் அர்த்தத்துடன் புன்னகைத்துக் கொண்டனர்.

சாப்பிட ஆரம்பித்தபோது, வருண் தேர்வு செய்திருந்த உணவு வகைகள் நல்ல சுவையுடன் இருந்தது மகிழ்வைத் தந்தது.

"நன்றி வருண்! நீங்க வரவழைச்ச எல்லா உணவு வகையுமே ரொம்ப நல்லா சுவையா இருந்தது" என்றாள் மது, அவனைப் பாராட்டும் குரலில்!

பளபளத்த கண்களில் குறும்புடன் வருண் அவளை ஊடுறுவினான். பிறகு "என் பேச்சைக் கேட்டா, எல்லாமே நல்லாதான் நடக்கும்... புரியுதா?" புரியாத குரலில் கூறினான்.

மது லேசாகத் தலையைக் குலுக்கிவிட்டு, புன்சிரிப்புடன் எழுந்தாள்.

இவனுடன் இவ்வளவு இயல்பாகப் பேசிக் கிண்டல் செய்யும்போது, மனதிற்கு எவ்வளவு இதமாக இருக்கிறதென்று ஆச்சரியம் வந்தது.

ஓட்டலில், அவர்களுக்கென்று கொடுக்கப்பட்ட அறைகளில் ஓய்வெடுத்தபோது, வத்சலா உறங்கிவிட்டார். மதுவுக்குத்தான், ஏனோ உறக்கமே வரவில்லை.

மனம் முழுவதும், வருணே நிறைந்திருந்தான். அவன் நினைவு, உள்ளத்தை ஆக்கிரமித்து உருக்கியது.

அவள் மெதுவாக எழுந்து சென்று, சன்னலருகே நின்று வெளியே பார்த்தாள்.

மழை பூஞ்சிதறலாய் தூறல் போட்டு, மலர்களை நனைத்துக் கொண்டிருந்தது.

இதுபோல், தனக்கும் வருணுடைய அன்பின் துளிகள் பரிசாக கிடைக்குமா என்ற ஏக்கத்தில் மனம் தவிப்பானது.

சிறிது நேரம் கழித்து எழுந்த வத்சலாவும் தயாராக, இன்னொரு பூங்காவிற்குச் சென்றனர்.

அங்கு செல்லும்வரை, பொழுது கேலியும் கிண்டலுமாக இனிமையாகச் சென்றது.

அங்கு சென்றவுடனே எங்கிருந்தோ "வருண்!" என்ற அழைப்புடன் வந்து ஒட்டிக்கொண்டாள், ராகினி. அதைக் கண்டதும், மதுவுக்கு உலகமே இருட்டானதைப் போலிருந்தது.

## 9

ராகினி, அவனைவிட்டு விலகவே இல்லை.

அவனுடைய கையைப் பிடித்தபடி, கொஞ்சிப் பேசிக் கொண்டே, உரசியபடி சென்றுகொண்டிருந்தாள்.

மதுவின் மனதின், தீக்குச்சிகளை உரசினாற்போன்ற ஒரு தகிப்பு!

காலையிலிருந்து இருந்த உற்சாகம் வடிந்து, மனம் சோர்வடைந்தது.

அவர்கள் இருவரும் இன்றுதான் மனம்விட்டுப் பேசி, பழக ஆரம்பித்தனர்.

அதற்குள், ராகினி வந்தது மதுவின் மனதை எதிலுமே ஒன்றவிடாமல் செய்வதாய் ஆனது.

வருண் வேறு, அவளைக் கண்டுகொள்ளாதது, கூறிய முள்ளாய் நெஞ்சில் கீறி வலிக்கச் செய்தது.

அவள் ராஜசேகருடன் மவுனமாக சுற்றிக்கொண்டிருந்தாள். மதுவின் முகம் வாடி இருப்பதைக் கண்டுவிட்டார், அவர்.

"என்னடா மது! என்னவோ போல இருக்கே? சோர்வா தெரியுறே! தலை ஏதும் வலிக்குதாடா?" பரிவுடன் கேட்டார்.

மதுவுக்கு, ஒரு மாதிரியாகிவிட்டது. வருண் இல்லை என்றால் என்ன? அப்பாதான் இருக்கிறாரே என்று தோன்ற, மெலிதாகப் புன்னகைத்தாள்.

"நான் நல்லாதான் இருக்கேன்ப்பா! காலையில இருந்து, ஒரே அலைச்சலா இருந்ததா? அதான் கொஞ்சம் சோர்வா இருக்குப்பா!"



"நீ வா மது! நாம காருக்குப் போகலாம்" என்று கூறியவர் டிரைவரை அனுப்பி வருணைப் பார்த்து, அழைத்துவரச் சொன்னார்.

வருணுடன் வந்த ராகினியின் பார்வையில், ஒருகணம் தெரிந்த பொறாமை உடனே மறைந்தது.

மறுகணமே, சிரித்தபடி அவர்களுக்கு விடை கொடுத்தாள், அவள்.

வீட்டிற்கு வந்ததுமே, தான் ஓய்வெடுக்கப்போவதாகக் கூறிவிட்டு, மது தன் அறைக்குச் சென்றுவிட்டாள்.

ஏனோ, எதிலுமே மனம் பதிய மறுப்பதாய் இருக்கிறதே!

நேரே குளியலறைக்குள் சென்று, வெந்நீரில் அலுப்புப் போகக் குளித்துவிட்டுப் பார்த்தால், மாற்றுடை எடுத்துவர மறந்திருந்தாள்.

ஏதோ நினைவுகளின், அலைக்கழிப்பில் ஞாபகம் வரவில்லை.

குளியலறையிலிருந்த பெரிய தேங்காய்ப்பூத்துவாலையை உடலில் சுற்றிக்கொண்டு, மெல்ல அடியெடுத்து வைத்து வெளியே வந்தாள்.

கதவை தாளிடலாம் என்று அவள் வாசலை நோக்கி செல்லவும், அறைக்கதவு மெலிதாக இருமுறை தட்டப்பட்டுத் திறக்கவும் சரியாக இருந்தது.

மது, திடுக்கிட்டு நிமிர்ந்தபோது வாசலில்... வருண்!

அவனுக்கும் ஒரு நிமிடம் ஒன்றுமே புரியவில்லை.

தோளில் வழிந்த கூந்தல், தோகையென இரு தோள்களையும் மறைக்க, நீர்த்துளிகள் வாழைத்தண்டுக் கால்களில் முத்துமுத்தாய் வடிய, முகம் எந்தவித ஒப்பனையுன்றி அப்போதுதான் மலர்ந்த தாமரை மலரைப் போல் புதிதாக, அழகாக இருந்தாள், மது.

இமைகொட்டாமல் அவன் பார்வை தன் தலை முதல் கால்வரை வருடவும், மது வெட்கத்தில் சிவந்துபோனாள்.

தலை குனிந்துகொண்டு, "பிளீஸ்... வருண்!" என்றாள், கிசுகிசுப்பாய்!

ஒரு சிறலான மூச்சுடன், "சாரி" என்று கூறிவிட்டு, வேகமாகத் திரும்பிக் கதவை மூடிவிட்டு வெளியே சென்றான், வருண்.

மதுவின் இதயம் படபடத்தது. வேகமாகச் சென்று, கதவைத் தாளிட்டுவிட்டு, அப்படியே சாய்ந்து, கண்களை மூடிக்கொண்டாள்.

'தன்னைப் பற்றி. அவன் என்ன நினைத்திருப்பான்? அவனைக் கவர்வதற்காகவே, தான் இப்படி நின்றிருந்ததாக நினைப்பானோ?' மனம் பலவிதமாய் அவதியாய் யோசித்தது.

இரவு சாப்பிடச் சென்றால், வருணைப் பார்க்க நேரிடுமே என்று தர்மசங்கடமாக உணர்ந்தாள், மது.

அவனை நிமிர்ந்து பார்க்கும் தைரியம் தனக்கு இருப்பதாக அவளுக்குத் தோன்றவில்லை.

மீண்டும் கதவு தட்டப்பட, உடனே மனம் குலுங்கியது.

ராஜசேகர்தான் மதுவை சாப்பிட அழைத்தார். அவசர அவசரமாக ஆடை மாற்றினாள். மறுக்கமுடியாமல் போனாள். நல்லவேளையாக அங்கு வருண் இல்லை.

'அப்பாடா' என்றிருந்தது மதுவுக்கு! சாப்பிட்டுவிட்டு, சீக்கிரமே வந்து படுத்தாள். ஏனோ உறக்கம் வர மறுத்தது.

இந்நேரம், வருண் ராகினியுடன் சாப்பிட்டுக் கொண்டிருப்பானோ என்ற கேள்வி மனதைக் குடைந்தது. அதே எண்ணமே உறக்கத்தையும் வரவிடாமல் செய்தது.

மது. மறுநாள் காலையில் வழக்கத்தைவிடத் தாமதமாகவே எழுந்ததால், காலையில் உலாவச் செல்ல முடியவில்லை.

தயாராகிய பிறகு, நேரம் இருப்பது நினைவு வர, பால்கனியைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள்.

வானம் கடுமையாக இருந்தது.

சூரியனின் வருகைக்காக மலர்கள் காத்திருந்தன. பூக்களின் வியர்வையாய் பனித்துளிகள்... தென்றலுக்குத் தூதுவிட்டுக் கொண்டிருந்தன.

மனம் லேசாகி, அறைக்குள் வந்தபோது அறைக் கதவு தட்டப்பட்டது.

ராஜசேகர் என்று நினைத்தாள், மது.

"கிளம்பிட்டேன்ப்பா... இதோ வர்றேன்" என்று கூறியபடி, கதவைத் திறந்தாள். அங்கு, வருண் புரியாத ஒரு முகபாவத்துடன் யோசனையாக நின்றிருந்தான்.

அவனைப் பார்த்ததும், மதுவுக்கு நேற்றைய நினைவில் முகம் சிவந்தது.

அழுத்தமான காலடிகளுடன் உள்ளே வந்தான், அவன்.

"சாரி மது! நேத்து, நீயும் சாப்பிட வர்றியான்னு கேக்கிறதுக் காகத்தான் நான் வந்தேன்" தர்மசங்கடத்துடன் கூறிவிட்டு



அவளையே பார்த்தான்.

அவளால் நிமிர்ந்துகூடப் பார்க்க முடியவில்லை.

அருகில் வந்த வருண், ஒற்றை விரலால் அவள் முகத்தை நிமிர்த்தினான்.

"மது! என்மேல கோபமில்லையே? நேத்துதான் ரெண்டு பேரும் இயல்பா பேசவே ஆரம்பிச்சோம். உடனே இது மாதிரி... என்னைப் புரிஞ்சிக்கிட்டேயில்லே?" என்றான், மென்மையான குரலில்.

அவன் யாரிடமும், எதற்கும் கெஞ்சிப் பழக்கமில்லாதவன் என்பதும், எந்த நிலையிலும் தன் சுயகவுரவத்தை விட்டுக் கொடுக்காதவன் என்பதும் மதுவுக்குத் தெளிவாகப் புரிந்ததுதான்.

சிறு முறுவலுடன் நிமிர்ந்து, "கிளம்பலாமா?" என்றாள்.

"சரி" எனத் தலை அசைத்தவனின் முகத்தில், இயல்பான புன்னகை வந்து ஒட்டிக்கொண்டது.

அன்று, நாதமணியும் வேலைக்கு வந்துவிட வேலைகள் சுலபமாக நடந்தன.

இரவின் தனிமை, அன்று மதுவை மிகவும் யோசிக்க வைத்தன.

வருணின் நினைவு கற்கள் விழுந்ததால், கலங்கிய குளம் போலிருந்தது, மனது.

அந்த வார ஞாயிறன்று, பண்ணைவீட்டுக்குச் சென்று வரலாமா என்று வருண்– மது இருவரிடமும் ராஜசேகர் கேட்டிருந்தார்.

சனிக்கிழமை காலையில் கண்விழித்தபோதுதான், அடுத்த நாள் தனக்குப் பிறந்த நாள் என்பதே மதுவுக்கு நினைவில் வந்தது.

அவருக்குத் தன் பிறந்த நாள் நினைவிருக்குமா என்று மனதில் சந்தேகம் வந்தது.

அன்று, புதிதாக வேறு ஒரு செயலாளரை மதுவின் உதவிக் காகத் தேர்ந்தெடுப்பதற்காக வருண் விளம்பரம் செய்திருந்தான்.

நாதமணி, இந்த மாத இறுதியில் வேலையைவிட்டுச் செல்வதால், இந்த ஏற்பாடு.

மதுவும், வருணும் சேர்ந்தே, 'அகிலா' என்ற பெண்ணைத் தேர்ந்தெடுத்தனர்.

அன்று வீட்டிற்கு வந்து சேர்ந்தவுடன் ராஜசேகரும்,

வருணும், தொழில் தொடர்பாக நடந்த இரவு விருந்துக்குச்
சென்றனர்.
ஏனோ, அன்று பாட்டியின் நினைவு அவளுக்குள் அதிகமாய்
உலவியது.
அவளுடைய ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் நகை, சேலை,
சுடிதார் என்று ஏதாவது ஒன்றைப் பரிசாகத் தருவார்.
'நாளை என் பிறந்த நாள்! இங்கு யாருக்காவது அது
நினைவிருக்குமா?' யோசனையுடன் மது இரவு கண் அயர்ந்தாள்.

## 10

இரவு, ஆழ்ந்த உறக்கத்திலிருந்த மதுவுக்குத் திடீரென்று
விழிப்பு வந்தது.
எழுந்து பார்த்தால், அறைக் கதவை யாரோ தட்டும் சத்தம்.
இந்த நேரத்தில் யாராக இருக்கும் என்ற யோசனையுடன்
கதவைத் திறந்தால், வெளியே ஒரே இருட்டு.
கையில் மெழுகுவர்த்தியுடன் வருண் நின்றிருந்தான்.
பின்புறம் ராஜசேகரும், வத்சலாவும்!
வருண் மெதுவாக முன்னால் வந்து, அவளைக்
கைப்பிடித்து வெளியில் அழைத்துச்சென்றான்.
ஒன்றும் புரியாமல் அவள் விழித்தபோது, எங்கோ சுவர்க்
கடிகாரத்தின் ஒலி, குயிலின் குரலாய் குக்கூ... குக்கூ... என்றது.
வருண் புன்னகையுடன் காதோரம் குனிந்தான்.
"பிறந்த நாள் வாழ்த்துகள் மது!" என்றவனின் கையில்,
பெரிய மலர்க்கொத்து.
அதைப் பார்த்ததும் இன்றுதான் புதிதாய் பிறந்தது போல்
ஒரு பரவசம் அவள் உடலெங்கும் பரவியது.
அந்த நேரம், வீடு முழுவதும் எல்லா விளக்குகளும் உயிர்
பெற்று எரிந்தன.
ராஜசேகரும், அவளை வாழ்த்தி, மகிழ்ச்சியுடன்
அணைத்துக்கொண்டார்.
வத்சலா, உச்சியில் முத்தமிட்டு, ஒரு பட்டுச்சேலை பரிசளித்தார்.
நேர் எதிரே ஒரு மேசையில், 'கேக்' வைத்து அலங்காரம்
செய்யப்பட்டிருந்தது.



வருண், மெழுகுவர்த்தியை அந்த மேசையில் வைக்க, மது
'கேக்'கை வெட்டினாள்.
ராஜசேகர், அவளுக்கு ஊட்டிவிட்டு, தங்க நகை
கொடுத்தார். வருணும் ஒரு சுடிதாரை பரிசளித்தான்.
இது எல்லாமே வருணின் யோசனை என்று தெரிந்தபோது,
மதுவின் விழிகள் வியப்பாய் விரிந்தன. மனம் இன்பக் கடலில்
மூழ்கியது.
அந்த நிமிடம், தான் அநாதை இல்லை என்ற உணர்வு
வெகுவாய் தெம்பளித்தது.
வருணிடம் பரிசுக்கு நன்றி கூறினாள், அப்போது,
உதடுகளில் புன்னகையுடன், செல்லமாக அவள் கன்னத்தை
மென்மையாகத் தட்டிவிட்டுச் சென்றான், அவன். அது
மயிலிறகினால் வருடியது போலிருந்தது, மதுவுக்கு!
இதுவரை, சிறு தூறலாய் மனதில் பதிந்திருந்த அவன்
நினைவு, இன்று பெரும் மழைச்சாரலாய் இதயக் கதவை
உடைத்து உட்புகுந்தது.
முகம் சூடாகிச் சிவந்து, அவன் கைப்பட்ட இடம்
'ஜிலுஜிலு'வென்றிருந்தது.
குளித்துத் தயாராகி, பூஜை செய்ய வரச்சொன்னார்,
வத்சலா. அவர் கொடுத்த சேலை, அப்பா கொடுத்த நகை
அணிந்து கீழே வந்தபோது பெரிய விருந்தே தயாராக இருந்தது.
அவளைக் கண்டதும் வருண் முகத்தில் பிரமிப்பும், ஒருவித
ஏமாற்றமும் கலந்து தெரிந்தன.
எல்லோருக்கும் "வணக்கம்" சொல்லிவிட்டு, பூஜை
அறைக்குச் சென்றாள், மது.
அன்று, அவள் அம்மாவுக்கும் நினைவு நாள் ஆனதால்,
படத்துக்கு மாலை போட்டிருந்தாள்.
பூஜை முடித்து வந்து, பெரியவர்களின் காலில் விழுந்து
வணங்கியபோது, வருணும் உடனிருந்தான்.
"நானும் உன்னைவிடப் பெரியவன்தான்... என்கிட்டேயும்
ஆசீர்வாதமெல்லாம் இலவசமாகக் கிடைக்கும்" கிண்டலாகக்
கூறினான்.
"சரி! உங்களுக்கும், அம்பது வயசுக்கு மேலே ஆயிடுச்சிங்கிற
உண்மையை ஒத்துக்கங்க... அப்புறமா, நான் உங்கக் காலில்
விழுறேன்."

"போச்சுடா! இந்தப் பொம்பளைங்களே இப்படித்தான்!
தான் மட்டும் வயசைச் சொல்லமாட்டாங்க... மத்தவங்க
எல்லாரும் சொல்லணும்! எனக்கு வேணாம்ப்பா... நம்ப
முடியாது... அப்படியே காலை வாரிவிட்டாலும் விட்டுடுவீங்க!
அதோடு, காலில் விழறது எல்லாம் எனக்குப் பிடிக்காத
கலாச்சாரம், மது!"

அவன் கூறி முடித்ததும், மதுவின் மனம் மட்டும் வேறு
நினைவில் இரகசியமாய் புன்னகைத்தது.

எங்கோ சென்ற மனதை இழுத்துப் பிடித்து, கடிவாளமிட்டு
அடக்கினாள்.

அவள் ராஜசேகரிடம் கேட்டாள்– "இன்னிக்கு நாம எல்லாரும்
எல்லாரும் பண்ணை வீட்டுக்குப் போறோமாப்பா?"

"ஆமாம்டா! உனக்கு நீச்சல் தெரியுமில்லை. அங்கே, நம்ம
பண்ணை வீட்டில் நீச்சல்குளம் இருக்கு."

"ஊகூம்... தெரியாதுப்பா" என்றபோது முதன்முதலாக
நீச்சல் கற்றுக்கொள்ளாமல் இருந்துவிட்டோமே என்ற
ஆதங்கம் மனதில் எழுந்தது.

திடீரென வருண், "மது! நான் இன்னிக்கு உனக்கு நீச்சல்
கத்துத்தரப்போறேன்" என்றான், கண்களில் சிரிப்புடன்.

அவன் சொ[illegible] தன் மனம் இன்னும் வசமிழந்து
விடு[illegible]
[illegible]
செய்வதாய் இருந்தது.

"எனக்கு அதிலே ஆர்வமில்லை, வருண்!" என்று கூறி
மவுனமானாள், மது.

இதயத்தில், ஓடும் ரெயில் வண்டியின் தடதடப்பு வேகமாய்!

பத்து மணிக்குக் கிளம்பலாம் என ராஜசேகர் கூறி இருந்தார்.
மது, மாடிக்குச் சென்று சேலையைக் களைந்துவிட்டு, வருண்
வாங்கித் தந்த சுடிதாரை அணிந்துகொண்டாள்.

மாதுளம் முத்துக்களின் நிறத்தில், அவள் நிறத்தை அதிகமாய்
காட்டி, அவளுக்கு அழகாய் பொருந்தியது அந்த உடை!

எதற்கும் இருக்கட்டுமென்று இன்னொரு உடையையும்
எடுத்துக்கொண்டு, அறையைவிட்டு வெளியே வந்தாள்.

எதிரே வந்த வருணின் விழிகளில் ஒரு சிநேகமான பாவமும்,
பாராட்டும், கண்ணோரங்களில் சிறு செல்லச் சுருக்கமும்
உண்டாயின.



"எப்படி இருக்கு வருண், உங்களோட தேர்வு?" இதழ்களில்
மென்னகையுடன் கேட்டாள், மது.

வருணின் கண்களில் குறும்பு கொப்பளித்தது.

"என்னோட தேர்வு எப்பவுமே ரொம்ப நல்லாத்தான்
இருக்கும்! போகப் போக, உனக்கே புரியும்!" ஒரு மாதிரிக்
குரலில் கூறினான்.

வருணைப் பார்த்தபோது, சிலநேரங்களில் மட்டுமே புரிந்து
கொள்ளவும், பல நேரம் புரியாத புதிராகவும் தோன்றினான்.

இருவரும் ஒன்றாக, சிரித்துப் பேசிக்கொண்டே படிகளில்
இறங்கி வருவதைக் கண்ட ராஜசேகரின் மனம் நிறைந்தது.

"என் செல்வங்கள் இரண்டு பேரையும், இன்று போல்
என்றுமே ஆனந்தமாக வாழ வை!" என்று மனதுக்குள்
வேண்டினார்.

பண்ணை வீட்டுக்குச் செல்லும் பாதை மிகவும் எழிலுடன்
இருக்க, வழியில் இறங்கி, சிறிது நேரம் இயற்கையை ரசித்து
விட்டு, சென்றனர்.

அன்றைய பயணம் முழுவதுமே வருண் மிகுந்த உற்சாகத்
துடன் இருந்தான்.

தான், இவ்வளவு இயல்பாக அவனிடம் பேசிச் சிரிக்க
முடியும் என்பதையே மதுவால் நம்பமுடியவில்லை.

பண்ணை வீட்டுக்குச் சென்றபோது, அதன் பிரமாண்டமும்,
அற்புதமும் மதுவுக்கு பிரமிப்பு அளிப்பதாய்!

குளுகுளுவென்ற காற்றும், பறவைகளின் இனிய மொழியும்
சேர்ந்து, சூழ்நிலையை இன்னும் ரம்மியமாக்கின.

வீட்டின் உள்ளே நுழையும்முன்பு, வேலைக்காரர்களிடம்
மதுவை ராஜசேகர் அறிமுகப்படுத்தினார்.

அவர்களுடைய முகங்களில், ஆச்சரியமும் ஆனந்தமும்
கலந்து தெரிந்தன. அனைவரும் முன்னால் வந்து, மதுவை
வணங்கினர்.

"நல்லா இருக்கீங்களா சின்னம்மா? ஆச்சரியமா இருக்கு.
நீங்க ஐயாவோட பொண்ணுன்ன உடனே... வருண் சார்
கல்யாணம் பண்ணிக்கப்போறவங்களோன்னு முதல்லே
நினைச்சோம்" என்றனர்.

அவர்களிடம் பேசிவிட்டு உள்ளே சென்றபோது,

"எப்படிப்பா எல்லாருமே நல்லா தமிழ் பேசுறாங்க?" வியப்பாகக் கேட்டாள், மது.

"நம்ம நிறுவனத்துல, ஓட்டல் நிர்வாகத்துல, அப்புறம் இங்கே நிறைய தமிழ் ஆளுங்களைத்தாம்மா வேலைக்கு வைச்சிருக்கோம்!"

பிறகு, அத்தையுடன் சேர்ந்து மது அந்த வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தாள்.

அடுத்து, மதுவையும், வருணையும் அழைத்து, வெளிப் புறத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுவரும்படி அனுப்பிவிட்டு, பெரியவர்கள் ஓய்வெடுத்தனர்.

மரங்கள் அடர்ந்த அந்தப் பண்ணைக்குள் நடக்கும்போது, மதுவுக்கு, பாரதியாரின் 'காணி நிலம்' பாடல்தான் நினைவுக்கு வந்தது.

மனதில் வந்த மகிழ்ச்சி, இதழ்களில் புன்னகையாகக் கசிந்தது.

அந்த நிமிடம், அவளையே பார்த்துக்கொண்டிருந்தான், வருண்.

"என்ன மது... உனக்குள்ளேயே சிரிச்சிக்கிறே?" என்றான், சீண்டலாக.

மெதுவாகத் தலையசைத்தாள், மது.

"இங்கே வந்ததுமே, எனக்குப் பிடிச்ச பாரதியார் பாட்டு தான் ஞாபகம் வருது, வருண்!" என்றாள்.

"எனக்கும் அப்படித்தான்... இங்க வந்தாலே பாரதியோட "காணி நிலம் வேண்டும்"தான் நினைவுக்கு வரும். சத்தமா பாடணும் போல இருக்கும்!"

"உங்களுக்குப் பாரதியாரைப் பிடிக்குமா?" என்றாள், மது ஆச்சரியமாய்!

"ஏன்? தமிழ்க் கவிஞர்கள் எல்லாம், உனக்கு மட்டும்தான் சொந்தமா? அவங்கள்லாம் பொது சொத்தும்மா! நானும், பாரதியாரோட கவிதைகளெல்லாம் படிச்சிருக்கேன்" அழுத்தமாகக் கூறினான், வருண்.

"சாரி!" என்றாள், மது. தன் ரசனைகளுடன் வருணும் ஒத்துப்போவது, மனதின் ஓரம் பரவசமாக இருந்தது.

"இதுக்கெல்லாம் காரணம் யாருன்னு தெரியுமா? மாமாதான்! ஒரு வாத்தியாரை வரவழைச்சி, வீட்டிலேயே எனக்குத் தமிழ்



சொல்லித் தர ஏற்பாடு செய்தவர் அவர்தான்" என்றான்.

இருவரும் பேசிக்கொண்டே நடந்தபோது, வருண் திடீரெனத் திரும்பினான்.

"கடவுளுக்குத்தான் நன்றி சொல்லணும்! இப்படி ஒத்த ரசனை உள்ள ஒரு பெண்ணை எனக்கு..." நிறுத்திவிட்டுத் தொடர்ந்து, "எனக்கு தோழியாகக் கொடுத்ததுக்கு!" என்று முடித்தான்.

ஏன், இடையில் நிறுத்திவிட்டுத் தொடர்ந்தான் என்று யோசிக்கும்போதே, மனதில் ஒன்று தோன்ற, மது கேட்டாள். "அந்தப் பாட்டுக்குத் தகுந்த மாதிரி எல்லாமே இங்கே இருக்கு. ஆனா, ஒண்ணே ஒண்ணு மட்டும்தான், உங்களுக்கு இங்கே இல்லை!" என்றாள், குறும்புடன்.

"என்னது?"

"பாட்டுக் கலந்திடவே, அங்கே ஒரு பத்தினிப் பெண் வேணும்னு பாரதியார் பாடி இருக்காரே, அதைச் சொன்னேன்."

"ஏன்? அந்தப் பெண்ணாக நீ வரமாட்டியா மது, என்னோடு?" என்று, வருண் கண்கள் சுருங்கக் கேட்டபோது, உள்ளம் கொள்ளை போனது மதுவுக்கு! நம்பமுடியாத அதிசயம் நடந்தது போலிருந்தது.

மறுகணமே அவன் இயல்பானான்.

"சும்மா சொன்னேன், மது! தப்பா நினைச்சிக்காதே!" என்று கூறி, அவளை நீச்சல்குளத்துக்கு அழைத்துச்சென்றான்.

அவளுக்குத்தான், மனம் நழுவி இடம்பெயர்ந்தது போல் ஆனது.

## 11

பண்ணையின் பின்புறம், பெரிய நீச்சல்குளமும், அதைச் சுற்றிலும் உயரமான சுவர் எழுப்பப்பட்டு, உள்ளே உடை மாற்றும் அறைகளும் இருந்தன.

அவர்களைக் கண்டதும் புன்னகையுடன் 'வரவேற்றார், வயதான காவல்காரர்.

"வாங்கய்யா! புதுத் தண்ணி, நல்ல இளஞ்சூடா விட்டிருக்கேன்" என்றார், பவ்வியமாய்!

சூரியக்குளியலுக்கு பயன்படுத்தப்படும் சாய்வு நாற்காலிகளில் ஒன்றில், மதுவை உட்காரச் சொல்லிவிட்டு, உடை மாற்றிவர உள்ளே சென்றான், வருண்.

தண்ணீர் தெளிவாகத் தெரிய, அடியில் பதிக்கப்பட்டிருந்த ஆகாய நீல நிறக் கற்கள் சூரிய ஒளியில் அழகாக மின்னின.

நீந்துவதற்கு ஏற்றாற்போல் எளிய உடையிடனும், வெற்று மார்புடனும், விரிந்த தோள்களுடனும், எதிரே கம்பீரமாக வந்துகொண்டிருந்த வருணைக் கண்டதும், ஆண்மையின் இலக்கணமாய் நினைக்கத் தோன்றியது.

மனம் மிகவும் சலனப்படுவதாய்... அவளை விதிர்க்கச் செய்வதாய் ஆனது.

அவன் அருகில் வந்ததும், மது பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

ஏதோ புரிந்தது போல், தனக்குள் சிரித்துக்கொண்ட வருண், அவள் அருகில் பெரிய தேங்காய்பூத்துண்டை வைத்துவிட்டு நீருக்குள் பாய்ந்தான்.

பெரிய சுறா மீனைப் போல் தண்ணீருக்குள் லாவகமாக நீந்திய வருணைப் பார்த்தபோது, தனக்கு நீந்தத் தெரியவில்லையேயே என்ற சோர்வு தழுவியது.

மது, வெளியே சென்று நடக்க ஆரம்பித்தாள்.

மாந்தோப்பில் கூவிய குயில்களையும், கொத்தாய் காய்த்துத் தொங்கிய மாங்காய்களையும் ரசித்துக்கொண்டே நடந்தாள்.

மரங்களின் கிளைகளின் ஊடே, வெள்ளிக் காசுகளாய் பூமியில் இறைந்திருந்த சூரிய வெளிச்சம் அழகாக இருந்தது.

வேலையாட்களின் குடியிருப்பைக் கடந்து சென்றபோது, ஒரு மரத்தில் தூளியில் ஆடிக்கொண்டிருந்த குழந்தை ஒன்று அழ ஆரம்பித்தது.

விரைந்து சென்ற மது, கொழு கொழுவென்றிருந்த அந்தக் குழந்தையை ஆவலுடன் தூக்கினாள்.

தோளில் ஆதரவுடன் சேர்த்தணைத்து, முணுமுணுப்பாய் பேசி சமாதானப்படுத்தினாள்.

அதற்குள் அங்கு ஓடிவந்தாள் அதன் தாய்.

"அவனை இங்கே கொடுத்துட்டு, நீங்க போங்கம்மா... நான் பார்த்துக்கிறேன்" என்றாள், பதற்றமாக.

"பரவாயில்லை... இவனை நான் பார்த்துக்கிறேன். நீங்க





போய் வேலையைப் பாருங்க" என்றாள், மது.

"ஒரு நிமிடம் இங்க கொடுங்கம்மா" என்ற அந்தப் பெண், குழந்தையை வாங்கிச் சென்று, முகம் துடைத்துக் கொடுத்தாள்.

அதற்குள் சமாதானமாகி இருந்த அந்தக் குழந்தை, கள்ளங்கபடமின்றி சிரித்தது.

"இவன் பெயர் என்ன?" கேட்டாள், மது.

"குகன்!" என்றாள், அந்தப் பெண்.

நல்ல அழகான பெயரென்று தோன்ற, அவனைத் தூக்கிக் கொண்டு நீச்சல்குளத்தை நோக்கித் திரும்பிச் சென்றாள்.

வருண், அப்போதும் நீந்திக்கொண்டிருந்தான்.

அவளைக் கண்டவுடன் உற்சாகமாகக் கையசைத்துவிட்டு, தண்ணீருக்குள் புகுந்தவன், வெகு நேரம் கழித்தும் வெளியே வரவே இல்லை.

பிறகு, அப்படியே வெளியே வந்து, நீரின்மேல் அசைவின்றி மிதக்க ஆரம்பித்தான்.

உடனே, மதுவுக்குள் பயப்பந்து எழும்பியது.

குகனை, இறுகப்பற்றிக்கொண்டு, "வருண்... வருண்..." என்று கத்தினாள்... கதறினாள்.

கண்கள் கலங்கி, நீர்த்துளிகளை உற்பத்தி செய்தன.

அப்போது– திடீரெனத் திரும்பி, தண்ணீருக்குள் மூழ்கி எழுந்து, 'ஓ'வென்ற கூச்சலுடன் வெளியே வந்தான், வருண்.

மதுவின் கலங்கிய கண்களையும், பயந்த முகத்தையும் பார்த்துவிட்டு, விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தான்.

அவன், வேண்டுமென்றே தன்னை பயமுறுத்தி இருக்கிறான் என்பது அப்போதுதான் புரிந்தது.

கோபத்துடன் வேகமாகத் திரும்பி சென்றாள், மது.

வருண் வேகமாக வந்து, அவளைப் பிடித்து நிறுத்தினான்.

"ஏய் மது... பயந்துட்டியா?" என்று கேட்டுவிட்டுத் திரும்பவும் சிரித்தான்.

வெகு அருகில், அவனுடைய சிரிப்பைக் கண்டதும் மதுவின் கோபம் பறந்துபோனது.

அப்போது, அவன் முகம் மிகவும் இயல்பாகிவிட, அந்தச் சிரிப்பு குகனின் புன்னகையைப் போலவே இருந்தது.

மது, வியப்புடன் அவனையே கண்கொட்டாமல் பார்த்தாள். மறுகணம், கோபமாகத் திரும்பிக்கொண்டாள்.



"உங்கக்கூட இனிமே பேசவேபோறதில்லை. நான் எவ்வளவு பயந்துட்டேன் தெரியுமா?" வீம்புடன் தொடர்ந்து எதிர்புறம் நடக்கலானாள்.

"சரி சரி... இனிமே, இப்படி உன்னை பயமுறுத்த மாட்டேன்" என்றவன், "அதெப்படி...? வருண்... வருண்..." என்று, அவள் பயந்த மாதிரியே நடித்துக் காட்டினான்.

"சே... உங்களையெல்லாம் திருத்தவே முடியாது... நான் போறேன்" மது கோபமாகக் கிளம்பவும், வருண் அவள் கைப்பிடித்து தடுத்தான்.

"நீ கிளம்புறதா இருந்தா, நானும் தயார்தான்! இந்தக் குழந்தையைக் கொடுத்துட்டு வா... போகலாம்! எனக்குப் பசிக்குது" கூறிவிட்டு, உடை மாற்றுவதற்குச் சென்றான்.

மனம் அவனுடைய முதல்வரியில் தன்னை இழந்து தவித்தது.

வீட்டுக்குள் வருணும் மதுவும் நுழையும்போது, ராஜசேகர் யாருடனோ 'செல்'பேசியில் பேசிக்கொண்டிருந்தார்.

மதியம், மதுவின் பிறந்த நாளுக்காக பிரமாதமாக விருந்து தயாராகி இருந்தது.

சாப்பிட்ட பிறகு, தன் அறைக்குச் சென்று படுத்தாள், மது.

அப்போது, வருணின் சிரிப்பே நினைவுக்கு வந்து, அவளை உறங்கவிடாமல் செய்தது.

மாலையில் எழுந்ததும், வேறு உடை மாற்றித் தயாராகி, ராஜசேகரைப் பார்க்கச் சென்றபோது, வருணும் அங்கிருந்தான்.

காப்பியைப் பருகிக்கொண்டு இருந்தவனின் கண்களில், இன்னும் தூக்கம் கலையாமல் இருந்தது.

ராஜசேகர், தன் பெட்டியிலிருந்து பெரிய உறைகளை எடுத்தார். இருவரிடமும், ஆளுக்கு ஒன்றைக் கொடுத்துவிட்டு, சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டார்.

"என்னப்பா இது?" என்றாள், மது.

"பிரிச்சிப் பாரும்மா". என்றபடி சாய்ந்து, கண்களை மூடிக்கொண்டார்.

தன் சொத்துகளை, இரண்டாகப் பிரித்து மதுவுக்கும், வருணுக்கும் சமமாக எழுதி இருந்தார், ராஜசேகர்.

நாளையிலிருந்து இந்த மாற்றம் சட்டரீதியாகச் செயல்பாட்டுக்கு வரும் என்றிருந்தது.

மதுவுக்கு முதலில் புரியவில்லை.

இதை எதிர்பார்க்காததால், பதற்றத்துடன் நிமிர்ந்தான்.

“இப்ப எதுக்குப்பா இதெல்லாம்? தயவுசெஞ்சு இப்படி பிரிக்க வேண்டாம்ப்பா” என்றாள்.

வருணும், யோசனையுடன் நிமிர்ந்து ராஜசேகரைப் பார்த்தான்.

“இதுக்கு இப்ப என்ன அவசரம், மாமா? ஏன் இப்படி செஞ்சீங்க? சொத்துக்காக, நாங்க ரெண்டு பேரும் சண்டை போட்டுப்போம்னு நினைச்சீங்களா?” அவன் குரலில் கோபமும், ஆதங்கமும் கலந்து தெரிந்தன!

”வருண்! அதெல்லாம் இல்லைப்பா! எனக்கு நீங்க ரெண்டு பேருமே அன்பா, ஒற்றுமையா இருக்க்ணும். நம்ம சொத்தெல்லாம் எக்காரணம் கொண்டும் பிரிஞ்சிடக்கூடாது. அதுக்கு, நீங்க ரெண்டு பேரும் பொறுப்போடு இருக்கணும். தொழிலும், இன்னும் நல்லா வளரணும். அவ்வளவுதான்!” என்று முடித்தார், ராஜசேகர்.

மதுவின் முகத்தில் குழப்ப ரேகைகள்... வருணுடைய முகத்திலும் சிந்தனைக் கோடுகள் தெரிந்தன.

இருவருமே அவரவர் எண்ணங்களில் உழன்று கொண்டிருந்த போது, ராஜசேகரும் வத்சலாவும் ஒருவரை ஒருவர் அர்த்தத்துடன் நோக்கினர்.

இளம் உள்ளங்கள்தான் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தன.

மறுபக்கம்– ராகினியோ, வேறுவிதமாக யோசித்துக் கொண்டிருந்தாள்.

அன்று மதியம், தன் தந்தை கூறிய உயில் பற்றிக் கேட்டதும், அவள் மனம் பொறாமையில் பற்றி எரிந்தது.

“ஏம்ப்பா... ஏன் இப்படி எழுதி இருக்கார்?” என்றாள், முகத்தை ஒரு மாதிரி வைத்துக்கொண்டு.

“இரண்டு பேருக்கும் கூடியசீக்கிரம் கல்யாணம் பண்ணி வச்சிடுவார்னு தோணுதும்மா! அதனாலதான் அவன் இப்படி செஞ்சிருப்பான்னு நினைக்கிறேன். இனிமே எல்லாமே சுலபமா முடிஞ்சிடுமே!” என்றார், சிவப்பிரகாசம்.

திடுக்கிட்டு நிமிர்ந்தாள், ராகினி.

வருணைத் திருமணம் செய்துகொண்டு, கோடீஸ்வரியாக லாம் என்று பெரிய திட்டம் இருந்தது, அவள் மனதில்!



தன் தந்தை அப்படி கூறியது, அவளை மேலும் நிலை குலையச் செய்தது.

அவள் எதுவும் புரியாமல் தத்தளிக்க– அவர் தொடர்ந்தார்.

“வருண்– மது கல்யாணத்தை சீக்கிரமே முடிச்சிட்டா நல்லதுன்னு, அன்னிக்கு ராஜ் சொன்னான். இன்னிக்கு இப்படி முடிவெடுத்திருக்கான். எல்லாம் நல்ல விசயமாத் தான் இருக்கும்” என்றபடி எழுந்து சென்றார்.

ராகினியின் மனம், இந்தத் திருமணத்தை எப்படி நிறுத்தலாமென்று சதி செய்ய ஆரம்பித்தது.

நெஞ்சம் பொறாமையில் தகிக்க, மதுவிடம் தனியாகப் பேச பரபரத்தாள். தந்தையிடம் கூறி, அவர்களைத் தன் வீட்டுக்கு விருந்துக்கு அழைக்க முடிவு செய்தாள்.

மதுவைப் பார்த்து, விதி வெற்றிச் சிரிப்பு சிரித்தது.

## 12

**ம**றுநாள் காலையில்– அகிலாவுக்கு, வேலை விபரங்களை சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தாள், மது.

அப்போது, தொலைபேசி அழைத்தது.

மது எடுத்து, இயல்பாக பேசியபோது, எதிர்முனையில் ‘ராகினி’ என்று பதில் வந்தது.

வருணுக்குத் தொடர்பை இணைத்துவிட்டு, வேலையில் ஈடுபட்டபோது, இதயம் எதிலுமே ஒன்ற மறுத்தது.

‘இருவரும் என்ன பேசிக்கொண்டிருப்பார்கள்?’ என்ற எண்ணமே மனதை அலைக்கழிப்பதாய்!

என்ன சமாதானம் சொன்னாலும், உள்ளம் அதை ஏற்க மறுத்தது.

அப்போது, ஒரு பொன்மொழி நினைவுக்கு வந்தது.

“மகிழ்ச்சியின் இரகசியம், நாம் விரும்புவதைச் செய்வது இல்லை... நாம் செய்வதை, விரும்புவதில் இருக்கிறது!”

அதையே மனதில் உருப்போட்டபோது, சிறிது நேரத்தில் மதுவின் கவனம் வேலையில் பதிந்தது.

ராகினியின் நினைவு, தற்காலிகமாக, ஞாபக அடுக்கு க்ளிலிருந்து விடுபட்டுச் சென்றது!

அவளுடைய எளிமையும், நட்புணர்வும், முதலாளி மகள் என்ற பந்தா இல்லாமல் பழகிய விதமும், அகிலாவுக்கு அவள் மீது பிரியம் கலந்த மரியாதையை ஈட்டித் தந்தன.

மது, வருணுடைய அறைக்குச் சென்றபோது, அவன் சிரிப்பில் ஏதோ வித்தியாசம் தெரிந்தது.

அவனிடம் கையெழுத்து வாங்கிவிட்டுத் திரும்பும்போது, கதவைத் தட்டிவிட்டு ராகினி உள்ளே வந்தாள்.

பொருந்தாத குட்டைப் பாவாடையும், மேலே இறுக்கமான பனியனும் அணிந்துவந்த அவளது தோற்றம், அருவருப்பை அளிப்பதாய்!

வருன் பார்வை, அவள் மீது எப்படிப் படருமோ என்று யோசித்தாலே, தலைவலிக்கும் போலிருந்தது.

"அகிலா! நாலு காப்பி சொல்லுங்க... அங்கே, வருணோட தோழி ராகினி வந்திருக்காங்க. அவங்களுக்குக் கொடுத்துட்டு, நமக்கும் எடுத்துட்டு வரச்சொல்லுங்க... ஒரே தல்லைவலியா இருக்கு!" என்றாள், மது.

சிறிது நேரத்தில் காப்பி வந்தவுடன், பருகிக்கொண்டே வேலையில் ஈடுபட ஆரம்பித்தாள். மதியம் அவளைத் தேடி உள்ளே வந்தான், வருண்.

"மது! இன்னிக்கு எனக்கு சாப்பாடு வெளியேதான். மாமா கிட்ட சொல்லிடு! ஒரு முக்கியமான விசயமா சிவப்பிரகாசம் மாமாவைப் பார்த்துப் பேசணும். அவரோடவே, ஓட்டலில் சாப்பிட்டுட்டு வந்துடுவேன். நான் வர்றேன்!" கூறிவிட்டு, வெளியே சென்றான்.

அன்று மதியம்- மதுவுக்கு ஏனோ சாப்பாடு சுவைக்கவே இல்லை.

தன் அப்பாவுடன், ராகினியும் வந்திருப்பாளோ என்ற எண்ணமே அவளை அலைக்கழிப்பதாய் இருந்தது!

ஆனால், ராஜசேகரின் அன்பான வார்த்தைகள் இதம் தரும் மருந்தாய் இருந்தன.

மது சாப்பிட்டு வந்து வெகு நேரமாகியும் வருண் வரவில்லை.

வேலையில் மூழ்கி இருந்த மதுவிடம் வந்தாள், அகிலா.

"வருண் சார் வந்துட்டார்... உங்களை வந்து பார்த்துட்டுப் போனார். நீங்க வேலையில் மும்முரமா இருந்ததாலே போயிருப்பாருன்னு நினைக்கிறேன்" என்றாள்.



"சரி! நான் போய்ப் பார்த்துட்டு வரேன்" கூறியபடி எழுந்த மது, வருணின் அறைக்குச் சென்றாள்.

ஒரு காசோலை விசயமாகவும் பேசவேண்டி இருந்தது.

அறையில், வருண் மிகவும் உற்சாகமாக இருப்பதுபோல் தோன்றியது.

"மது! இன்னிக்கு ஒரு பெரிய வியாபார ஒப்பந்தம், சிவப்பிரகாசம் மாமா உதவியோடு முடிஞ்சுது. நான் இன்னிக்கு ரொம்ப சந்தோசமா இருக்கேன்!" கூறிக்கொண்டே வந்தவன் அவள் முகத்தைப் பார்த்து நிறுத்தினான்.

மகிழ்ச்சியுடன் அவன் கூறுவதைக் கேட்டாலும், இவள் முகம் சிவந்து சோர்ந்திருந்தது.

"என்ன மது? ஏன் ஒரு மாதிரி இருக்கே? உடம்பு சரியில்லையா?" அக்கறையாகக் கேட்டுவிட்டு, நெற்றியில் விரல்களைப் பதித்தான்.

மதுவுக்குக் கண்களைக் கரித்துக்கொண்டு வந்தது.

அடக்கிக்கொண்டு, "லேசாக தலைவலி அதான்" என்றாள்.

"அப்புறம் ஏன் மது, வேலை செய்துகிட்டு இருக்கே? வா... டாக்டர்கிட்ட போகலாம்."

"எதுக்கு? சின்ன தலைவலியை பெரிசுபடுத்துறீங்க. எனக்கு ஒண்ணுமில்லை! சரியாயிடும். நான் இங்கேயே ஓய்வு எடுத்துக்கிறேன். மாத்திரை போட்டுப் படுத்தா சரியாயிடும்."

ஆனால், அவளவிடவில்லை. அவளை, ஓய்வெடுக்கும் அறைக்கு அழைத்துச் சென்றான். தலைவலி மாத்திரையும், தைலமும் கொடுத்துப் போட்டுக்கொள்ள சொல்லிவிட்டு வேலையை பார்க்கச் சென்றான்.

வருணுடைய உற்சாகத்துக் காரணம் ராகினியோ என்ற எண்ணமே மதுவை அதிகம் வதைப்பதாய் ஆனது.

தலையைக் குலுக்கி, அந்த நினைவுகளைக் கலைத்து விட்டுக் கண்ணயர்ந்தாள்.

மது மீண்டும் கண் விழித்தபோது, அருகில் ராஜசேகர் அமர்ந்திருந்தார். அவர் முகத்தில் கவலை ரேகைகள் தெரிந்தன.

அவள் தலையை மென்மையாக வருடினார். "ஏன் மது? தலைவலிச்சா என்கிட்ட சொல்லவேண்டியதுதானே? இங்கே வந்து யாருமே இல்லாத மாதிரி, தனியா படுத்திருக்கியே"

என்றார். அவர் குரலில் வருத்தம் தெரிந்தது.

"எனக்கு ஒண்ணுமில்லைப்பா... லேசான தலைவலிதான்! அதைப் போய் நீங்களும் வருணும் ஏன் இவ்வளவு பெரிசு பண்ணுறீங்கன்னு எனக்குத் தெரியலை... இப்ப நான் நல்லா இருக்கேன். நாம வீட்டுக்குப் போகலாமா?"

மது தலை சாய்த்துக் கேட்டபோது தன் மனைவியின் நினைவு வந்தது, அவருக்கு!

வீட்டுக்குக் கிளம்பியதும், வழியனுப்பிய வருணின் பார்வையில் தெரிந்ததை மதுவால் உணர முடியவில்லை.

வீட்டுக்குள் நுழைந்தவுடனே விபரம் அறிந்த வத்சலா, அவளுக்கு திருஷ்டி சுற்றிப் போட்டுவிட்டு, சாப்பிட்டு படுக்கும்படி சொன்னார்.

அன்று மது, சீக்கிரமே கண்ணயர்ந்துவிட்டாள்.

அவள் அறைக்குள் வந்த வருண், இமைக்காமல் அவளையே பார்த்துக்கொண்டு நின்றதையோ, அவள் தலையை அன்புடன் கோதிவிட்டு, ஒரு பெருமூச்சுடன் வெளியே சென்றதையோ மது அறியவில்லை.

மறுநாள் காலையில் எழுந்தபோது, எல்லாம் சரியாகி, புத்துணர்வுடன் இருந்தாள், மது.

அன்று மாலையில் கோயிலுக்குப் போகலாம் என்று வத்சலா கூறி இருந்தார்.

அலுவலகத்திலிருந்து மதுவும், ராஜசேகரும் சீக்கிரமே வீடு வந்துவிட்டனர்.

கோயிலுக்குப் போகவேண்டும் என்பதால் குளித்துவிட்டு, சந்தனமாக சரிகைக் கரையிட்ட சேலை அணிந்து, தலை நிறையப் பூக்களுடன் மது தயாரானபோது வருண் வந்து கொண்டிருந்தான்.

மதுவைக் கண்டதும் அவன் கண்களில் ஒரு மின்னல் அவன் கண்களில் பளிச்சென்று வந்துபோனது.

"நானும் உங்களோடு வரேன்... கோயிலுக்குத்தானே? ஒரு பத்து நிமிடம் இருங்க! வந்திடுறேன்" என்று கூறிச் சென்றான்.

பிறகு, அனைவரும் கோயிலுக்குச் சென்று, அர்ச்சனை செய்தனர்.

இறைவன் சந்நிதியில் வருணுக்குப் பக்கத்தில் நின்று, தன்



ஆத்மார்த்தமான வேண்டுதலை வைத்தபோது, மனம் மிகவும் நிறைவாக இருந்தது, மதுவுக்கு!

காரில் திரும்பி வரும்போது, வழியில் ராஜசேகரின் 'செல்' ஒலித்தது. அவர் பேசிவிட்டு, சொன்னார்

"என் நண்பன் சிவா பேசினான். இந்த ஞாயிற்றுக்கிழமை, நம்ப எல்லாரையும் அவன் வீட்டுக்கு விருந்துக்குக் கூப்பிட்டான். வருண், நீதான் முக்கிய விருந்தாளின்னு சொல்லச் சொன்னான்" என்றார், சிரித்தபடி.

அந்த ஞாயிறு– மாலை மது இளம் கத்தரிப்பூ நிறத்தில் உடல் முழுவதும் வெள்ளி நிற சரிகை இழையோடத் தையல் வேலை செய்திருந்த சேலையும், பொருத்தமான நகைகளும் அணிந்து தயாரானாள்.

ராகினிக்காகச் செய்யப்பட்டிருந்த அலங்காரம், அற்புதமான அழகை மதுவிடம் வெளிக்கொணர்வதாய் தெரிந்தது!

அவள் கீழே இறங்கி வந்தபோது, வத்சலா ரசித்துப் பாராட்டினார்.

"இந்த அலங்காரத்திலே, ரொம்ப அழகா இருக்கே மது... ஒரு நிமிடம் இரு!" என்று கூறிவிட்டுச் சென்றார்.

அவர் திரும்பி வந்தபோது, அவருடைய கைகளில் மதுவின் சேலை நிறத்திலே ஒரு அழகிய ரோஜா இருந்தது. அவளைத் திரும்பச் சொல்லி, அழகாக வைத்துவிட்டார், அவர்.

மதுவைக் கண்டதும் வருணால் இமைகளைத் தட்டி விழிக்க முடியவில்லை.

ராஜசேகர், அவள் உச்சியில் முத்தமிட்டார். "அப்படியே, உன் அம்மா மாதிரியே இருக்கேடா நீ... நான் இப்ப ரொம்ப மகிழ்ச்சியா இருக்கேன், மது!" உணர்ச்சி பொங்கும் குரலில் கூறினார்.

"போங்கப்பா!" என்று சிணுங்கலாகக் கூறியபடி பாச சலுகையுடன் அவர் தோளில் சாய்ந்துகொண்ட மதுவை, வருணின் பார்வை திருடி, வருடிச் சென்றது.

சிவப்பிரகாசத்தின் வீடு மிகவும் அழகாக இருந்தது.

வாசலுக்கே வந்து வரவேற்ற அந்தத் தம்பதியை, முதல் பார்வையிலே மதுவுக்குப் பிடித்துப்போனது.

அனைவரும் உள்ளே சென்றதும், அவரின் மகனை

மதுவுக்கு அறிமுகம் செய்தார், ராஜசேகர்.

"இது சிவாவின் பையன்... ராஜேஷ்! தொழிலில் தன் அப்பாவுக்கு உதவியா இருக்கான்" என்றவர், அவனிடம் திரும்பினார்.

"இது என் பெண் மது! இப்ப வருணுக்கு செயலாளரா நம்ம நிறுவனத்துலதான் வேலைப் பழகிட்டு இருக்கா" என்று அறிமுகப்படுத்தினார்.

"வருண்" என்றபடி ஆவலுடன் வந்த ராகினி, அவனிடம் ஒட்டிக்கொண்டாள்.

வத்சலா, ராகினியின் அம்மாவுடன் பேசிக்கொண்டிருந்தார். ராஜசேகர், சிவப்பிரகாசத்துடன் பேச, மது மட்டும் ராஜேசுடன் தனித்துவிடப்பட்டாள்.

அவன் கண்களில் ஒருவித போதை தெரிந்தது. குடித்திருப்பானோ என்ற சந்தேகம் எழ, வேகமாக முன்னே சென்று அத்தையின் அருகில் அமர்ந்துகொண்டாள்.

பின்னால் வந்து அவளருகில் அமர்ந்தான், ராஜேஷ்.

"அன்னிக்கு, உங்களை அறிமுகப்படுத்தின விழாவுக்கு என்னால வரமுடியலை. ஒரு நண்பன் கல்யாணத்துக்காக சென்னைக்குப் போயிட்டேன். அம்மா சொன்னாங்க... நீங்க ரொம்ப அழகுன்னு! ஆனா, இவ்வளவு அழகுன்னு தெரியாது" என்று வழிந்தான்.

மது மெதுவாக முறுவலித்துவிட்டு, இவன் அறுவையிலிருந்து எப்படித் தப்புவது என்ற யோசனையுடன் திரும்பிப் பார்த்தாள்.

அந்த நிமிடம் வருண் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவன் முகம், துடைத்துவிட்டாற்போல உணர்ச்சியற்று இருந்தது.

அந்தப் பார்வையிலிருந்து வெறுப்பா அல்லது கோபமா என்று புரியவில்லை.

ஆனால், அந்தப் பார்வை மதுவின் மனதில் இருந்த நிம்மதியை பறித்தது.

ராகினியின் அம்மா, தன் மகளை அழைத்தார்.

அவளோ, "போங்கம்மா... அங்கே வந்தா சமையல், கல்யாணம் இதைப்பத்திதான் பேசி அறுப்பீங்க! நான் வருண் கூடப் பேசிட்டிருக்கேன்" என்று திரும்பிக்கொண்டாள்.

அந்த அம்மா ராஜேசிடம் வந்தாள்.



"மதுவுக்கு, நீயாவது நம்ம வீட்டை சுத்திக்காட்டு, ராஜேஷ். மது... போம்மா!" என்றார்.

வத்சலாவிடம் கேட்டபோது அவரும், "போயிட்டு வா, மது" என்றார்.

பெரியவர்களின் பேச்சுக்கு மதிப்புக் கொடுத்து, அவனுடன் சென்ற மதுவுக்கு, 'தான் ஏன் வந்தோம்?' என்றிருந்தது.

அந்த அளவுக்கு அவள் அழகை வரிவிடாமல் புகழ்ந்து தள்ளிகொண்டிருந்தான், ராஜேஷ்.

முன்னறையில் ராகினியுடன் பேசிக்கொண்டிருந்த வருண், இயல்பாகத் திரும்பியபோது, மது அங்கு இல்லை.

அதைவிட, ராஜேசுவரியும் இல்லை. என்பதுதான் அவனை அதிகம் தாக்கியது.

அங்கிருந்தபடியே வத்சலாவிடம்- 'மது எங்கே?' என்று சைகையில் கேட்டான்.

வீட்டைச் சுற்றிப் பார்க்கச் சென்றிருப்பதாக அவர் ஜாடையில் தெரிவிக்கவும், வருணுடைய முகம் மாறியது.

இதை எல்லாம் கவனித்துக்கொண்டிருந்த ராகினியின் மனம், பொறாமையில் திகுதிகுவென்று எரிந்தது.

அதற்குள்-

"வா ராகினி! நாமும் வீட்டை சுத்திப் பார்க்கலாம்" என்று எழுந்தான்.

கோபத்தை அடக்கிக்கொண்டு முகம் மாறாமல் காத்தபடி, வரவழைத்த சிறுபுன்னகையுடன் நகர்ந்தாள், ராகினி.

மதுவை ஒவ்வொரு இடமாக அழைத்துச் சென்ற ராஜேஷ், அவளைத் தன் அறைக்கும் அழைத்துச் சென்றான்.

"என்னோட அறை எப்படி இருக்குன்னு பார்த்துச் சொல்லுங்க மது!" என்றான்.

அங்கு அவள் எதிர்பார்த்திராதவகையில் அரைகுறை ஆடைகளில் விதவிதமான விளம்பரப் பெண்களின் புகைப்படங்கள் சுவரெங்கும் நிறைந்திருந்தன.

அவை- மதுவின் மனதை பயமுறுத்தின.

என்ன செய்வதென்று புரியாமல், குழப்பத்துடன் திரும்பினால்-

அந்த அறை வாசலில் ஆபத்பாந்தவனாய் வருண் நின்றிருந்தான்.

## 13

வருணைக் கண்டதும், 'அப்பாடா தப்பினோம்' என்ற நிம்மதியுடன், வேகமாகச் சென்று, அவன் கையை அவசர மாகப் பிடித்துக்கொண்டாள், மது.

கவுரவர் சபை நடுவில் கண்ணனைக் கண்ட, திரவுபதியின் நிலையில் காணப்பட்டாள், மது.

ராஜேசின் துகிலுரியும் பார்வையிலிருந்து தப்பி, தனக்குரிய இடம் வந்து சேர்ந்த நிம்மதி தெரிந்தது, அவளிடம்.

மதுவைக் காணாதபோது வந்த கோபம், இப்போது சூரியஒளி பட்ட பனியைப் போல் அவனிடமிருந்து மறைந்தது.

'உனக்கு நானிருக்கிறேன்' என்பதுபோல், இறுக்கமாக அவள் கையைப் பிடித்துக்கொண்ட வருண், உடனே ராகினி யிடம் திரும்பினான்.

"நீ இவளை அழைச்சிட்டுப் போ... நான், ராஜேஷ்கிட்டப் பேசிட்டு வரேன்" என்றபடி, மதுவின் கையை லேசாக அழுத்தி விடைகொடுத்தான்.

வீட்டுக்குப் பின்புறமிருந்த தோட்டத்துக்கு மதுவை அழைத்துச் சென்றாள், ராகினி.

இரவு விளக்கின் வெளிச்சத்தில், எழிலாக தோட்டம் பிரகாசித்துக்கொண்டு இருந்தது.

அங்கிருந்த பிரம்பு நாற்காலியில் மதுவை அமரச் சொல்லிவிட்டுத் தானும் அமர்ந்தாள், ராகினி.

"என்ன மது? உங்கப்பா, சொத்தை எல்லாம் இரண்டாகப் பிரிச்சி எழுதி இருக்காராமே? பாவம்... வருணுக்கு அதான் வருத்தம்! இத்தனை நாளாக எல்லா சொத்துக்கும், தானே வாரிசுன்னு நினைச்சிட்டு இருந்தாரா? இப்ப உங்க அப்பா தான் அதை மாத்திட்டாரே!" என்றாள், சோகமா.

மதுவுக்கு, ஒன்றுமே புரியவில்லை.

'போனவாரம்தான் அப்பா ராஜசேகர், பத்திரங்களைக் கொடுத்து பேசினார். அது, வெளியில் யாருக்கும் தெரியாதே! அதற்குள், இவளுக்கு எப்படித் தெரியும்?' என்ற கேள்வியுடன்



# இதயம் பேசுகிறது!

நாவலைப் படித்துவிட்டு, உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள்.
முகவரி: **இதயம் பேசுகிறது, "ராணி முத்து", சென்னை-600 007.**

## பதைக்க வைத்த நாவல்!

"கண்ணே காத்திரு" நாவலில் நாயகனின் அன்பு கட்டளைக்கு நாயகி காத்திருந்தாள். கதையின் முடிவு என்னாகுமோ என பதைப்புடன் எங்களை காத்திருக்க வைத்து விட்டார், மன்னார்குடி விசுவநாதன்!

*விஜயலட்சுமி, ஆதம்பாக்கம்.*

"கால் ஊனமானாலும் உங்க மனசு ஊனம் ஆகவில்லையே" என்ற புனிதாவின் வார்த்தைகள் மனதில் பதிந்தன.

*ஹேமலதா, வெண்டையம்பட்டி.*

'தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ... அங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் அன்பு குறைவதுண்டோ' என புனிதாவின் தூய காதலை வெளிப்படுத்தியவிதம் அருமை!

*க. இருளப்பன், மன்னார்குடி.*

பிரிந்த காதலனுக்காக கடைசிவரை காத்திருந்து கைப்பிடித்த புனிதா, தன்னை மட்டுமல்ல... காதலையும் புனிதப்படுத்திவிட்டாள்!

*ஜனித் அஷ்ரப், விழுப்புரம்.*

உண்மையான காதல் உள்ளங்கள் இணைய ஊனம் ஒரு பொருட்டே அல்ல என நிரூபித்துவிட்டது.

*கொ.சி. சேகர், பெங்களூர்.*

'காதலுக்கு அழகு காத்திருத்தலே' என காத்திருந்து, காதலனைக் கைப்பிடித்த புனிதா, எங்கள் மனதில் நிறைந்துவிட்டார்.

*தி. ஸ்ரீசற்குரு, முத்தம்மன்நகர்.*

கண்முன்னே மனம் மாறும் மங்கையர் மத்தியில் சில நாட்கள் பழகியதற்காக காத்திருந்த புனிதாவின் காதல், அதையும் தாண்டி புனிதமானது!

*க.பா. லெட்சுமணன், அரும்பாவூர்.*

ஊனம் ஒரு குறையல்ல... உள்ளம்தான் ஊனம்!

*ராஜு", அரியலூர்.*

அலங்கார வார்த்தை ஜாலமில்லாத- அலட்டிக் கொள்ளாத நாவல். ஆர்ப்பரிக்காத அமைதியான நதியினிலே ஓடும் ஓடம் போன்று இருந்தது.

*கிருஷ்ணாபுரம் கிருஷ்ணன்.*

கோலங்கள் இன்னும் அதிகமாக வெளியிடலாமே!

*ராணி, குடவாசல்.*












ராகினியை நோக்கினாள்.

மது முகத்திலிருந்து, அவன் மனதைப் படித்துவிட்டாள், ராகினி.

"என்ன மது? என்கிட்ட யார் சொல்லி இருப்பாங்கன்னு தான் யோசிக்கிறீங்க? வருண்தான் சொன்னார். அன்னிக்கு உங்க அலுவலகத்துக்கு வந்தேனே... அப்போ சொன்னார். ரொம்ப வருத்தப்பட்டார்... நான்தான் மதியம் சாப்பிட வரச்சொல்லி சமாதானப்படுத்தினேன்" என்றாள்.

மதுவுக்கு, அன்று நடந்தது அப்படியே நிழற்படமாய் நினைவில் ஓடியது.

காலையில் வருண் ஏதோ யோசனையாகவே இருந்ததும்- பிறகு, ராகினி வந்ததும், அன்று மதியம் வெளியே சாப்பிட்டு விட்டுத் திரும்பியவுடன் வருணிடம் தெரிந்த மகிழ்ச்சியும் மனதில் முட்களைக் கோர்த்தன. ஆனால், ராகினி கூறியதையும் மதுவால் முழுமையாக நம்ப முடியவில்லை.

அவள் கண்களிலும், முகத்திலும் தெரிந்த நம்ப இயலாத தன்மையைக் கண்டதும் எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டு, அவளைப் பரிதாபப் பாவனையுடன் பார்த்தாள், ராகினி.

"பாவம் மது, நீங்க! என்னை நம்பலை இல்லையா...? உங்க வீட்டு விசயம் எனக்கு வேறு வழியில் எப்படித் தெரியும்... சொல்லுங்க! நீங்க என்னை நம்பலைன்னா நான் இன்னொரு தகவல் சொல்லுறேன். அப்பவாவது, என்னை நம்பறீங்களான்னு பார்ப்போம்" என்ற பீடிகையுடன் தொடர்ந்தாள்.

"இன்னும் கொஞ்சநாள் கழிச்சி, வருண் உங்களை விரும்புறதா சொல்லி, உங்களைக் கல்யாணம் செஞ்சுக்கிறேன்னு கேட்பார் பாருங்களேன். அப்ப நான் சொன்னது உண்மையா, இல்லையான்னு தெரியும்" என்று அவள் கூறியவுடன் மதுவுக்குத் தூக்கிவாரிப்போட்டது.

தான் வருணை விரும்புவது போல், அவனும் தன்னை விரும்புகிறானா என்று மனது பரவசமானது.

மதுவின் பிரமித்த முகம், அவள் மனதை ராகினிக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதாய் ஆனது!

மலர்ந்த அவளுடைய முகத்தைக் கண்டதும், மனதில் வன்மம் வந்தது, ராகினிக்கு!

வெறுப்புடன் மதுவை நோக்கினாள்.

"வருண் உங்களை உண்மையா விரும்புறதா நினைச்சிடாதீங்க... நானும் வருணும் காதலிக்கிறோம்... அன்னிக்கு விழாவில் பார்த்தீங்க இல்லையா?

வருணுக்கு நானும் வேணும்! உங்க சொத்தும் முழுசா வேணும். அதனால, நான்தான் ஒரு திட்டத்தை சொன்னேன். அதான் அன்னிக்கு ஓட்டலில் இருந்து திரும்பினப்ப வருண் ரொம்ப பூரிப்பா போனார்" என்று நிறுத்தினாள்.

போன திங்கள்கிழமை– சிவப்பிரகாசமும், வருணும் ஒரு பெரிய ஒப்பந்தத்தைப் பற்றி பேசி முடித்தது, ராகினிக்குத் தெரியும்.

அன்று காலையிலே சிவப்பிரகாசம் தனக்கு மதியம் சாப்பாடு அனுப்பவேண்டாமென்றும், வருணுடன் சாப்பிடப் போவதாகவும் கூறிவிட்டுத்தான் சென்றார்.

இரண்டையும் இணைத்துக் கணக்கிட்ட ராகினியின் குறுக்கு புத்தியை, மது அறிந்துகொள்ளவில்லை.

பார்வையாலே மதுவை கணித்துக்கொண்டிருந்த ராகினி, அவள் தன் வலையில் விழுந்துவிட்டதைப் புரிந்துகொண்டாள்.

"கோபப்படாம கேக்கிறதா இருந்தா நான் முழுசையும் சொல்றேன், மது. வருண் உன்னைக் கல்யாணம் பண்ணின பிறகு எல்லா சொத்தும் அவர் கைக்கு வந்துடும். அப்புறம், என்னைக் கல்யாணம் செஞ்சுக்கலாம்னு சொல்லி இருக்கேன். எங்க ஆசை, வருணோட லட்சியம் ரெண்டுமே நிறைவேறணும் இல்லையா?" என்றாள், மெதுவாக!

மதுவுக்குள் புயல்வீசியது. அடிவயிறுவரை அருவருப்பாய் கசந்தது.

"ரெண்டாவது மனைவியா? உங்களுக்கே அசிங்கமா, வெறுப்பா இல்லையா?" என்றாள், கசந்த மனதுடன்.

ராகினி மனதில் வெற்றிச் சிரிப்பு!

"மது! ரெண்டாம்தாரமா இருந்தா என்ன? ஊருக்குத்தானே, அது! எப்படியும் என்னை மனசுல வச்சிக்கிட்டு, உன்னோடு வருண் சேர்ந்து வாழமாட்டார். அவருக்கு வேண்டியதெல்லாம் உன் பங்கு சொத்துதான். நீ அந்த வீட்டில் பெயரளவுக்கு மனைவியா இரு! நான் இங்கே, உரிமையுள்ள மனைவியா இருப்பேன்."



மனம் முழுவதும் கோபத்தில் தகிக்க நிமிர்ந்தாள், மது.

"இப்ப, எல்லாத் திட்டத்தையும் என்கிட்ட சொல்லிட்டீங்களே? நான் ஒருவேளை, வருணைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னா என்ன செய்வீங்க?" என்றாள், மது.

"என்ன பண்ணுறது? அப்படியே நீ மாட்டேன்னாலும், நான் அவரை கல்யாணம் பண்ணிக்கத்தானே போறேன். என்ன... உன் பாதிப் பங்கு சொத்து கைநழுவிப் போயிடும், அவ்வளவுதான்!" என்றாள், குரூரமாக.

அந்த நிமிடம், மதுவுக்கு உலகமே தலைகீழாக சுற்றுவதைப் போலிருந்தது.

தான் இல்லாமலே இருவரும் எவ்வளவு திட்டம் போட்டு இருக்கிறார்கள் என்று எண்ணியபோது, 'வருணா இப்படி?' என்ற நினைவில் நெஞ்சே வெடித்துவிடும் போல் வலித்தது.

வருணும், ராகினியும் தன்னைப் பகடைக்காயாக்கி விளையாடுவதை தான் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாதென்று தீர்க்கமாக முடிவெடுத்தாள், மது.

அதற்குப் பிறகு நடந்த விருந்தில், அவள் மனம் அழுது கொண்டே இருந்தாலும், வெளியில் சிரித்து... இயல்பாக இருப்பதற்கு முயற்சி செய்தாள்.

விருந்தின்போது, வருண் ஆவலுடன் அவ்வப்போது மதுவையே பார்த்துக்கொண்டு இருந்தான்.

[illegible]ன் மனம் உலைக் களம் போலானது.

வீட்டுக்குச் சென்றவுடனே, 'மீண்டும் தலைவலி' என்று முணுமுணுத்துவிட்டு, மாடிக்குச் சென்றுவிட்டாள், மது.

வருணும், ராஜசேகரும் ஒருவரையொருவர் யோசனையுடன் பார்த்தனர்.

அவளைப் பின்தொடர்ந்து வந்த வருண, அவளைக் கைப்பிடித்து நிறுத்தினான்.

"ஏன் மது? ராஜேஷ்கிட்ட இருந்து, உன்னைச காப்பாத்தினதுக்கு, எனக்கு ஒரு சின்ன நன்றிகூட கிடையாதா?" என்றான், உற்சாகத்துடன்.

பதில் கூறாமல், அவள் மவுனமாகத் தலைகுனிந்து நிற்பதை கண்டதும், சீண்டினான்.

"ம்... ராஜேஷ் மாதிரி யாரையாவது பார்த்தாதான், உனக்கு

என் நினைப்பே வருமா? அப்பத்தான், ஓடிவந்து என்னைப் பிடிச்சிப்பே இல்லே? இதுக்கெல்லாம், நான் ஆள் தேடணும் போலிருக்கு!" குறும்புடன் கூறினான்.

அவளிடம் அப்போதும் பதில் வராதுபோனது.

"ஏய்! என்னாச்சு, மது? ஏன் ஒரு மாதிரி இருக்கே? ஏதாவது பிரச்சினையா? என்கிட்ட சொல்லமாட்டியா? நான் உன்னோட..." என்று நிறுத்தியவன், நண்பன்தானே?" என்றான், தாழ்ந்த குரலில்.

அதற்கும் பதில் இல்லை. அவளையே ஒருகணம் கூர்ந்து பார்த்துவிட்டு, தான் பிடித்திருந்த அவளது கையை விட்டுட்டு, பெருமூச்சுடன் அங்கிருந்து சென்றுவிட்டான்.

அவன் போவதையே நிமிர்ந்து பார்த்தவளுக்கு, கண்ணீர் அவன் உருவத்தை கலங்கலாய் சமர்ப்பித்தது.

நான் அன்பு செய்யும் யாருமே, தனக்கு நிலைக்க மாட்டார்களோ என்று மனம் ஏங்கியது.

அன்றிரவு முழுவதும் கண்ணீரிலே கரைந்தது. பொய்யாகிப் போன தன் காதலை எண்ணி, உள்ளம் உடைந்துபோனாள்.

வருணை அவள் நேசித்ததும், காதலை மனதில் வைத்து இரகசியமாய் பூஜித்ததும், இன்று கானல்நீராய்ப்போன சோகம் கண்களில் அருவியாய் பெருகியது.

மறுநாள் காலையில், மதுவுக்குக் காய்ச்சல். கண்கள் சிவந்து, தலை பாரமாகி இருந்தன.

காலையில் உலாவச் செல்ல மது வராததால் தேடிவந்த வருண், அவளிருந்த நிலை கண்டு பதறிப்போனான்.

"என்ன மது, இது? முகம் சிவந்து இப்படி இருக்கே?" என்கிட்ட சொல்லுறதுக்கு என்ன? செல்லமாகக் கடிந்து விட்டு, உடனே மருத்துவரை வரவழைத்தான்.

மருத்துவர் வந்து பார்த்துவிட்டு, "சாதாரணக் காய்ச்சல்தான். ஓய்வெடுத்தா சரியாயிடும். இந்த மாத்திரைகளைச் சாப்பிடச் சொல்லுங்க" என்று எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

ராஜசேகர், அன்று அவளுடனே வீட்டிலிருந்தார். அலுவலகத்துக்குச் செல்லவில்லை.

வத்சலாவும், மீனாம்மாவும் அடிக்கடி வந்து மதுவை கவனித்துக்கொண்டனர்.



எதையும் உணரும் மனநிலையில் மது இல்லை. அவள் மனதின் பாரம் குறையவும் இல்லை.

கண்ணீர் அடிக்கடி எட்டிப் பார்த்தது. எல்லோர் முன்னிலையிலும் அழுவது, அவளுக்குப் பிடிக்காத ஒன்று என்பதால், அப்படியே அடக்கிக்கொண்டாள்.

மதியம், வருண் தொலைபேசியில் பேசினான்.

"அலோ மது! எப்படி இருக்கே? இப்ப பரவாயில்லையா? நல்லா ஓய்வெடுத்துக்க. ஆபீஸ் வேலைகளை நாங்க பார்த்துக்கிறோம். மாத்திரை சரியா சாப்பிடு, மது!" என்றான்.

"ம்... வச்சிடவா?" என்று மது கேட்டபோது, மறுமுனையில் சத்தமே இல்லை.

சீறலாய் ஒரு வேகமூச்சு மட்டுமே அவனிடமிருந்து வெளிப்பட்டது. "சரி மது... சாயந்திரம் பார்க்கலாம்" என்றபடி வைத்தான்.

பார்த்துப் பழகி இரண்டு மாதங்களே ஆன நிலையில், வருண் மேல் வந்த காதல் அவளைப் பயமுறுத்தியது. அவனுக்காக இவ்வளவு உருகுகிறோமே என்று தன் மீதே வெறுப்பாக இருந்தது.

அன்றிரவு, வருண் வீட்டுக்கு வரும்போது இரவாகிவிட்டது.

மதுவின் அறைக்கு வந்து பார்த்தபோது, அவள் நன்றாக உறங்கிக்கொண்டிருந்தாள்.

அவளருகில் அமர்ந்தவன், மதுவையே சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தான்.

தான் சிறுவயதில் படித்த, 'உறங்கும் அழகி' கதை நினைவுக்கு வந்தது.

உறக்கத்திலும் மென்மையான அழகோடு இருந்த மதுவின் முகம், அவன் இதயத்தைப் புரட்டிப்போட்டது.

## 14

மது, விழித்துக்கொண்டுதான் இருந்தாள். ஆனால், தூங்குவது போல் படுத்திருந்தாள்.

ஏனோ, கண்விழிக்க பிடிக்கவேயில்லை.

மெதுவாக, அவளுடைய நெற்றியில் கை வைத்துப் பார்த்த வருண், மென்மையாக அவள் முன்உச்சியைக் கோதி,

போர்வையை இழுத்துப் போர்த்திவிட்டுவிட்டு வெளியே சென்றான்.

மதுவுக்கு அருவியாகக் கண்ணீர் சுரந்தது. தலையணையில் முகத்தைப் புதைத்து வெகுநேரம் அழுதாள்.

தான் தூங்கும்போதுகூட அவன் நடிக்கிறானே என்று நினைக்கையில் இன்னும் அழுகையாக வந்தது. மறுநிமிடமே, அவன் நடிக்கவில்லையோ என்றும் மனம் ஏங்கித் தவித்தது.

அதற்குப் பிறகு, மதுவிற்கு உடல்நிலை சரியாக நான்கைந்து நாட்கள் ஆயின. குணமானதும் அலுவலகத்திற்குக் கிளம்பிய மதுவை ராஜசேகர் விடவில்லை.

"மது! உனக்கு நல்லா சரியானப்புறம் நீ அலுவலகத்துக்கு வந்தா போதும். காய்ச்சல் திரும்பினால் சிரமம்டா! நல்லா ஓய்வெடுத்துக்க... அங்கே நானும் வருணும் எல்லாம் பார்த்துப்போம். நீ அடுத்த வாரம் வந்தால் போதும்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

அன்று மாலை, மது மெதுவாகத் தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தாள்.

முகம் மட்டும் சற்று வெளிறிப்போய் இருந்தாலும், ஆரோக்கியம் முழுமையாகத் திரும்பி இருந்தது.

வெள்ளை நிறச் சுடிதாரில் தேவதை போலிருந்தவளுடைய மனதில், வேண்டாத நினைவுகள் வேகமாய் அலைமோதிக் கொண்டிருந்தன.

"மதூ..." என்ற ஆழ்ந்த குரலில் திடுக்கிட்டுத் திரும்பினாள். அங்கு வருண் நின்றுகொண்டிருந்தான்.

உதடுகளில் விரிந்த முறுவலுடன், மெல்ல அவளருகில் வந்தான்.

"மது! இப்ப எப்படி இருக்கே? பரவாயில்லையா... உடம்பு நல்லா இருக்கா? இப்ப உனக்கு ஒண்ணும் களைப்பா இல்லையே?" அக்கறையுடன் வந்தது, அவன் குரல்.

மது 'இல்லை'யெனத் தலையசைத்தாள்.

"வா மது! உன்கிட்டே நான் கொஞ்சம் பேசணும்" என்று கைகளைப் பிணைத்துக்கொண்டு, அவளை அழைத்துச் சென்றான். அங்கிருந்த நாற்காலியில் அமரவைத்தான். குரலை செறுமிக்கொண்டு மெதுவாகப் பேச ஆரம்பித்தான்.

"மது! எப்படி சொல்றதுன்னு தெரியலை... எனக்குள்



புதைஞ்சிருந்த உணர்வுகளைப் புதுப்பிச்சவ நீன்னுசொல்றதா? இல்லை... உன் கண்ணோரப் பார்வையில், என் இதயம் சொல்லாமல் கொள்ளாமல் உன்கிட்டப் போயிடுச்சின்னு சொல்லவா? என்ன சொல்றது?" ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

பிறகு, "நினைச்சிப் பார்த்தா எனக்கே சிரிப்பா இருக்கு... இந்த மாதிரி எல்லாம் என்னால பேச முடியுமாங்கிறதை என்னாலே நம்ப முடியலை! பெண்கள் மீது எனக்கு அவ்வளவா ஈடுபாடு வந்தது கிடையாது, மது! ஆனா... உன்னைப் பார்த்த மறுநிமிடமே, நான் என்னை இழந்தேன்னு சொன்னா நீ நம்புவியா?" என்று நிறுத்தினான்.

அவள் மவுனமாக இருந்தாள்.

"மது... எனக்கு நீ வேணும்... எப்பவுமே! உன் தோள் மேலே நான் சாய்ஞ்சுக்கணும்... உன் மடியில் படுத்துக்கணும்... உன் கையைப் பிடிச்சிட்டே கடல் மணலில் ரொம்ப தூரம் நடக்கணும்... தலைமுடியைக் கலைச்சி விளையாடணும்... நான், தினம் கண் விழிக்கிறப்போ என் பக்கத்தில நீ இருக்கணும். இப்படி நிறையத் தோணுது..." சற்று நிறுத்தினான்.

திரும்பி வானத்தைப் பார்த்தவன், "ஏன் இப்படின்னு என்னை நானே கேட்டுக்கிட்ட கேள்விக்கு, என்கிட்ட ஒரே ஒரு பதில்தான் வந்தது, மது. நான் உன்னை விரும்ப ஆரம்பிச்சி ரொம்ப நாளாச்சின்னு நினைக்கிறேன்!" என்றபடி அவள் புறம் திரும்பினான்.

மதுவின் முகத்தில் கோபம், வருத்தம், ஏமாற்றம், எல்லாம் கலந்து பிரதிபலித்தன.

"வருண்... நீங்க இப்படித்தான்னு ராகினி சொன்னப்ப நான் நம்பலை. ஆனா, இப்ப நிரூபிச்சிட்டீங்க! ஏன் வருண் இப்படி செஞ்சீங்க? நான் எவ்வளவு உண்மையா உங்களை நேசிச்சேன்! என் அப்பா சொத்து உங்களுக்கு வேணும்னா எடுத்துக்கங்க! தயவுசெய்து, அதைக் காதல்னு சொல்லி கொச்சைப் படுத்தாதீங்க... என்னாலே அதை தாங்க முடியலை... நம்ப முடியலை!" கூறிவிட்டு, அழுதபடி ஓடினாள், மது.

அதுவரை அவளையே மொழி புரியாதவனைப் போல் பார்த்துக்கொண்டிருந்த வருண், அவள் பேசியதன் அர்த்தம் சற்று புரிந்ததும், அடியோடு உடைந்துபோனான்.

இதுவரை, எதிலுமே தோல்வியை சந்தித்திராத அவன் மனம், முதன்முதலாக காயப்பட்டுத் துவண்டது.

மது என்ன சொல்கிறாள் என்றே இன்னும் முழுமையாக வருணுக்கு விளங்கவில்லை.

ஆனால், அவளின் வார்த்தைகள் எண்ணிலடங்கா சோகத்தை மட்டும் அவனுக்குள் விதைப்பதாய் மாறின.

ராகினி என்கிறாள்... சொத்து என்கிறாள்...

ஒன்றும் புரியாமல், கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது, அவனுக்கு!

அவன் மதுவின் பதிலை வேறுவிதமாக எதிர்பார்த்து இருந்தான்.

வெட்கத்தில் அவள் முகம் சிவப்பதையும், மவுனமாய் அவள் சம்மதம் தெரிவிப்பதையும் பற்றி ஆயிரம் கற்பனைகளை வளர்த்திருந்தான்.

ஒரு நொடியில் எல்லாம் நாசம்.

அவள் உதடுகள் பொய்ப் பேசலாம். ஆனால், கண்கள் பொய் பேசுமா? புரியவில்லை.

மதுவிடம் முன்பு தெரிந்த தவிப்பும், ஏக்கமும், கண்களில் வழிந்த காதலும் பொய்யாகுமா?

அவனுக்குத் தெரியவில்லை...! புரியவில்லை...!!

தன் அறையில் அமர்ந்து, வெகுநேரம் எல்லாவற்றையும் யோசித்தவன் நேரே ராஜசேகரிடம் சென்றான்.

"மாமா! நான் உங்கக்கிட்ட கொஞ்சம் பேசணும். என்ன ஏதுன்னு விளக்கம் கேட்காம நான் சொல்றதை செய்வீங்களா? நம்ம சொத்து எல்லாத்தையும் உடனே மது பேருக்கு மாத்தி எழுதிடுங்க, மாமா! எனக்காக இதை நீங்க கட்டாயம் செய்யணும்" எங்கோ பார்த்தபடிக் கூறியவனின் குரல் உடைந்திருந்தது... குலைந்திருந்தது!

ராஜசேகருக்கு மனம் பதைத்தது. வருணுடைய கைகளை ஆதரவாய் பற்றிக்கொண்டார்.

"மாமா... எப்பவுமே என்னை ஓய்வெடுத்துக்கன்னு சொல்வீங்களே? இப்ப எனக்கு ஒரு வாரம் ஓய்வு வேணும். நான் நம்ம பண்ணை வீட்டுக்குப் போகப் போறேன் மாமா..."

காயம்பட்ட வலி முகத்தில் தெரிய எழுந்த வருணைக் கண்டபோது, ராஜசேகரின் மனம் உடைந்துபோனது.



வேகமாக அவன் கையைப் பிடித்துத் தடுத்தார்.

"என்னாச்சுப்பா வருண்? ஏன் இப்படியெல்லாம் பேசுறே... யாராவது ஏதாவது சொன்னாங்களா? மது ஏதாவது...? அவ, அப்படிப்பட்ட பெண் இல்லையேப்பா! எனக்கு, மது மட்டும் முக்கியமில்லை... நீயும் முக்கியம்! என் மடியிலும் தோளிலும் வளர்ந்தவன்ப்பா நீ... இப்படி வேதனைப்படுறதை என்னால தாங்க முடியாது. என்ன நடந்தது... சொல்லு, வருண்!" ஆதங்கத்துடன் குரல் தழுதழுக்கக் கூறினார்.

அவருடைய கையைப் பிடித்து அழுத்தி அவரைச் சமாதானப்படுத்தினான், அவன்.

"மாமா... இப்ப என் மனசு ரொம்ப பாரமா இருக்கு. தயவு செஞ்சு எதுவும் கேட்காதீங்க. மதுவையும் ஒன்னும் சொல்ல வேணாம். ஆனா, நான் சேட்டதை மட்டும் எனக்காக உடனே செய்யணும். அப்புறம்... அங்கே பண்ணை வீட்டுக்கு, தயவு செஞ்சு யாரும் என்னைத் தேடி வரவேண்டாம்" என்றவன், புயல்வேகத்தில் தன் அறைக்குச் சென்றான்.

வழியில், மதுவின் அறைக் கதவும் அவளின் இதயம் போலவே இறுக மூடி இருப்பதைக் கண்டான்.

பத்து நிமிடத்தில் தயாராகி தன் அறையிலிருந்து கீழே வந்தவன், வத்சலாவிடம் சொல்லிவிட்டு, காரில் ஏறி வேகமாகச் சென்றுவிட்டான்.

வருணுடைய முகமும், திடீரென்று அவன் கிளம்பிச் சென்ற விதமும், வித்தியாசமாக இருப்பதை உணர்ந்து பயந்து போன வத்சலா, உடனே ராஜசேகரிடம் சென்றார். அங்கு, ராஜசேகரும் யோசனையுடன் அமர்ந்திருப்பதைக் கண்டார்.

"என்னண்ணா... வருண் ஒரு மாதிரிப் பேசிட்டுப் போறான். முகமே சரியில்லை. என்ன பிரச்சினை? பண்ணை வீட்டுக்குப் போறேன்னு சொல்லிட்டுப் போறான். ஒரு வாரம் ஆகும் அப்படின்னான். எனக்கு ரொம்ப பயமா இருக்குண்ணா" என்றார் கண்ணீருடன்.

தங்கை கையைப் பிடித்து உட்கார வைத்தார், ராஜசேகர்.

"எனக்கு ஒண்ணும் புரியலை வத்சலா... ஆனா, எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேம்மா! நீ ஒண்ணும் கவலைப்படாதே... வருணுக்கு என்னவோ மனசு சரியில்லை. பார்ப்போம்... எல்லாம் சரியாயிடும்" என்றார், ஆறுதலாக.

வத்சலா சென்றவுடன், கண்மூடி தன் இருக்கையில் சாய்ந்து கொண்டவர், மனதில் பல எண்ணங்களுடன் தனக்குள் வினா எழுப்பிக்கொண்டிருந்தார்.

எவ்வளவு யோசித்தும், சொத்து விசயத்தில், தான் செய்தது சரிதான் என்று தோன்றியது. வருணை சமாதானப்படுத்தும் வழி புரியாமல் அவர் தவித்தார்.

அனைவருமே அன்று, ஒரே மாதிரியான சோக மனநிலையில் இருந்தனர்.

இரவு யாருமே சாப்பிடவில்லை... சரியாக உறங்கவில்லை. மதுவைப் பார்த்த வத்சலாவிற்கு அவள் அழுதபடி முகம் சிவந்து படுத்திருந்ததைக் கண்டதும், ஏதோ புரிந்தாற்போல் ஆனது.

"சாப்பிட வா மது... வெறும் வயிறா படுக்கக்கூடாது. ஏதாவது கொஞ்சமாவது சாப்பிடு. காய்ச்சல் இப்ப தானே சரியாச்சு... உடம்பு பலவீனமா இருக்கும்... வாம்மா!" என்றார், வேறு எந்த விசயத்தையும் கிளறாமல்!

"அத்தை! எனக்குப் பசிக்கலை. மீனாம்மாவைப் பால் மட்டும் கொண்டுவரச் சொல்லுங்க... போதும்!" சோகமாகக் கூறினாள். அன்றிரவு, வீடே விரக்திமயமாக இருந்தது. மது, விடியும்போதுதான் உறங்கவே ஆரம்பித்தாள்.

வருணும், இரவு உறங்கவே இல்லை. மலரைக் குடையும் வண்டாய் இதயத்தைக் குடைந்துகொண்டிருந்தது, மதுவின் நினைவு! அவள் பேச்சிலிருந்த முரண்பாடு அவனை உறங்க விடாமல் வதைத்தது!

அன்றைய விடியல், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாய் புலர்ந்தது.

ராஜசேகரும் தாமதமாகவே எழுந்து, மதுவின் அறைக்குச் சென்றார். படுக்கையில் புரண்டுகொண்டிருந்த மகள் அருகில் சென்று அமர்ந்தார்.

"என்னம்மா? எழுந்திருக்கலையா?" உடன் வேகமாக எழுந்து அமர்ந்தவளைப் பார்த்தால், அவருக்குப் பாவமாக இருந்தது.

மது, தன்னையும் கஷ்டப்படுத்திக்கொண்டு, வருணையும் கஷ்டப்படுத்துகிறாளோ என்று தோன்றியது, ராஜசேகருக்கு!

"என்ன மது... ஏன்டா முகமெல்லாம் சிவந்து, கண் வீங்கி இருக்கு... சரியா தூங்கலையா?" மெல்ல கன்னத்தை வருட, மது மவுனமாகத் தலைகுனிந்தாள்.



"நீ இன்னிக்கு அலுவலகத்துக்கு வரவேணாம்..."

அவர் கூறியவுடனே அவள் "சரிப்பா" என்றது அவருக்குப் பெரும் ஆச்சரியத்தை அளித்தது.

'என்ன ஆயிற்று, இந்தப் பெண்ணுக்கு? வருணுக்கும் இவளுக்கும் இடையில் அப்படி என்ன நடந்திருக்கும்?' என்ற யோசனை அவர் மனதில் நெருடலாய்!

"சரி மது! நான் கிளம்புறேன். நீ நல்லாத் தூங்கி ஓய்வெடுத்துக் கடா!" மகள் கன்னத்தை செல்லமாகத் தட்டிவிட்டுச் சென்றார்.

படுத்தவள் நினைவில், அன்றொரு நாள் வருண் செய்த சில்மிஷம் நினைவுக்கு வந்தது.

ஆனால் இன்று, அவன் நேசம் பொய்யாகிப் போனதை எண்ணி நெஞ்சம் குமுறியது.

அங்கு, பண்ணை வீட்டில் வருண் உலர்ந்த சருகாய்... ஒரு தகிப்பு தன்னுள் மையம்கொள்வதாய்!

மறுபக்கம்- மதுவைச் சுற்றியே அவன் நினைவுகள் படர்ந்தன!

அவளுடைய பார்வை அன்பெனும் ஆயுதம் ஏந்தி வந்ததும், இன்று அது தன் மனதை குறிபார்த்துவிட்டதும் புரிந்தது.

'பாட்டுக் கலந்திடவே, இங்கே ஒரு பத்தினிப் பெண்ணாய், மது வேண்டும்' என்று மனம் ஏங்கியது. தவித்தது!

## 15

**ம**துவும், அதே நேரம் யோசித்துக்கொண்டுதான் இருந்தாள்.

பல நேரம், பிரிவிற்கான வித்து, சின்னஞ்சிறிய கோபப் பந்தாய்... ஊதினால் கலைந்துபோகும் குமிழாக, சிறு ஊடலாய் தோன்றியது.

நேரம் செல்லச் செல்ல, வருணைப் பார்க்காத நிமிடங்கள் தீயாய் தகித்தன.

மது தன் அறையைவிட்டு வெளியே வரவே இல்லை.

மதியச் சாப்பாட்டையும், வத்சலாவே அறைக்கு எடுத்து வந்தார்.

காலையில் வைத்த உணவே, தொடாமல் இருப்பது கண்டு, வருந்தியவர், அவளை சாப்பிட வைத்துவிட்டுத்தான் கீழே வந்தார்.

மாலையில், சொத்தை மாற்றி எழுதிய பத்திரத்தை, அவள் கையில் கொடுத்தார், ராஜசேகர்.

"என்னப்பா இது... இதை ஏன் என்கிட்டே கொடுக்கிறீங்க...?" கேட்டுக் கொண்டே பிரித்தவள், அதைப் படித்ததும் அதிர்ந்து போனாள்.

"ஏன்ப்பா இப்படி செஞ்சிங்க? நானும் சொத்தைத்தான் பெரிசா நினைப்பேன்னு நினைச்சீங்களா? இது வருணுக்குத் தெரியுமா பாதிப் பங்கு எனக்கு வந்ததையே அவரால தாங்க முடியலை... நீங்க எல்லா சொத்தையும் என்பேரிலே எழுதினீங்கன்னா அவ்வளவுதான்" என்றாள், கோப மூச்சுடன்!

ராஜசேகரின் முகம் கடும் வேதனையைப் பிரதிபலிக்க– அவர் கோபமாக நிமிர்ந்தார்.

"வருணைப் பத்தி, உனக்கு என்னம்மா தெரியும்? தப்புத் தப்பா உன்கிட்ட சொன்னது யாரு? அவன் எப்படிப்பட்டவன் தெரியுமா...? அவன், எனக்குப் பையனாப் பிறக்கலையேன்னு எத்தனை நாள் நான் வருத்தப்பட்டிருக்கேன்... அவனைப் போய் நீ...?" என்றவரின் குரலில், துயரம் மிகுந்திருந்தது.

"ஆனா மது... இன்னிக்கு, என் பொண்ணு இப்படிப் பேசுறாளேன்னு வருத்தப்படுறேன். நீ இப்படிப் பேசுற பெண் இல்லையே? என்னம்மா ஆச்சு உனக்கு...? எல்லாம் எனக்கு தெரிஞ்சாகணும். வருணுக்கும் உனக்கும் நடுவுல என்ன பிரச்சினை, சொல்லு!" என்றார், வருத்தமாக.

மது, தாங்கமுடியாமல் முகம் பொத்தி அழத்தொடங்கினாள். அவள் அழுது முடிக்கும்வரை, பொறுமையுடன் அமர்ந்திருந்த ராஜசேகர், அவளின் கண்களைத் துடைத்துவிட்டார்.

"அழாதே மது! எதுவா இருந்தாலும் தைரியமா இருக்கணும். இந்த சொத்து விவகாரம் வருணுக்குத் தெரியுமான்னுதானே கேட்டே? இதை எழுதச் சொன்னதே அவன்தான்! அன்னிக்கு பண்ணை வீட்டிலேயும் இதைத்தான் சொன்னான். நேத்தும் இதையேதான் செல்லிட்டுப் போனான்" என்றார்.

ஒரு திடுக்கிடலுடன் துடித்து நிமிர்ந்தாள் மது. "என்னது? வருண் சொன்னாரா? அன்னிக்குப் பண்ணை வீட்டிலே அதைச் சொன்னாரா?" என்று படபடக்க, அவளைக் கையமர்த்தினார் ராஜசேகர். தான் முதன் முதலில் பத்திரங்களைக் கொடுத்த அன்றே வருண் அதை மது பெயருக்கு மாற்றி எழுதச் சொன்னதைக் கூறினார்.

"நேத்தும் அப்படித்தாம்மா சொல்லிட்டுப் போனான். அவன் இந்த மாதிரி, மனசொடிஞ்சி அங்கே போறது, இது ரெண்டாவது தடவை..."

"வருண் எங்கேப்பா... எங்கே போனார்...?" தவிப்புடன் கேட்டபடி, பதற்றமாய் எழுந்த மதுவின் கையிலிருந்த பத்திரம் நழுவிக் கீழே விழுந்தது... அவளுடைய பிடிவாதத்தைப் போல!

முதல் நாள் இரவு நடந்ததை, அப்படியே மதுவிடம் கூறினார், ராஜசேகர்.

"அவன் கல்லூரியிலப் படிச்சிட்டிருந்தப்ப, தன் அப்பா இறந்த நேரத்துல ஒருதடவை போனான். வேறு எதுக்குமே இப்படித் தனியா போய் தங்கினது கிடையாது. நேத்து அவனைப் பார்த்தப்ப என்னாலே தாங்கவே முடியலை. என்ன காரணம்னும் தெரியலை... அதான் உன்கிட்ட வந்தேன்" என்றார், ஆதங்கம் மிகுந்த குரலில்!

மனதிற்குள் ஆயிரம் கேள்விகள் ஒன்றாய் எழ– கலக்கத்துடன் பார்த்தாள், மது.

"நான் உங்ககிட்டே எல்லாமே சொல்றேன்ப்பா... அதுக்கு முன்னாடி, எனக்கு ஒண்ணு மட்டும் தெரியணும். நீங்க இது மாதிரி சொத்தைப் பிரிச்சி எழுதின விசயத்தை வேறு யார்கிட்டயாவது சொன்னீங்களா?" என்றாள், அவசரத்துடன்.

ராஜசேகர் யோசித்தபடி நிமிர்ந்தார்.

"ஏன் மது? ஏன் திடீர்னு இப்படிக் கேக்கிறே?" என்று கேட்கவும், "அப்பா... எனக்கு இந்த பதில் ரொம்ப முக்கியம். தயவு செஞ்சு சொல்லுங்க" என்றாள், கெஞ்சலாக.

"ஆமாம்... அன்னிக்குப் பண்ணை வீட்டில் இருந்தப்ப, சிவா போனில் பேசினான். அவன்கிட்ட நான் எதையுமே மறைச்சதில்லைங்கிறதாலே இதையும் சொன்னேன்."

"அப்பா...! நான் ஏமாந்துட்டேன்ப்பா... பெரிய தப்புப் பண்ணிட்டேன்" குமுறலுடன் முகத்தைப் பொத்திக்கொண்டு அவள் கதறவும், பதறிப்போய் மகளைத் தன் மேல் சாய்த்துக் கொண்டு, ஆதரவுடன் தலை கோதினார்.

அவளின் அழுகை குறைய வெகுநேரமாயிற்று.

விசும்பல்கள் விலகி அவள் நிமிர்ந்தபோது, ராஜசேகர் அவள் முகத்தை இரு கைகளிலும் ஏந்தினார்.

"இப்ப சொல்லுடா மது... உங்க ரெண்டுபேருக்கும் நடுவுல என்ன பிரச்சினைன்னு! எதுவா இருந்தாலும் நான் சரி பண்ணுறேன்" என்றார்.

மது, கண்களைத் துடைத்துக்கொண்டு, ராகினி வீட்டுக்குச் சென்றது முதல், நேற்று நடந்தது வரை ஒன்றுவிடாமல் கூறினாள்.

எல்லாவற்றையும் ஆவலுடன் கேட்டுக்கொண்டவரின் முகத்தில் மகிழ்ச்சியும், வருத்தமும் ஒன்றுசேரத் தெரிந்தன!

"நான் ஆசைப்பட்டது நிறைவேறிடிச்சி, மது! ரெண்டு பேருமே ஒருத்தரை ஒருத்தர் விரும்பி இருக்கீங்க... உனக்கும் வருணுக்கும் சீக்கிரமே கல்யாணம்னு... அதுவும் நான் உன் அத்தைகிட்டே நீ இங்கே வந்த உடனே சொல்லிட்டேன். ஆனா... தப்புப் பண்ணிட்டியே மது! ராகினி என்னதான் சொன்னாலும், வருணைப்பத்தி உனக்குத் தெரியாதா?" என்றார், வேதனையுடன்.

"அப்பா... அவ திட்டம் போட்டு அப்படியே உண்மை மாதிரி சொன்னா... அதான் நம்பிட்டேன். அன்னிக்கு மதியம், வருண் சர்ப்பிடப் போனதைக்கூட ராகினி சொன்னா. திரும்பி வந்தப்ப, அவர் ரொம்ப சந்தோசமாவேற இருந்தாரா... நான் அவளை நம்பிட்டேன். அது தப்புதான்!" என்றவள், வாடிய விழிகளுடன் நிமிர்ந்தாள்.

"இப்ப வருண் எங்கே? நான் உடனே அவரைப் பார்க்கணும். அவர்கிட்ட என்னை அழைச்சிட்டுப் போங்கப்பா... பிளீஸ்!" கண்ணீருடன் வந்தது குரல்.

"யாரும் தொந்தரவு பண்ணக்கூடாதுன்னு, வருண் சொல்லிட்டுப் போயிருக்கானேம்மா...!" கிண்டலாகக் கூறிவிட்டு, மதுவைப் பாசத்துடன் அணைத்துக்கொண்டார்.

பிறகு, வேகமாக எழுந்தார்.

"சீக்கிரம் கிளம்பு, மது! அங்கே உன் அத்தை வேறுகாலையில இருந்து கவலையா இருக்கா. நான் போய் விபரம் சொல்லிக்கிறேன். நாம ரெண்டுபேருமே அங்கே போகலாம்" என்று கூறவும், வெட்கத்துடன் தலையசைத்துவிட்டுத் தயாரானாள், மது.

வருண் பரிசாக அளித்த சுடிதாரையே அணிந்தவள்,





மின்னல் வேகத்தில் தயாராகிக் கீழே வந்தாள்.

வழியில் ஆனந்தக் கண்ணீருடன், எதிர்பட்டார், வத்சலா.

"அத்தை நான் போய் வருணை அழைச்சிட்டு வந்திடுறேன். நீங்க கவலைப்படாதீங்க... ஆனா, அவர் என்னைப் புரிஞ்சிக் கணும்னு மட்டும் வேண்டிக்கங்க" என்றாள், கலக்கத்துடன்.

"அவன் நிச்சயமா உன்னைப் புரிஞ்சிப்பான்ம்மா. இப்பவாவது, நீ அவனை நல்லாப் புரிஞ்சிக்கிட்டியே, அது போதும் எனக்கு!" என்றபடி அவளை முத்தமிட்டார்.

மதுவுக்குச் செல்லும் வழி முழுவதும், படபடப்பாக இருந்தது. வருண், தன்னைப் புரிந்துகொள்ளவேண்டுமே என்ற பயம், உள்ளத்தை விதிர்க்கச் செய்தது.

அளவு மீறி அவனைக் காயப்படுத்திவிட்டது தெளிவாகப் புரிந்தது.

தான் என்ன செய்து, அவனை சமாதானம் செய்யப் போகிறோம் என்ற பரிதவிப்பு, மதுவுக்குள் படர்ந்தது.

அப்பா கையை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டாள். மனதினுள் ஆழமாய் வேர் பிடித்திருந்த காதல் விருட்சமும் பெரும் பலத்தைக் கொடுத்தது.

அங்கு பண்ணை வீட்டில்– வருணுக்குத் தனிமையே கொடுமையாய்...! சொல்லாமலே தன் இதயத்தை சுமந்து சென்றவள், இன்று சொல்லாலேயே அடித்த மாயம் புரியவில்லை. அவன் மனம் பெரும் ரணமாகி இருந்தது.

ஒரு பெண்ணுக்காகத்தான் இவ்வளவு தவிப்போமென்று முன்பு யாராவது கூறி இருந்தால், அன்று வருண் சிரித்திருப்பான்.

ஆனால், இன்று அமைதியின்றி தத்தளித்துத் தவிக்கிறான்.

எங்கோ கார் வரும் ஓசை கேட்டது.

மனதின் எதிர்பார்ப்பால் அது போன்ற பிரமை தருகிறதோ என்று தோன்றியது வருணுக்கு!

கட்டிலில், தலைக்குக் கீழ் கை கோர்த்தபடிப் படுத்திருந்தவன், யோசனையுடன் விட்டத்தில் பார்வையைப் பதித்தான்.

அங்கே வந்து இறங்கிய மதுவையும், ராஜசேகரையும் வேலையாட்கள் வரவேற்றனர்.

வருண் முன்னறையில் இருப்பதாகக் கூறிவிட்டு, இரவு உணவைத் தயார் செய்வதற்காக உள்ளே சென்றார், சமையல்காரர்.



மது, தந்தையிடம் திரும்பினாள்.

"அப்பா... நானே போய் வருணைப் பார்த்துப் பேசுறேன். நான் செஞ்ச தப்பை என்னால்தான் சரிசெய்ய முடியும். நீங்க ஓய்வெடுத்துக்குங்க"

கண்கள் கலங்க அவள் கூறவும், அவளுடைய கையை ஆதரவாகப் பிடித்து வாழ்த்தினார், ராஜசேகர்.

வருணுடைய அறைக் கதவைத் திறந்துகொண்டு, மெதுவாக உள்ளே சென்றாள், மது.

கதவு திறந்தவுடன், அவளைப் பார்த்தவன் திடுக்கிட்டான். மறுகணமே– பார்வையைத் திருப்பினான், வருண்.

எங்கு திரும்பினாலும் மதுவின் உருவமே தெரிவதுபோலத் தோன்றவும், அதுவும் கனவென்று எண்ணி தன் கண்களை மூடிக்கொண்டான்.

மதுவின் வயிறில் ஆயிரம் பயப்பூச்சிகள் படபடப்பதாய்!

தன் மேல், எவ்வளவு வெறுப்பு இருந்தால், தன்னைக் கண்ட உடனே இப்படி முகம் திருப்பிக்கொள்வானேன்?

நினைக்கையில் மனம் கசந்தது.

அவன் மனதில் இருந்த காதலை தான் கொன்று விட்டோமோ... அதற்கு மறுபடியும் உயிர்வருமா என்ற அச்சம், உயிரை உலுக்கியது.

அவனருகில் சென்று அமர்ந்தாள். அவன் கையை எடுத்துத் தன் கைகளுக்குள் வைத்துக்கொண்டாள்.

அவளின் தொடுகையை உணர்ந்து திரும்பியவனின் விழிகளில் இருந்த தீவிரம், அவள் உள்ளத்தை அசைத்துப்பார்த்தது.

அவள் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு நிமிர்ந்தாள். "வருண்! மன்னிப்புங்கிற வார்த்தை, எனக்கு ரொம்ப அதிகம் தான். ஆனா, நான் சொல்றதைக் கேட்டப்புறம், நீங்க என்னை மன்னிப்பீங்க என்ற நம்பிக்கையில்தான் இங்கே வந்திருக்கேன். என்னைப் புரிஞ்சுக்கங்க வருண்" என்றாள், கண்ணீருடன்.

அவளிடமிருந்து கையை விடுவித்துக்கொண்டு எழுந்தவன் ஜன்னலருகில் சென்று நின்றான். சொல்லமுடியாத, விரக்தியுடன் வெளியே பார்க்க ஆரம்பித்தான்.

மெல்ல எழுந்தாள், மது.

"எனக்கு மன்னிப்பு இல்லைன்னாலும், என் பக்கத்து நியாயத்தையாவது கேட்பீங்களா, வருண்...?" கெஞ்சலாகக்

கேட்டும் அவனிடம் அசைவே இல்லை.

தானே ராகினியின் வீட்டுக்குச் சென்றது முதல், நடந்தது எல்லாவற்றையும் விளக்கமாகக் கூற ஆரம்பித்தாள்.

"நான் ராகினி பேச்சைக் கேட்டு உங்களை தப்பா நினைச்சிருக்கக்கூடாது. நான் பண்ணினது பெரிய தப்புதான்... என்னை மன்னிச்சிட்டேன்னு சொல்லுங்க, வருண்!" கெஞ்சலாக வந்தது, மதுவின் குரல்.

அப்போதும் அவனிடம் எந்த சலனமும் இல்லை. "வருண்! நான் உங்களை விரும்புறது சத்தியமான உண்மை...! நீங்க இல்லாம என்னால வாழமுடியாது... உங்களை யாருக்கும் விட்டுத்தரவும் முடியாது...!"

அவனது மவுனம் தொடரவே–

"இன்னும் என்னை நிரூபிக்கிறதுக்கு, என்ன செய்யுறதுன்னு எனக்கு சத்தியமா புரியலை, வருண்! ஆனா, இப்ப சொல்றேன்! ஒரு புதையலா... வரமா எனக்குக் கிடைச்ச என் அப்பாவைவிட நான் உங்களை அதிகமா நேசிக்கிறேன்னா... அப்பவாவது நம்புவீங்களா?" என்றபோது, அவனிடம் அசைவு தெரிந்தது. அதை உணர்ந்து, ஆர்வமாக நிமிர்ந்து பார்த்தாள், மது.

ஒரு வேக மூச்சுடன் திரும்பிய வருணின் பார்வை, கூர்மையுடன் அவள் மேல் படிந்தது.

இதழ்களில் பெரிதான முறுவலோடு, அவள் புறம் தன் வலக்கையை நீட்டினான்... 'என்னிடம் வருவாயா' என்ற பாவனையுடன்!

'நீ வேண்டும்... நீ மட்டுமே வேண்டும்' என்ற தவிப்பு. அதில் தெரிந்தது.

"மதூ...!" அவன் உதடுகள், காதலோடு அவள் பெயரை உச்சரித்தன.

மறுநொடி–

அவன் மார்பில் மின்னலென சென்று தஞ்சம் புகுந்தாள், மது.

இருவருமே மெய்மறந்த நிலையில்– வெகுநேரம் அசையவே இல்லை. மதுவின் விழிகள், ஆனந்த அருவிகள் ஆகின.

மெதுவாக விலகிய மதுவின் கண்களைத் துடைத்தான், வருண்.

பிறகு, அவளை விட மனமின்றித் தன்னுடனே அணைத்து, அவளுடைய உச்சந்தலையின் மேல், தன் கன்னத்தை இதமாகப் பதித்துக்கொண்டான்.



சின்ன மென் பஞ்சு மேகம் ஒன்று பூமிக்கு வந்து, தன் கைகளுக்குள் அடங்கியதுபோல் சிலிர்த்தது, வருணுக்கு!

அவனுக்குள், பெரும் சலனத்தை ஏற்படுத்தி இருந்தாள், மது. அவன் கண்களில், 'அவள் தனக்கு மட்டுமே உரியவள்' என்ற கர்வம் தெரிந்தது. 'அடுத்த பிறவியிலும் இவளே என் இணையாக, துணையாக வேண்டும்' என்ற தாபம், உடல் முழுவதும் விரவிப் பரவியது!

கண்களில் காதலுடன் நிமிர்ந்தாள், மது.

"என்னை மன்னிச்சிட்டீங்களா, வருண்?" என்றாள்.

அவளுடைய மூக்கைப் பிடித்து, செல்லமாக நிமிண்டினான், வருண்.

"மது...! என் மேல சாஞ்சுகிட்டு, இப்படி நீ கொஞ்சிக் கேட்டா, எப்படி என்னால மன்னிக்காம இருக்கமுடியும்... சொல்லு?" என்றான், குறும்புடன்.

"நிஜம்மா...?" என்று சிணுங்கலுடன் கேட்டு, அவன் மேல் இறுக்கமாக ஒட்டிக்கொண்டாள்.

"ம்...!" என்று யோசித்த வருணின் விழிகளில் குவிர்ச்சி மின்னியது.

"நான் சொல்லுறதை நீ உடனே செஞ்சா, உன்னை மன்னிக்க முயற்சி பண்ணுறேன்" என்றான், குறுகுறுத்த பார்வையுடன்.

விழிகளில் என்ன என்ற கேள்வியுடன் காட்சி தந்த மதுவின் காதுகளில் மெதுவாகக் கிசுகிசுத்தான், வருண்.

முகம் சிவந்து நிமிர்ந்த மது, தன் நுனிக்கால்களைத் தரையில் பதித்து உயர்ந்து, அவன் இதழ்களில் மென்மையாய் தன் இதழ்களைப் பதித்தாள்.

அடுத்த கணம்– ஒருவித ஆளுமையுடன் மதுவைத் தனக்குக் கிடைத்த அரிய தேவதை போல, மனதால் மென்மையாக... உடலால் வன்மையாக அணைத்துக்கொண்டான், வருண்.

காதல், இருவரின் மனதிலும் அலை அலையாய்ப் பரவி, பெருநுரையாய்த் ததும்பி வழிந்தோடியது.

வருணின் சுவாசமாய்... உயிராய் அவனுள் கலந்தாள், மது.

**(முடிந்தது)**

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: ர. பாஸ்கரன் 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.